இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 196 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 27 சனிக்கிழமை 10.06.2017

யாழ்ப்பாணம்.



## பிரி. தேர்தலில் ரணில் வெற்றி

கொழும்பு, ஜூன் 10
பிரிட்டனில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ரணில் ஜெயவர்த்தன மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.
ஹம்ப்செயர் வடகிழக்குத் தொகுதியில், ஆளும் கொன்சர்வேட்டிவ் >> 06

## இனவாதச் செயல்களுடன் எனக்குத் தொடர்பில்லை

அடித்துக் கூறுகிறார் கோத்தா



கொழும்பு, ஜூன் 10
முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக் காலமாக மேற்கொள்ளப்படும் இனவாதச் செயற்பாடுகளுடன் தனக்கு எந்தவித தொடர்பும் இல்லையென முன்னாள் >> 25

### இலங்கையிலும் ஐ.எஸ்.

## அடிப்படைவாதத்தை இங்கு அடியோடு நசுக்கவேண்டும்

அமைச்சர் சம்பிக்க வலியுறுத்தல்



கொழும்பு, ஜூன் 10
மேற்கு நாடுகளில் இடம்பெறும் பயங்கரவாத நகர்வுகள் ஆசியாவையும் இலக்குவைத்துச் செயற்படுகின்றன. இலங்கையிலும் ஐ.எஸ். அமைப்பின் அச்சுறுத்தல் உள்ளது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.
உலகம் முழுவதும் இஸ்லாமிய பயங்கரவாதம் பரப்பப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் செயற்படும் அடிப்படைவாதத்தை முழுமையாக >> 06

## ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை குறித்து விவாதம்

ஜெனிவா, ஜூன் 10
ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில், இலங்கை குறித்த அறிக்கை ஒன்று தொடர்பாக நாளை மறுதினம் திங்கட்கிழமை விவாதிக்கப்படவுள்ளது.
நீதிபதிகள், மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர், இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணம் தொடர்பாக அங்கு சமர்ப்பிக்கப்படவுள்ள >> 25



## திரேசா மே ஆட்சியமைக்க ராணி எலிசபெத் அனுமதி

தனிப்பெரும்பான்மை கிடைக்காததால் ஜனநாயக ஒன்றியக் கட்சியுடன் இணைந்து

லண்டன், ஜூன் 10
தனிப் பெரும்பான்மை கிடைக்காததை அடுத்து, ஜனநாயக ஒன்றியக் கட்சியுடன் இணைந்து பிரிட்டனில் ஆட்சியமைக்க ராணி எலிசபத் கென்சர்வேடிவ் கட்சிக்கு அனுமதி வழங்கியுள்ளார்.
பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் >> 25

# இடர்களின்போது மக்களைக் காக்க மாகாணங்களுக்கு அதிகாரம் அவசியம்

சபையில் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 10
மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் ஊடாகவே இடர்கள் ஏற்படும்போது உரிய வகையில் பொறிமுறைகளை முன்னெடுக்க முடியும்.
இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.
வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி மக்களுக்கு அரசு உரிய நிவாரணங்களை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.
நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடர் தொடர்பில் ஜே.வி.பியினால் நாடாளுமன்றில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மத்திய அரசின் நிர்வாகப் பொறிமுறையானது கொழும்பை மையப்படுத்திக் காணப்படுவதால் பிரதேச மட்டங்களில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன.
எனவே, இந்த நிலைமை மாறி >> 25

## இடர்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க சிறப்புப் பொறிமுறை

சபையில் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 10
இடர் ஏற்படுவதற்கு முன்னர் அது பற்றி அறிந்து மக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுப்பதற்குரிய சிறப்புப் பொறிமுறையை அரசு விரைந்து உருவாக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் >> 25

## புலி உறுப்பினராம் வைகோ திருப்பியனுப்பிய மலேசியா



கோலாலம்பூர், ஜூன் 10
விடுதலைப்புலிகள் அமைப்பைச் சார்ந்தவர் எனத் தெரிவித்து மலேசியாவுக்குள் நுழைய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுக்கு அந்த நாட்டு அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.
மலேசியாவின் பினாங்கு மாநிலத் துணை முதல்வர் பேராசிரியர் இராமசாமியின் மகள் திருமண >> 25



எப்பதான் அவர் உண்மையை ஒப்புக்கொண்டவர்

### நீதிமன்ற உத்தரவை மீறிச் செயற்படும்

## தெற்கு மீனவரைக் கைது செய்யாது அவர்களிடமே கடலுணவு பெறும் பொலிஸாரால் நல்லுறவு வருமா?

பூஜித் முன்பாக சாள்ஸ் எம்.பி கேள்வி

வவுனியா, ஜூன் 10
நீதிமன்றத் தடை உத்தரவையும் மீறி கடற்றொழில் புரியும் மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸார், தமக்கான கடலுணவுகளை சட்டவிரோத மீன்பிடியாளர்களிடமே கொள்வனவு >> 25

## காங்கேசன்துறை கடற்பரப்பில் மிதந்த பையில் ஹெரோயின்!

கைப்பற்றினர் கடற்படையினர்

யாழ்ப்பாணம், ஜூன் 10
காங்கேசன்துறை கடற் பரப்பில் சந்தேகத்துக்கிடமாக மிதந்த பொதியில் இருந்து 5.6 கிலோ ஹெரோயின் நேற்று மீட்கப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
பாடசாலைப் பை ஒன்றில் வைக்கப்பட்டு நீர் புகாதவாறு பொலித்தீனால் ஹெரோயின் பொதி செய்யப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
ரோந்து நடவடிக்கையில் சென்ற கடற்படையினர் பி.ப. 2.30 மணியளவில் பொதியைக் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் நேற்று மாலை >> 06






## பொதுநலவாயச் செயலருக்கு இலங்கை வருமாறு அழைப்பு

கொழும்பு, ஜூன் 10
இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பற்றிசியா ஸ்கொட்லேண்டுக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். >> 25

## டிராக்டர் பெட்டியின் கீழ் நசியுண்டு குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

முல்லைத்தீவு, ஜூன் 10
மணல் ஏற்றிய உழவு இயந்திர பெட்டியின் கீழ் நசியுண்டு குடும்பத்தலைவர் பரிதாபமாக உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் முல்லைத்தீவு - மாங்குளம், பனிச்சங்குளம் பகுதியில் நேற்று [illegible] >> 24

## மக்களின் வாழ்விடங்களில் வெடிபொருள்கள் பல மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 10
நெடுங்கேணி, நாவலர் வீதியில் தனியார் காணியொன்றிலுள்ள கிணற்றில் இருந்து 31 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
கிணற்றைத் துப்புரவு செய்த போதே அவை கண்டுபிடிக்கப்பட்டு, நெடுங்கேணிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.
சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அவற்றை அகற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர். >> 23

## மைத்திரியை வெறுப்பதற்கு ரணிலே காரணமாம்

கொழும்பு, ஜூன் 10
நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 106 ஆசனங்களைப் பெற்றதும் அந்தக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு அரச தலைவர் அனுமதித் >> 25

## காணியை விடுவிக்குமாறு கோரி தளபதிக்கு நினைவூட்டல் கடிதம்

அனுப்பப்படும் என்கிறார் முல்லைத்தீவு மாவட்டச் செயலர்

முல்லைத்தீவு, ஜுன். 10
புதுக்குடியிருப்புப் பிரதேச செய லகத்துக்கு முன்னால் இராணுவம் சுவீகரித்துள்ள >> 25

## விசாரணை அறிக்கை சாதாரணமான விடயம்

வடக்கு கல்வி அமைச்சர் கூறுகிறார்

வவுனியா, ஜூன் 10
வட மாகாண அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் வெளியி >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 நாள்களில் செலவாகிய ரூ. 40 மில்லியனால் வடமாகாணத்தில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டதா?

*வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.தியாகேந்திரன், எஸ்.பரமராஜா மற்றும் ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கையின் மூன்றாம் பகுதி*

### அதிபர் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் அமைச்சர் குருகுலராசா

"நீங்கள்தான் குறிப்பிடுகின்றீர்கள். சம்பந்தப்பட்ட மாணவியிடம் இருந்து எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை" எனக் கூறியுள்ளார்.
சம்பந்தப்பட்ட மாணவியிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கவில்லை என்ற நிலைப்பாட்டை அமைச்சர் எடுத்த வேளையிலும் அதிபருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு அவர் 1AB பாடசாலையில் இருந்து தரம் இறக்கப்பட்டுள்ளார் என்ற அமைச்சரின் கூற்று இந்தச் சம்பவத்தை நிரூபிக்கின்றது.
இவ்வாறு அந்த அதிபருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது. அவர் தரம் இறக்கப்பட்டார் என்பவற்றுக்கு எதுவித ஆதாரமும் விசாரணைக்குழுவிடம்முன்வைக்கப்படவில்லை. எனினும் அமைச்சரின் பதிலில் இருந்து குறித்த சம்பவம் உண்மை என்பதும் இது குறித்து அமைச்சர் அறிந்திருந்தார் என்பது நிரூபணமாகின்றது.

### கல்வித் துறையையே தலை குனியவைக்கும் செயல் மூடிமறைக்கப்பட்டது

மேலும் அமைச்சரிடம் குறித்த அதிபருடன் என்ன தொடர்பு எனக் கேட்கப்பட்ட வேளையில் தாம் கல்விப் பணிப்பாளராக இருந்த வேளையில் அந்த அதிபர் சேவைக்கால ஆலோசகராக இருந்தார் என்றும் அவர் தன்னுடைய நண்பனில்லை என்றும் கூறியிருந்தார். எனினும் இந்தச் சம்பவத்தை நன்கு அறிந்திருந்தும் குறித்த அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளரை அல்லது செயலாளரை கேட்க அமைச்சர் தவறியுள்ளார்.
கல்வித்துறையையே தலை குனிய வைக்கும் இந்தச் செயல், கல்வி அமைச்சர் உட்பட கல்வி அதிகாரிகளால் மூடிமறைக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். இது ஓர் தவறான செயலாகும். குறித்த அதிபர் மாணவியின் மீது புரிந்த பாலியல் வன்முறை நடவடிக்கையானது ஓர் குற்றவியல் நடவடிக்கையாக அமைகின்றது.
இந்தச் சம்பவத்தை மூடி மறைப்பதில் அமைச்சருக்கு பங்கு இருந்துள்ளது என்பது நிரூபணமாகின்றது. எனவே இது ஓர் அதிகார முறைகேடு என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது.

### ஆசிரியர் மீதான பழிவாங்கல்; முதல்வர் விசாரிக்கவேண்டும்

3.5 ஆ) குறித்த அதிபர் பாடசாலை மாணவியுடன் தகாத முறையில் நடந்துகொள்ள முயன்ற விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர் வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேளுக்குக் கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். அதற்காக அந்த ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேளால் இடமாற்றம் செய்யப்பட்டமை.
இந்த விடயம் குறித்து எதுவித நேரடி சாட்சியமும்விசாரணைக்குழுவிடம்முன்வைக்கப்படவில்லை. எனினும் கல்வி அமைச்சரிடம் இது குறித்து கேட்கப்பட்ட வேளையில், "குறித்த ஆசிரியர் தமது விருப்பப்படி இடமாற்றம் பெற்றுச் சென்றதாகவும் இந்த முறைப்பாடு தமக்கு வரவில்லை என்றும் வந்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பேன்"என்றும்கூறியிருந்தார்.
சம்பந்தப்பட்ட ஆசிரியையின் சாட்சியம் எம்முன் நெறிப்படுத்தப்படாமையால் இந்தக் குற்றச்சாட்டை விசாரணைக்குழு நிராகரிக்கின்றது. அதேவேளையில் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் முறையான விசாரணை ஒன்றை நடத்துமாறு கல்வி அதிகாரிகளைப் பணிக்குமாறு முதலமைச்சரை இந்த விசாரணைக் குழு கேட்டுக்கொள்கின்றது.

### கல்விப் பணிப்பாளரின் நடத்தை தொடர்பில் விசாரணை அவசியம்

3.5) குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர், அந்த ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையில் கொச்சைப்படுத்தியமை தொடர்பாக அனந்தி சசிதரன், கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.
இது தொடர்பில் விசாரணைக் குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டில் குறித்த கல்விப் பணிப்பாளர் விசாரணைக்கு என்று சென்ற வேளையில், அந்த முறைப்பாட்டைச் செய்த வகுப்பாசிரியையிடமிருந்து தமக்கு ஒரு காதல் கடிதம் வந்துள்ளது என்று பகிரங்கமாகக் கூறினார் என்பதாகும்.
இதிலிருந்து கல்வி அமைச்சரிடம் விசாரணைக் குழு விசாரித்த வேளையில், "தமக்கு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றும் இல்லை என்றும் அனந்தி சசிதரன் சொன்னது தமக்குத் தெரியாது எனவும் கூறியிருந்தார்.
இங்கு சம்பந்தப்பட்ட ஆசிரியையின் சாட்சியம் விசாரணைக் குழு முன்னிலையில் நெறிப்படுத்தப்படாமையால் இந்தக் குற்றச்சாட்டை இந்த விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.
அதேவேளையில் ஆசிரியையினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பெரிய தன்மை காரணமாக வலயக் கல்விப் பணிப்பாளரின் இந்த நடத்தை குறித்து ஓர் முறையான விசாரணை நடத்துமாறு கல்வி அதிகாரிகளைப் பணிக்குமாறு முதலமைச்சரை இந்த விசாரணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.

### அதிபருக்கு எதிராக குற்றவியல் வழக்கு

மேலும் கிளிநொச்சி, பாரதி பாடசாலையில் 2015ஆம் ஆண்டளவில் மாணவி ஒருவருடன் அப்போதைய அதிபர் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பிலும் இந்த விடயத்தை வலயக் கல்விப்பணிப்பாளருக்குத் தெரியப்படுத்திய ஆசிரியை இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்தும் குறித்த ஆசிரியை இந்த முறைப்பாட்டைச் செய்ததைமயால் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய முருகவேளினால் ஏளனம் செய்யப்பட்டமை தொடர்பிலும் குற்றவியல் நடவடிக்கைகள் சட்டத்துக்கு அமைய விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை அவர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டும் எனவும் இந்த விசாரணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.

### அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டை செயலாளரின் சாட்சியம் நிரூபிக்கின்றது

3.6) கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை
இந்த விடயம் குறித்து கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில், "கல்வி அமைச்சில் விண்ணப்பம் கோரி நேர்முகத்தேர்வு நடத்தித்தான் நியமனம் செய்தார்கள் என்றும் தாம் அதற்கு எந்தவித அழுத்தமும் கொடுக்கவில்லை" என்றும் கூறியிருந்தார்.
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தமது சாட்சியத்தில், "2015ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 80 அதிபர்களுக்கு தரம் 1 பதவியுயர்வு கொழும்புக் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டது. அதில் வெற்றிடமாக இருந்த பாடசாலைகளுக்கு விண்ணப்பம் கோரி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. அப்போது கிளி/புனித திரேசா பெண்கள் பாடசாலையில் இருந்த அதிபர் வேறு பாடசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டதால் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு அதிபர் வெற்றிடம் ஏற்பட்டது. அதற்கு வலிகாமம் கல்வி வலயத்தில் சங்கானை கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்த வகுப்பு 1அதிபரை அந்த பாடசாலைக்கு நியமிக்குமாறு கல்வி அமைச்சர் கூறியிருந்தார்" என்று தெரிவித்தார்.
கல்வி அமைச்சின் செயலாளரின் சாட்சியம் கிளி/ புனித திரேசா பெண்கள் பாடசாலை தொடர்பில் அமைச்சர் மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்கின்றது. அங்கு கல்வி அமைச்சரின் அழுத்தம் காரணமாகவே அந்த நியமனம் நடைபெற்றது என்ற முடிவுக்கு இந்த விசாரணைக்குழு வருகின்றது.
கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் தொடர்பில் எந்தவித சாட்சியமும் எம்முன் வைக்கப்படாத நிலையில் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் தொடர்பான குற்றச்சாட்டு நிராகரிக்கப்படுகின்றது.

### நிதி வீண்விரயம் குறித்து செயலாளரின் சாட்சியம் இது

3.7) வடக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண்விரயம் செய்தமை
இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் சாட்சியமளித்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், "ஆசிரியர் மாநாடு 12 வலயங்களில் நடத்தப்பட்டது. 2015ஆம் ஆண்டு PSDG நிதியில் ரூபா 80 மில்லியன் ஒதுக்கி ஆசிரியர் மாநாட்டையும் அதிபர் மாநாட்டையும் கட்டாயம் நடத்தும்படி கூறப்பட்டது. நாங்கள் ரூபா 80 மில்லியனையும் இதற்குப் பயன்படுத்த முடியாது எனக்கூறி ரூபா 40 மில்லியனை இந்தத் தேவைக்கும் மிகுதி ரூபா 40 மில்லியனை ஆசிரியர்களுக்கான தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் வழங்கினோம்.
அதன்படி ரூபா 40 மில்லியனில் ரூபா 24 மில்லியனை ரூபா 2 மில்லியன்படி 12 வலங்களுக்கும் மிகுதி ரூபா 16 மில்லியனை அதிபர் மாநாட்டுக்கும் ஒதுக்கி வழங்கினோம். ஒவ்வொரு வலயமும் தமக்கு வழங்கிய நிதிக்கேற்றவாறு ஒதுக்கி செலவு செய்தார்கள்" என்று கூறியிருந்தார்.
மேலும் அவர் தமது சாட்சியத்தில், "நாங்கள் ஒவ்வொரு வலயத்துக்கும் நிதியைக் கொடுத்து அவர்களே விழாவுக்கான திட்டங்களை மேற்கொண்டு செய்தார்கள். இந்த மாநாட்டின் நோக்கம் எல்லா ஆசிரியர்களும் ஒன்றுகூடி தங்களது திறமைகளை வெளிப்படுத்துவது. அவர்களுக்கான பாடவிதானங்களுடன் தொடர்பான சுற்றறிக்கைகளுடனான ஆய்வுகள் ஆக்கங்கள் பற்றிய நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன"என்றும் கூறியிருந்தார்.
இவரது சாட்சியத்தில் இருந்து ஆசிரியர் மாநாட்டுக்கென வழங்கப்பட்ட ரூபா 80 மில்லியன் ரூபா 40 மில்லியனாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் குறைக்கப்பட்டது என்பது தெரியவருகின்றது. மேலும் ஆசிரியர் மாநாட்டுக்கென இந்த நிதி வழங்கப்பட்ட போதிலும் ஒவ்வொரு வலயத்துக்கும் நிதியை வழங்கிய பின் அவர்களே விழாவுக்கான திட்டங்களை மேற்கொண்டு செய்தார்கள் என்றும் கூறியிருந்தார்.

### நிதி விரயம் குறித்து கல்வி அமைச்சரின் சாட்சியம் இது

இந்த விடயம் சாட்சியமளித்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர், "ஆசிரியர்கள், அதிபர்கள் மாநாட்டுக்கென நிதி ஆணைக்குழுவால் ரூபா 40 மில்லியன் வழங்கப்பட்டது. எம்மால் இந்த மாநாடு நடத்தப்படவில்லை. ஒவ்வொரு கல்வி வலயமும் கையேட்டின்படி இதில் சொல்லப்பட்ட விடயங்களை நடத்தினார்கள். அவர்களின் ஆக்கங்களைக் கொண்டு சஞ்சிகைகள் வெளியிட்டார்கள். ஆசிரியர்களுக்கு உள்ள சந்தேகங்கள் தொடர்பாக ஆய்வுகள் நடத்தினார்கள். கல்வி வளவாளர்களைக் கொண்டு விரிவுரை நடத்தினார்கள். ஒவ்வொரு கல்வி வலயத்திலும் 2 நாள்கள் இது நடைபெற்றது. கல்விக் கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஆசிரியர்களின் ஆற்றலை வெளிப்படுத்துகின்ற நிகழ்வுகள்தான் நடைபெற்றன. இது எவ்வாறு நடத்த வேண்டும் என நிதி ஆணைக்குழு ஒரு பிரமாணத்தை அனுப்பி இருக்கின்றது. அதில் இருந்து விலகிச் செல்ல முடியாது. அந்த வகையில்தான் செயற்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஆசிரியர்கள் மத்தியில் எவ்வாறு வகுப்பறையில் கற்பிக்க வேண்டும் என்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது" என்று கூறியிருந்தார்.
மேலும் அமைச்சர் தமது சாட்சியத்தில், "இந்த மாநாட்டில் என்ன நடைபெற்றது என்பதை தாம் பார்க்கவில்லை என்றும் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி வலயங்களில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களைப் பார்ப்பார்கள் என்றும் 12 வலயங்களில் பதினையாயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்றும் கூறியிருந்தார்.
மேலும் அமைச்சரிடம் ஆசிரியர்களின் திறன் விருத்திக்காக வழங்கப்பட்ட அந்த நிதியை ஒருநாளில் செலவு செய்யாமல் அவர்களின் கல்வி கற்பிப்பதற்கான அறிவை வளர்ப்பதற்கு பயன்படுத்தலாம் எனக்கூறப்பட்ட போது, அந்த நிதி இதற்காகவேதான் வழங்கப்பட்டது எனக் கூறியிருந்தார்.

### நிதிப் பயன்பாட்டில் கல்வி அமைச்சர் பொறுப்பற்ற செயற்பாடு

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரின் சாட்சியத்தையும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் சாட்சியத்தையும் ஒப்பிட்டு நோக்கும் இடத்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் பொறுப்பற்ற செயற்பாடு மிகத் தெளிவாக வெளிப்படுகின்றது. கல்வி அமைச்சின் செயலாளர், ரூபா 80 மில்லியன் வழங்கப்பட்டு பின் அது தங்களால் ரூபா 40 மில்லியனாகக் குறைக்கப்பட்டது எனக்கூறிய வேளையில், அமைச்சர் ரூபா 40 மில்லியன் மட்டுமே தரப்பட்டதாகக் கூறியுள்ளார்.
நிதி ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே இந்த நிதி செலவு செய்யப்பட்டது என்றும் நிதி ஆணைக்குழுவின் பிரமாணத்தை மீற முடியாது என்றும் கல்வி அமைச்சர் தெரிவிக்கும் அதே வேளை அமைச்சின் செயலாளர் வழங்கப்பட்ட ரூபா 80 மில்லியன் நிதியில் ரூபா 40 மில்லியன் வேறு தேவைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.
சம்பந்தப்பட்ட அமைச்சர் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எதனையும் விசாரணைக்குழு முன் சமர்ப்பிக்கவில்லை. அவ்வாறு செய்யுமாறு தமது அமைச்சின் செயலாளரையும் அவர் பணிக்கவில்லை. நிதி ஆணைக்குழுவின் இன் அறிவுறுத்தலைச் சமர்ப்பிக்காது அமைச்சர் சாட்சியமளித்துள்ளார். மேலும் ஆசிரியர் மாநாட்டின் போது சஞ்சிகைகள் வெளியிடப்பட்டதாகக் கூறிய போதிலும் அவை விசாரணைக்குழு முன் சமர்ப்பிக்கப்படவில்லை.
கல்வி வளர்ச்சிக்கென ஆசிரியர் அதிபர் மாநாடு நடத்த நிதி ஆணைக்குழுவால் தரப்பட்ட ரூபா 80 மில்லியன் அமைச்சரின் அறிவுக்கு அப்பாற்பட்ட வகையில் ரூபா 40 மில்லியனாகச் செயலாளரினால் குறைக்கப்பட்டு அந்தத் தொகையும் 2 நாள்களில் செலவு செய்யப்பட்டுவிட்டது. இரண்டு நாள்களில் ரூபா 40 மில்லியனை செலவு செய்த இந்தச் செயற்பாடு வடக்கு மாகாணக் கல்வி வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

### கல்வி வளர்ச்சி குறித்து திறனாய்வு அவசியம்

அத்துடன் மிகுதி ரூபா 40 மில்லியனுக்கு ஆசிரியர்களுக்குத் தேவையான தளபாடங்கள் பெறப்பட்டதாக அமைச்சு செயலாளர் கூறியுள்ளார். அந்தத் தளபாடங்கள் பற்றிய விவரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. இன்றும்கூட எமது பாடசாலைகளில் சுகாதாரத்துக்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய கரும்பலகையும் வெண்கட்டிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் காணியில் எந்தப் பயிரையும் பயிரிடும் உரிமை வடக்கு மாகாண விவசாயிகளுக்குண்டு

பாவிக்கப்படுகின்றன. இந்த நிலையில் நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ரூபா 80 மில்லியனில் ரூபா 40 மில்லியன் 2 நாள்களில் செலவு செய்யப்பட மிகுதி ரூபா 40 மில்லியனுக்குத் தகுந்த விளக்கம் எமக்குத் தரப்படவில்லை.

இந்த ரூபா 40 மில்லியனும் 12 கல்வி வலயங்களில் 2 நாள்களில் செலவு செய்யப்பட்டதன் மூலம் வடமாகாணக் கல்வி வளர்ச்சியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா? என்ற விடயம் திறனாய்வுக்கு உட்படுத்த வேண்டிய ஒன்றாகும். இந்த நிதி ரூபா 80 மில்லியனையும் உபயோகித்து ஆசிரியர்கள் அதிபர்களின் செயற்றிறனை அதிகரிக்கும் கொள்கை ரீதியாகத் திட்டமிட்டுச் செயற்பட்டிருக்க முடியும். அவ்வாறான திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடத்திலுள்ள அறிவு அதனைக் கற்பிக்கும் முறை பற்றிய அறிவு என்பன தொடர்ச்சியாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. எனவே இந்த நிதியைக் கொண்டு ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடத்திலான அறிவு அதனைப் போதிக்கும் ஆற்றல் என்பவற்றை வளர்க்கக் கூடிய பயிற்சிகளை அந்தத் துறையில் அறிவும் அனுபவமும் உடையவர்கள் மூலமாக வழங்கி கல்வித்துறையை மேம்படுத்த இந்த நிதியைத் திட்டமிட்டுப் பயன்படுத்தியிருக்க முடியும்.

### நிதி வீண் விரயம் நடந்தது உண்மையே

வடக்கு மாகாண மாணவர்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய ஒரே வளமாக அமைவது கல்வியே ஆகும். வடக்கு மாகாணம் ஒரு காலத்தில் கல்வியில் மிக முன்னேறிய நிலையில் இருந்தது. இந்தக் கல்விவளம் போர்க்காலத்தில் தொடர்ச்சியாகச் சீரழிக்கப்பட்டுப் பூச்சியம் என்ற நிலைக்கு வந்தது. ஆயினும் தற்போது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணர்கள் ஆகியோரது அயராத உழைப்பால் இந்த மாகாணத்தில் கல்வி மீண்டும் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் 2015ஆம் ஆண்டு நிதி ஆணைக்குழுவின் அறிவுறுத்தலால் வழங்கப்பட்ட ரூபா 80 மில்லியனும் உரிய வகையில் தகுந்த கொள்கை அடிப்படையில் மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் தகுதியை உயர்த்துவதற்குரிய மேற்படிப்புக்கள், பயிற்சிகள் போன்றவற்றிலும் கற்பிக்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டிருப்பின் அது மிகவும் வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கும். இதற்குப் பதிலாக இந்தப் பணத்தில் ரூபா 40 மில்லியன் 2 நாள்களில் செலவு செய்யப்பட்டதும் மிகுதி ரூபா 40 மில்லியன் ஆசிரியர்களின் தளபாட கொள்வனவுக்குப் பயன்படுத்தியதாகக்கூறப்பட்டமையும் மிகவும் கவலைக்குரிய வகையில் இந்தப் பணம் வீண் விரயம் செய்யப்பட்டதை நிரூபிக்கின்றது.

### கணக்காய்வு அவசியம்

எனவே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு இந்த விசாரணைக்குழு வருகின்றது. மேலும் இந்தத் தொகை ரூபா 80 மில்லியனும் எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பது குறித்து முழுமையான கணக்காய்வு செய்யப்பட்டு தவறு இழைத்ததாகக் காணப்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்த விசாரணைக்குழு பரிந்துரைக்கின்றது.

வடமாகாணத்தில் வாழும் மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பை தம் கரங்களில் ஏந்தியுள்ளவர்கள் கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை வகுக்கும் வேளையில் இந்த மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்த துன்ப துயரங்கள் கடந்து வந்த பாதை என்பவற்றை ஒரு தடவையாவது திரும்பிப்பார்க்க வேண்டும் என்றே இந்த விசாரணைக்குழு கருதுகின்றது.

### ஆளுநரால் நடத்தப்பட்ட வைக்க

3.8) மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னாள் அரச தலைவரின் வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந் தொகைப் பணத்தைச் செலவழித்தமை.

மேற்டி குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளித்த வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், "தமது அமைச்சின் செயலாளருக்கு மாகாண ஆளுநர் கூறியே இந்த விடயம் நடைபெற்றதாகக் கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கொள்கை அடிப்படையிலான முடிவு எதுவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரால் எடுக்கப்படாத நிலையில் மாகாண ஆளுநரால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்தும் செயலாளர் ஆளுநரின் கோரிக்கைப் படி செயற்பட்டமைக்கு அமைச்சர் பொறுப்புக்கூற வேண்டியதில்லை என இந்த விசாரணைக் குழு கருதுகின்றது.

3.9) கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேளின் சேவைக் காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையை இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையைத் தொடர்வதற்கு முயற்சிக்கின்றமை.

### வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தில் அமைச்சர் தலையிடுவது தவறு

இந்தக் குற்றச்சாட்டு குறித்து சாட்சியமளித்த கல்வி அமைச்சர், "வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதில்லை என்றும் சேவை மூப்பு அடிப்படையில் நியமனம் செய்வது என்றும் தற்போது தென்மராட்சி கல்விப் பணிப்பாளரை பதிற்கடமைக்கு நியமித்துள்ளோம் என்றும் சாட்சியமளித்தார். இது தவறன நிலைப்பாடாகும். இந்த நியமனங்களில் தலையிட அமைச்சருக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. அரசமைப்பின் பிரகாரம் மாகாண ஆளுநருக்கே இந்த அதிகாரம் உண்டு. அவர் யாருக்கு அந்த அதிகாரத்தை கையளித்துள்ளாரோ அவரே அரசியல் தலையீடு எதுவும் இன்றி அந்தக் கடமையைச் செய்ய வேண்டும்.

எனவே அமைச்சின் செயலாளர் அல்லது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இவர்களில் யாருக்கு இந்த அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளதோ அவர்கள் இந்த நியமனத்தைப் பொறுப்பேற்று அரசியல் தலையீடு எதுவுமின்றி தகுதி உடையவரை இந்தப் பதவிக்கு உடன் நியமிக்க வேண்டும் எனவும் வடமாகாண கல்வி அமைச்சர் இந்த நியமனமத்தில் தலையிடக்கூடாது எனவும் இந்த விசாரணைக்குழு பணிக்கின்றது. மேலும் இந்தக் குற்றச்சாட்டானது எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஒருவிடயம் தொடர்பான தாகையால் இந்தக் குற்றச்சாட்டை விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

### அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்

4.1) வவுனியா மாவட்டத்தில் மூங்கில், மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகித்து சுயதொழிலை முன்னெடுக்க வைக்கும் திட்டம் ஆகியவற்றை கையூட்டுப் பெறும் நோக்கத்துக்காக நிராகரித்தமை.

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களின் படி ஓர் விவசாயி தனது காணியில் வேறு சட்டங்களால் தடை செய்யப்பட்ட பயிர்களைத் தவிர, தான் விரும்பிய பயிரை பயிரிடும் உரிமை உண்டு. ஆனால் நீர்ப்பாசனச் சட்டத்தின் படி அரசால், மாகாண சபையால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன நீர்த் தேக்கங்களிலிருந்து குறிப்பிட்ட பயிருக்கு நீர் பெற வேண்டுமெனின், குறிப்பிட்ட தகுதி வாய்ந்த அரச, மாகாண உத்தியோகத்தர்களிடமிருந்து அனுமதியைப் பெற வேண்டுமென்ற கட்டுப்பாடு உள்ளது.

வடக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில் தரைக்கீழ் தரைமேல் உள்ள நீரை உபயோகித்தல், பயிர்ச்செய்கைக்கு பாவித்தல் என்பதை கட்டுப்படுத்தும், ஒழுங்குபடுத்தும் நியதிச்சட்டங்கள் [illegible] ளதாகத் தெரியவில்லை.

எனவே விவசாயி ஒருவர் தனது சட்டபூர்வ உரித்துடைய காணியில் மழை நீரையோ, நிலத்தடி நீரையோ, உபயோகித்து தனது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, உணவுக்காகவோ, வர்த்தக தேவைக்காக எந்தவித பயிர்களையோ மரப் பயிர்களையோ பயிரிடும் உரிமை அவர்களுக்கு உண்டு என்று விசாரணைக் குழு கருதுகின்றது.

மேற்படி கருதுகோளின் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டில் விடயங்களை தொடர்பாக விசாரணையின் போது முன்வைக்கபட்ட விடயங்களையும் அவற்றுக்குத் திணைக்கள உத்தியோகத்தர்களது விளக்க சாட்சியங்களையும் இறுதியில் அமைச்சரால் விசாரணைக்குழு வுக்கு அறிக்கப்பட்ட விளக்கங்களும் மேற்படி குற்றச் சாட்டுகள் விசாரணையின் பொழுது சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட முறையில் எண்பிக்கப்பட்டுள்ளனவா? என ஆராய்வோம்.

### முதலீட்டாளரை சந்திக்க அழைத்தமை அமைச்சர் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இந்திய முதலீட்டாளர் ஒருவராகிய ராம் என்பவர் மூங்கில் செய்கையில் விவசாயி களை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு முன்மொழிவு ஒன்றை முன்வைத்து நெடுங்கேணிப் பிரதேச செயலர் தலைமையில் கூட்டம் ஒன்றைக் கூட்டி திட்டத்தின் நன்மை தீமைகளை எடுத்துரைத்தார். இது வெளிநாட்டு முதலீடு என்ற காரணத்தால் மாகாண முதமைச்சரின் அனுமதிக்கு விண்ணப்பித்து முதலமைச்சரால் அந்த விண்ணப்பம் மாகாண விவசாய அமைச்சருக்கு முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் மாகாண விவசாய அமைச்சர் அந்தத் திட்டத்தை அனுமதிக்க மறுத்துவிட்டார். முதலீட்டாளர் மாகாண ஆளுநரிடம் அனுமதியைப் பெற்று திட்டத்தை அந்தப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தியுள்ளார்.

மாகாண விவசாய அமைச்சர் மூங்கில் வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை மறுத்ததோடு, குறிப்பிட்ட முதலீட்டாளரை வேண்டிய ஆவணங்களுடன் வந்து தன்னை சந்திக்கும்படி கேட்டுள்ளார். தன்னை வந்து சந்திக்கும்படி கோரியமை மாகாண விவசாய, கமநல சேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சரின் நடத்தை மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக விசாரணைக்குழு முன் விளக்கமளித்த அமைச்சர், "மூங்கிலை எரித்து மின்சாரம் பெறும், அதாவது அனல் மின் நிலையம் அமைப்பதை சுற்றுச்சூழல் அமைச்சர் என்ற ரீதியில் தான் அனுமதிக்க முடியாதென்றும் அவ்வாறெனில் காற்றாலை மின்சாரம் பெற மாகாண சபையுடன் ஒப்பந்தம் செய்தது போல ஒரு தொகைப் பணத்தை வருடாந்தம் CSRஇற்கு வழங்க வேண்டும்" எனவும் குறிப்பிட்டார். இது அவரது கருத்தில் உள்ள இரட்டைத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த விடயத்தில் விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் மாகாண சபியல் சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற சட்டபூர்வமற்ற நிலைப்பாட்டை வைத்துக்கொண்டு இந்த விடயங்களில் தலையிடுவதையும் விசாரணைக் குழு கவனத்தில் எடுத்துள்ளது.

(நாளை தொடரும்)

விற்பனையாகிறது

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு
தோற்றும் மாணவர்களுக்கு நாடளாவியரீதியில்
15 ஆரம்பக் கல்வி வளவாளர்களின் ஆக்கத்தில்

பூமாலை
Model Papers

15 எதிர் பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்
(Part 1 & 2) விடைகளோடு 52 பக்க

விலை. 525/- விசேட கையேடு அடங்கியது.

2016ஆம் ஆண்டு முதன் முதலாக பூமாலை வெளிவந்து
அதிக மாணவர்கள், ஆசிரியர்களின் பெரும் வரவேற்பைபெற்று
மீண்டும் 2017ஆம் ஆண்டு தனித்துவத்துடன் பூமாலை வெளிவந்துள்ளது.

பூமாலை வாங்கும் மாணவர்களுக்கு விஷேட பரிசு!

20.08.2017 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும்
அரச புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம்
தேசிய ரீதியில் முதல் நிலை பெறும் மாணவருக்கும்,
மாணவர் கல்வி கற்கும் பாடசாலைக்கும்
விஷேட பரிசு 100,000.00
விபரங்களும், விண்ணப்ப படிவம் பூமாலை பொதியில்

விற்பனையாளர்களும் பாடசாலைகளும் மொத்தமாக பெற்றுக்கொள்ள தொடர்புக்க

வெளியீடு
யுனிலங்காஸ் பப்ளிகேஷன்
இல.10-1/5, (No.342, Trust Complex Sea Street)
முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13.
தொ.பேசி : 077-6258778

மாணவர்களின் வெற்றி ! பெற்றோர், ஆசிரியருக்கு புகழ் ! இதுவே எமது நோக்கம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு மலர் வெளியீடு

சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தின் 175ஆம் ஆண்டு யூபிலி ஆண்டை முன்னிட்டு "ஆன்மீகத்தின் ஆணிவேரும் விழுதுகளும் விடுதலை நோக்கி" எனும் சிறப்பு மலர் வெளியீடு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இடம்பெறும். திருநாள் திருப்பலி நிகழ்வு மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும். யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ஜ-10)

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனால்

# முல்லை. மாவட்டத்தில் நேற்று பல கட்டுமானங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட சந்தை தொகுதிகள், அலுவலகக் கட்டங்கள், நூல் நிலையம் உள்ளிட்ட பல்வேறு கட்டுமானங்கள் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மணற்குடியிருப்பில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், தண்ணீர்ஊற்று மேற்கில் சந்தைக் கட்டடத் தொகுதி, வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கான நீர் விநியோக திட்டம், புதுக்குடியிருப்பு சந்தைக் கட்டடத் தொகுதி என்பன பாவனைக்குக் கையளிக்கப்பட்டன.

"போரால் முழுமையாக அழித்தொழிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் புத்துயிர் பெற்று மீண்டெழுவதுபோல புதிய கட்டடங்கள், கடைத்தொகுதிகள் என பல கட்டடங்கள் அமைக்கப்பட்டு மீளப்பொலிவு பெறுகின்ற இச்சந்தர்ப்பத்தில் இந்தக் கட்டடத் தொகுதிகளை பாவனைக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க்கை முறைமைகளில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என நாம் விரும்புகின்றோம். உர வகை, பீடை நாசினி பாவனைகள் அற்ற விவசாய முறைமை, சூழல் மாசுபடாத சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, கல்வியில் கூடிய கவனம், மொழிக் கல்வியின் முக்கியத்துவம், நிலத்தடி நீரில் மாசுக்கள் கலக்காமல் இருப்பதை உறுதி செய்தல் ஆகிய விடயங்களில் நாம் அதிக கரிசனை காட்டுவதன் மூலமே எமது பண்டைய கலாச்சார விழுமியங்களைக் கொண்ட எங்கள் தாயகபூமியைப் பாதுகாக்கலாம். போரால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் தமது துன்ப துயரங்களில் இருந்து விடுபட நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பாடுபடுவோம்." என்று நிகழ்வுகளின் உரையாற்றும்போது வடக்கு முதலமைச்சர் குறிப்பிட்டார். (ற)

# புலம்பெயர் உறவுகள் ஆதரவளிக்க வேண்டும்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஜூன் 10

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்க ப்பட்டுவரும் தொடர் போராட்டங்களுக்கு புலம்பெயர் உறவுகள் ஆதரவு வழங்கவேண்டும் என தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

தமது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறியும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உரிய இடத்துக்கு அதனைக் கொண்டு செல்லாது, கேட்ட இடத்திலே அவற்றை விட்டுசெல்கின்றனர் என்று தோன்றுகின்றது என்றும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் போராட்டங்கள் 100 நாள்களைக் கடந்து தொடரும் நிலையிலும் அவர்களின் கோரிக்கை தொடர்பில் இதுவரை எந்தவிதமான பதிலும் உரிய தரப்புகளால் வழங்கப்படவில்லை. (ற)

# பல்கலைக்குத் தெரிவாகிய மாணவர்களுக்குக் கடிதம்

கொழும்பு, ஜூன் 10

2016 - 2017 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கான விவரங்கள் அடங்கிய கடிதம் அடுத்த வாரம் தபாலிலிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்தது.

'மாணவர்கள் தெரிவாகிய பல்கலைக்கழகம், பாடநெறி போன்ற விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் தமது பதிவை மேற்கொள்ள வேண்டும். இணையத்தளத்திலும் இதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு இந்த முறை 29 ஆயிரத்து 699 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

14 பல்கலைக்கழகங்கள், 3 வளாகங்கள், 5 உயர் கல்வி நிறுவனங்கள் என்பனவற்றுக்கான 109 பாடநெறிகளைத் தொடர இந்த மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். வர்த்தகம் விஞ்ஞானம் என்ற பாடநெறி மொறட்டுவ பல்கலைக்கழத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்' என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது. (வ)

# மாடு திருடியவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

காங்கேசன்துறை பகுதியில் மாடு திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

காங்கேசன்துறை பகுதியான வீமன்காமம், வறுத்தலைவிளான் பகுதிகளில் ஆடுகள், மாடுகள் தொடர்ந்து இரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை திருடப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அண்மையில் வறுத்தலை விளான் பகுதியில் 4 மாடுகள் இரவு திருடப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பாக ஏழாலை மட்டையன் குழுவைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-10-26)

# திருவிழாக் கால ஐஸ்கிறீம் கடையில் நடந்த கைகலப்பில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஆலயத் திருவிழாக் கால ஐஸ்கிறீம் கடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறிய சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்தனர். ஐஸ்கிறீம் கடை மற்றும் அவருடைய வாகனம் என்பன உடைத்துச் சேதமாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி, அல்வாய் வடக்கு குருமன் கட்டு பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அல்வாய் வடக்கில் உள்ள ஆலயம் ஒன்றில் நேற்றுக் காலை தீர்த்தத் திருவிழா இடம்பெற்றது. ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஐஸ்கிறீம் கடை ஒன்றுக்குள் சென்ற ஒருவர் ஐஸ் கிறீமுக்குப் பணம் செலுத்த மறுத்துள்ளார். இதனால் கடையின் உரிமையாளருக்கும் அந்த நபருக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றது. அந்த நபர் கடையைவிட்டு வெளியில் துரத்தப்பட்டார். எனினும் அவர் சிறிது நேரத்தில் சிலரை அழைத்துக் கொண்டு கூரிய ஆயுதங்களுடன் அந்தக் கடைக்கு வந்தார்.

அந்தக் கும்பல் கடையின் உரிமையாளருடன் மோதலில் ஈடுபட்டது. அதனால் கடையின் உரிமையாளரும் அங்கு பணியாற்றியவரும் படுகாயமடைந்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் அறிக்கப்பட்டபோதும் அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. (வ-21-26)

# சைவத்தமிழ் அறிவு வினாவிடைப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 10

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு காட்டுமலைக் கந்தக் கோட்டம் அமைப்பினால் பாடசாலை மாணவர்களுக்கான சைவத்தமிழ் அறிவு வினாவிடைப்போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

போட்டிக்கான வினாப்பத்திரத்தை கந்தக்கோட்டத்தில் பெற்று, விடைகளைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு காட்டுமலைக் கந்தக் கோட்டம் இணைப்புக்குழு அறிவித்துள்ளது. (ஜ-11)

# தலைமறைவாகி வாழ்ந்த இளைஞனும் மாணவியும் நீதிமன்றில் நேற்றுச் சரண்

தென்மராட்சி, ஜூன் 10

15 வயது பாடசாலை மாணவியைக் கடத்திய 25 வயது இளைஞரை பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்க உத்தரவிட்ட சாவகச்சேரி நீதிவான் மன்றம், மாணவியை 50 ஆயிரம் ரூபா பிணையில் பெற்றோருடன் செல்ல அனுமதித்தார்.

தென்மராட்சிப் பிரதேச பாடசாலையொன்றில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கற்கும் மாணவியை இளைஞர் கடத்திச் சென்றுள்ளார் என்று மாணவியின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் மாணவியும் அவரைக் கடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞரும் நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் சரணடைந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான், மாணவியின் பெற்றோரை மன்றில் முன்னிலையாக உத்தரவிட்டார். அவர்கள் முன்னிலையாகினர். மாணவியை 50 ஆயிரம் ரூபா பிணையில் அழைத்துச் செல்ல பெற்றோருக்கு மன்று உத்தரவிட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞரை பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்குமாறு மன்று உத்தரவிட்டது.

மாணவியைக் கடத்திச் சென்ற இளைஞர் வேரவில் வலைப்பாடு பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியுள்ளார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞன் மற்றும் மாணவி அங்கு இருக்கவில்லை. பருவமடையாத பெண்ணை திருமணம் செய்யும் நோக்குடன் அழைத்து வந்தமை தெரிந்தும் அவர்களுக்குப் புத்திமதி சொல்லி திருப்பி அனுப்பாமல் அல்லது இது தொடர்பாக கிராம அலுவலருக்கோ பொலிஸாருக்கோ தகவல் வழங்காமல் இளைஞனையும் மாணவியையும் தங்குவதற்கு வீடு கொடுத்த குற்றச்சாட்டில் 59 வயது தாயையும் அவரது 24 வயது மகளையும் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் சாவகச்சேரி நீதிவான் மன்றில் கடந்த 25ஆம் திகதி முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அவர்களைப் பிணையில் விடுவிக்கக் கோரி கடந்த வாரம் நீதிமன்றில் சட்டத்தரணியால் விண்ணப்பம் செய்யப்பட்டது. எனினும் அந்த விண்ணப்பத்தை நிராகரித்த நீதிமன்று, தாயையும் மகளையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

அவர்கள் இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்படலாமெனக் கருதியதால் தலைமறைவாக இருந்த மாணவியும் இளைஞரும் நீதிமன்றில் நேற்றுச் சரணடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# நூல் வெளியீட்டு விழா

திருமலை, ஜூன் 10

மருத்துவர் அ . ஸதீஸ்குமார் எழுதிய "சம்பூர் இடப்பெயர்வும் மீள்குடியேற்றமும்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சம்பூர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க. துஷ்யந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூலின் நயப்புரையை எழுத்தாளர் க.தேவகடாட்சமும், அறிமுகவுரையை சுற்றாடல் உத்தியோகத்தர் இ. சோதிலிங்கமும், வெளியீட்டுரையை ம. மகேந்திரராஜாவும் நிகழ்த்துவர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் கலந்து கொள்வார். (ற-ஜ-40)

# நாவற்குளி விகாரைக்கு எதிராக வழக்குத் தாக்கல்

சாவகச்சேரி, ஜூன் 10

சாவகச்சேரி பிரதேச சபையின் கட்டட அங்கீகாரமின்றி விகாரை அமைப்பது தொடர்பாக பிரதேச சபையால் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் ஜூலை ஏழாந் திகதி தவணையிட்ட நீதிவான் அன்று விகாராதிபதியை நீதிமன்றில் சமுகமளிக்க அழைப்பாணை அனுப்புமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை, நாவற்குளியில் விகாரை அமைப்பது தொடர்பாக வடக்கு மாகாண சபையில் முன்மொழிவு இடம்பெற்றிந்தது. (ற-9)

# சமூகவள ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் ஆண்டு விழா நாளை 11 ஆம் திகதி நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது என நிறுவனத்தின் தலைவர் கே.தர்மசேகரன் தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவதையை நிறுத்து முன்னர் மனித வதையை நிறுத்துங்கள்

## அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் பசுவதையை நிறுத்த வேண்டும் என்று கோரப்படுகின்றது. அதற்கு முன்னர் நாம் மனிதனை வதை செய்வதை முதலில் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், தேசிய சகவாழ்வுக் கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பசுவதையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் நிகழ்வு, சுவாமி மகா கார்த்தாஸ் ஏற்பாட்டில் கொழும்பு ஹவ்லக் வீதி பௌத்த சுவர்ண ஜயந்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் உரையாற்றும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மனித வதையைக் கண்டும் காணாதது போல் இருந்துவிட்டு, பசுவதையை நிறுத்துவோம் என்று மாத்திரம் சொல்வது முறையானது அல்ல.

இந்துக்களும், பௌத்தர்களும் ஒன்று சேருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அதற்கு நான் முழுமையாக எனது ஆதரவைப் பதிவு செய்கிறேன். ஆனால், அது இந்த நாட்டில் வாழும் ஏனைய இன, மதங்களுக்கு எதிரான கூட்டாக இருக்க முடியாது" - என்றார். (ஜ)

## கணவன், மனைவி மோதலால் உயிரிழந்தது குழந்தை

கொழும்பு, ஜூன் 10

கணவன், மனைவி மோதலில் 7 மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மாத்தறை, ஹக்மன, தெனகம பிரதேசத்தில் இடம்பெற்றது.

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் இந்தக் குழந்தை கொலை செய்யப்பட்டுள்ளது. குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்த குற்றச்சாட்டில் குழந்தையின் தாயும், தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 10

யாழ்.இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் கோமகன் எழுதிய "குரலற்றவரின் குரல்" என்ற நூலின் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, பழைய பூங்காவீதியில் அமைந்துள்ள வீட் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வேலணையூர் தாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூலின் அறிமுகம் மற்றும் மதிப்புரைகளை சத்தியன், தனுஜன் ஆகியோர் நிகழ்த்துவர். நிகழ்வில் நூல் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## உலக யோகா தின விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். நீரிழிவுக் கழகமும் கிறீன் பில்ட் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் உலக யோகா தின விழா நாளை மாலை 4.30 மணிக்கு கிறீன் பீல்ட் மண்டபத்தில் குருசோ வீதியில் நடைபெறவுள்ளது. (ற)

## மதில் வீழ்ந்து சிறுவன் காயம்

சாவகச்சேரி, ஜூன் 10

சாவகச்சேரி, தாவளை இயற்றாலையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் மீது மதில் உடைந்து வீழ்ந்தது. சிறுவனின் காலில் பாதிப்பு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவனே காயமடைந்தான்.

சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டான். (ற)



## இடரால் பாதித்தோருக்கு ஆசிவேண்டி பொன்னாலை மாணவர்கள் பிரார்த்தனை

பொன்னாலை, ஜூன் 10

தென்னிலங்கையில் இடம்பெற்ற வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களால் உயிரிழந்த மூவின மக்களினதும் ஆன்மா சாந்தியடையவும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு விரைவில் புத்துயிர் பெறவும் வேண்டுதல் செய்து பொன்னாலை வெண்கரம் படிப்பக மாணவர்கள் நேற்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சிறப்புப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இயற்கையின் சீற்றத்தால் தென்னிலங்கையில் உள்ள பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கற்றல் உபகரணங்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு அவர்கள் நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

தமது கற்றல் செயற்பாட்டை மீள ஆரம்பிக்க அந்த மாணவர்களுக்கு இறை அருள் கிடைக்கவேண்டும் என்று வெண்கரம் நிறுவன மாணவர்கள் வேண்டுதல் செய்தனர். இந்தப் பிரார்த்தனையில் வெண்கரம் நிறுவனப் பிரதிநிதிகளும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (வ)

## விபத்தில் பெண்கள் காயம்

தென்மராட்சி, ஜூன் 10

முதன்மைச் சாலையில் சென்ற ஓட்டோ சமிக்ஞையின்றி ஒழுங்கையில் திரும்பியதால் அந்த வழியே வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டோவுடன் மோதியது. மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த பெண்ணும் சாலையில் நடந்து வந்த பெண்ணும் அதில் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நுணாவில் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது.

கைதடி கிழக்கைச் சேர்ந்த 23 வயதுப் பெண் தனது உறவுமுறைப் பெண்ணை ஏற்றிக் கொண்டு சாவகச்சேரிக்கு வந்துள்ளார். நுணாவில் சந்திக்கு அடுத்த ஒழுங்கையில் முன்னால் சென்ற ஓட்டோ சமிக்ஞையின்றி திரும்பியதால் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த பெண் நிலைகுலைந்து ஓட்டோவுடன் மோதி சாலையுடன் இணைந்த ஒழுங்கையில் வீழ்ந்துள்ளார். அந்தவேளையில் சாலை முகப்பில் நடந்து வந்த குடும்பப் பெண் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவரும் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இரு பெண்களும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ற-9)

## தொழிற் பயிற்சி கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது என்று காரைநகர் தொழிற்பயிற்சி அதிகார சபையின் முகாமையாளர் வி.சிறிகுகன் தெரிவித்தார்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், வீட்டு மின்னிணைப்பு, தையல், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுவோர், அறை பராமரிப்பாளர், காய்ச்சி இணைப்பவர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், முச்சக்கரவண்டி திருத்துனர், அலுமினியம் பொருத்துநர் ஆகிய தொழிற் பயிற்சிகளின் புதிய பிரிவுகள் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சிகளை கற்க விரும்புவோர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 15 திகதிக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு தேசிய தொழில் தகமை சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-10)



உலக உணவுத்திட்டமும், வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களமும் இணைந்து முன்னெடுக்கும் 'பற்றிக் பிரின்ரிங்' பயிற்சி வகுப்புகள் புங்குடுதீவு உலக மைய வளாகத்தில் நேற்று ஆரம்பமாகின.

இந்தப் பயிற்சி நெறியில் புங்குடுதீவைச் சேர்ந்த 31 பயனாளிகள் வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ)

## ஐந்தாண்டு திட்டம் தொடர்பில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஐந்தாண்டு வேலைத்திட்டங்கள் தொடர்பான மூன்றாந் தர துறையினுள் உள்ளடக்கப்பட்ட உபதுறையான சமுதாய மட்ட உட்கட்டமைப்புக்கான பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டு ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்தல் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக கடந்த 25ஆம், 28 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட கூட்டங்களில் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட வரைவில் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட முன்னுரிமைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள முன்னுரிமைப்படுத்தப்படும் திட்டங்கள் யாழ். மாவட்ட போக்குவரத்து தொடர்பான செயற்பாடுகள் போன்றவை இணைத்த திட்டம் தயாரிக்கப்படவுள்ளதால் திணைக்களத் தலைவர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ற-9)

## கஞ்சாப்பொதி மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 10

பாவனையற்ற கிணற்றுத் தொட்டியில் இருந்து அநாதரவான நிலையில் காணப்பட்ட இரு கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன என்று பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பளை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் செம்பியன்பற்று மாமுனை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட கிணற்று தொட்டியில் காணப்பட்ட இரண்டு கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும், சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். (ற-6)



கோப்பாய் கிராம அலுவலகத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேசத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட மூத்த தாய்மார்களை வாழ்த்திக் கௌரவிக்கும் நிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் ஒவ்வொரு தாய்மார்களுக்கும் அன்பளிப்பாக உடுபுடவைகளை வழங்கினார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொந்த நிலம் செல்லும்வரை போராட்டத்தைக் கைவிடோம்

## இரணைதீவு மக்கள் திட்டவட்டம்

கிளிநொச்சி, ஜூன் 10

தமது பூர்வீக இடமான இரணைதீவில் தம்மை மீள்குடியமர்த்த வேண்டும் என்று மக்கள் நடத்தி வரும் போராட்டம் நேற்று 39 ஆவது நாளாகத் தொடர்ந்தது.



இரணைதீவில் இருந்து 1992ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட மக்கள் போர் முடிந்து 8 ஆண்டுகள் கடந்தும் இதுவரை மீள்குடிமர்த்தப்பட வில்லை. அங்கு சென்று தங்கித் தொழில் செய்யவும் அனுமதிக்கப்படவில்லை. தற்போது முழங்காவில், இரணைமாதா நகரில் குடிய மர்த்தப் பட்டுள்ள அவர்கள் தம்மைத் தமது பூர்வீக நிலத்தில் குடியமர அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கை தொடர்பில் நீண்டகாலமாக எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட வில்லை. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் திலும் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்ட போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

தமக்குத் தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

இரணைதீவிலிருந்து மக்களுக்குச் சொந்தமான கால்நடைகளைத் திருட்டுத்தனமாக வெளியே கொண்டுசெல்கின்றனர். தேங்காய், வீட்டு உபகரணங்கள் என்பவையும் கடத்தப்படுகின்றன என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டு கின்றனர். (ற)

# ஓட்டோ திருட முயன்றவர் வசமாகச் சிக்கினார் நேற்று

## உரிய மரியாதை வழங்கி பொலிஸிடம் கொடுத்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். போதனா மருத்துவமனையின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றைத் திருட முற்பட்டவர் மக்களால் விரட்டிப் பிடிக்கப்பட்டு நன்றாகக் கவனிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.



யாழ். நகரப் பகுதியில் நிறுத்தப்படும் முச்சக்கர வண்டிகளின் முன்பகுதி (டாஸ் போர்ட்) உடைக்கப்பட்டு அவற்றுக்குள் இருந்த பணம், பொருள்கள் திருடப் படுவது நீண்டகாலமாகத் தொடர்கின்றது. அதனால் முச்சக்கர வண்டிச் சாரதிகள் திருடர்கள் தொடர்பாக இப்போது விழிப்புடன் உள்ளனர். நேற்றுக்காலை 7 மணியளவில் மருத்துவனை முன்பாக நிறுத்தப்ப ட்டி ருந்த முச்சக்கர வண்டி ஒன்றுக்குள் ஒருவர் ஏறி அமர்ந்துள்ளார். அதை அவதானித்த முச்சக்கர வண்டி உரிமையாளர் அருகில் சென்றுள்ளார். அதற்குள் முச்சக்கர வண்டிக்கு உடமைகள் வைக்கப்பட்டு பூட்டப்பட்டிருந்த பகுதியை உடைத்து அவற்றுள் இருந்தவற்றை எடுத்துக் கொண்டு அந்த நபர் தப்பிச் செல்ல முயன்றார்.

முச்சக்கர வண்டி உரிமையாளரும், ஏனையோரும் இணைந்து அந்த நபரை விரட்டிப் பிடித்தனர். அருகில் இருந்த கம்பம் ஒன்றில் கட்டப்பட்ட அந்த நபர் மக்களால் நன்றாகக் கவனிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரிடம் அந்த நபர் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற - 10,101)

# இரட்டைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.இலக்கிய நண்பர்கள் நடத்தும் மகுடம் ஐந்தாவது ஆண்டு மலர் மற்றும் பேராசிரியர் சி.மௌனகுருவின் இரட்டைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

நூலின் முதற்பிரதியை கிருபா லேணேர்ஸ் நிறுவன அதிபர் அ.கி;ருபாகரன் பெற்றுக் கொள்வார். நூலின் அறிமுக உரையை யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் ஆய்வாளர் சி.ரமேஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ற-9)

# கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 10

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 2017/2018 ஆண்டுக்கான 21 ஆவது செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு கலட்டி சேர்.பொன்.இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது மாவட்டப் பிரதி ஆளுநர் லயன் தேவபீற்றர் மற்றும் சீமாட்டி லயன் ஜசிந்தாவும் மதிப்புறு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் லயன் ஆர். விக்னேஸ்வரனும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கே. நந்தகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-10)

# மகா கும்பாபிசேகம்

வடமராட்சி, ஜூன் 10

அல்வாய் கிழக்கு, வெள்ளிருவை சிறிஞான வைரவசுவாமி ஆலயத்தின் மகாகும்பாபிசேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிமுதல் 7.20 மணிவரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிசேகத்துக்கான கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய் காப்புச்சாத்துதல் இடம்பெறும். (ஜ-173)

# திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம் ஜூன் 10

யாழ்.பொது சன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தத் திரைப்படக் காட்சியில் "பியாசா" திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நூலகத்தின் சிறிய கேட்போர் கூடத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (ஜ)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 200 | 180 | 160 | 220 | 200-220 |
| கரட் | 300 | 240 | 300 | 350 | 320 |
| மரவள்ளி | 80 | 80 | 60 | 60 | 80 |
| பயிற்றை | 150 | 100 | 80 | 120 | 180 |
| பாகல் | 180 | 180 | 150 | 180 | 200 |
| கருணைக்கிழங்கு | 140 | 100 | 100 | 120 | 90-100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 80-90 |
| சி.வெங்காயம் | 250 | 260 | 220-250 | 320 | 160-260 |
| பூசணி | 80 | 80 | 70 | 90 | 80 |
| தக்காளி | 150 | 120 | 110 | 150 | 180 |
| வாழைக்காய் | 60 | 60 | 35-40 | 60 | 60 |
| கீரை | 30 | 30 | 20-30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 20 | 30 | 20 |
| பச்சை மிளகாய் | 400 | 350 | 350 | 400 | 450 |
| புடோல் | 140 | 100 | 80 | 100 | 100 |
| கோவா | 150 | 160 | 160 | 240 | 180 |
| வெண்டி | 120 | 120 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 240 | 220 | 240 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 110 | 120 | 140 |
| தேங்காய் | 70 | 65 | 35-50 | 50-60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10-15 | 15 | 15 |
| கரிமிளகாய் | 200 | 240 | 250 | 160 | 320 |
| இராசவள்ளி | 200 | - | 300 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 180 | 80 | 60 | 100 | 120 |

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி சுமார் 50 மில்லியன் ரூபா என்று கூறப்படுகின்றது. (ற-101-26-8)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 700 | 700 | 800 | 900 |
| பாரை | 600 | 700 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 600 | 500 |
| விளை | 500 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 500 | 500 | – |
| கும்பிளா | 400 | 600 | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 300 | 400 | 500 | 500 |
| திரளி | 250 | 300 | 200 | 200 |
| நகரை | 300 | 200 | 400 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | – |
| ஒட்டி | 100 | 300 | 350 | 500 |
| திருக்கை | 250 | – | 400 | 300 |
| மதனம் | 250 | 150 | 350 | – |
| கொய் | 150 | 70 | 100 | 100 |
| பாலை | 250 | 250 | 600 | 600 |
| வாளை | 200 | – | 500 | 400 |

## அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழிக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று மேற்கு நாடுகளில் மோசமான வகையில் பயங்கரவாதம் பரவியுள்ளது. லண்டன், பிரான்ஸ், ஈரான், பாரிஸ் நகர்களில் தொடர்ச்சியாக ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. மிகவும் இலகுவாக இந்தத் தாக்குதல்களை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல் வாகனத்தின் மூலம் மக்களைத் தாக்குதல், கத்தி, மனித வெடிகுண்டு என இலகுவாக எவரும் எதிர்பாராத வகையில் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு சிலர் இந்தச் செயற்பாடுகளைச் சரியென விவாதித்து வருகின்றனர். ஒரு காலத்தில் பிரித்தானிய ஆக்கிரமிப்பில் இருந்தபோது அவர்கள் மேற்கொண்ட நடவடிகளுக்குப் பதிலாக இன்று செயற்படுவது சரியெனக் கூறுகின்றனர்.

எனினும் இலங்கையில் பயங்கரவாதம் இருந்தது, இந்தியாவில் இருந்தது. இவர்கள் எவரும் இன்னொரு நாட்டைத் தாக்கவில்லை.

ஆனால் அடிப்படைவாத முஸ்லிம்கள் மாத்திரம் மோசமாக ஏனைய நாடுகளை இலக்கு வைத்து மக்களை அழித்து வருகின்றனர். இந்த அச்சுறுத்தல் இன்று மேற்கு நாடுகளுக்கு மாத்திரம் அல்லாது ஆசியாவையும் இலக்கு வைத்து வருகின்றது.

ஆசியாவில் இந்தியா, பங்களாதேஷ், மியன்மார் ஆகிய நாடுகளைப் போலவே இலங்கைக்கும் உள்ளது.

இலங்கையிலும் அடிப்படைவாதச் செயற்பாடுகள் உள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. மேற்கு நாடுகளுக்கு மாத்திரம் அச்சுறுத்தலாக உள்ள ஐ.எஸ். பயங்கரவாதம் இன்று உலகம் முழுவதும் பரவி விட்டது.

ஆகவே எமக்கும் இந்தப் பாதிப்பு உள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இலங்கையில் பொதுபல சேனா போன்ற அமைப்புகளுக்கும் சில பௌத்த தேரர்களுக்கும் எதிராகச் சிலர் கருத்துக்களை முன்வைக்க முடியும்.

அதேபோல் இவர்கள் சில இனவாதக் கருத்துக்களை முன்வைக்கின்றமையை மறுக்கவும் முடியாது. ஆனால் இவர்கள் அனைவரும் கூறும் சில கருத்துக்களை நாம் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டிய தேவை உள்ளதுடன் இனவாதத்தை முழுமையாக அழிக்கவும் செயற்படவேண்டும்என்றுள்ளது. (த)

## பிரி. தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட இவர் 37,754 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தொழிற்கட்சி வேட்பாளருக்கு 9,982 வாக்குகளே கிடைத்தன.

2015ஆம் ஆண்டு இதே தொகுதியில் ரணில் ஜெயவர்த்தன, சுமார் 30 ஆயிரம் வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார். அப்போது அவருக்கு 35,573 வாக்குகள் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திச் சபைகளுடன் ஆராய்ந்து

# பாடசாலைகளின் பாதுகாப்பை அதிபர்கள் உறுதிப்படுத்தவும்

### காவலாளிகள் நீக்கப்பட்டமையால் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க கல்வி அமைச்சர் ஆலோசனை

வவுனியா, ஜூன் 10

வடக்கு மாகாண பாடசாலைகளில் காவலாளிகளுக்கு வழங்குவதற்காக வழங்கப்பட்ட 40மில்லியன் ரூபா நிதி தீர்ந்துவிட்டது. பாடசாலைகளிலிருந்து காவலாளிகளை நிறுத்தவதற்கு இதுவே காரணம். அந்த ஊதியத்தைக் கொடுப்பதற்கு எங்களுக்கு முடியாத ஒரு நிலை இருக்கின்றது. பாடசாலை அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சபைகளைக் கூட்டி அதற்கூடாக ஒரு திட்டத்தைத் தயாரித்துக்கொள்ளலாம். துணிகரமாகச் சில செயற்பாடுகளில் ஈடுபடுமாறு பாடசாலைகளைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா தெரிவித்தார்.

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தில் பணியாளர்கள் விடுதி திறப்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குருகுலராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஆசிரியர்களை நியமிக்கும்போது அவர்களுடன் முரண்பாட்டிற்குச் செல்லவேண்டாம். உங்களுடைய கைகளுக்குள்ளே அவர்களை வைத்திருப்பது அதிபர்களின் முக்கியமான பணி, பண்புகளிலே ஒன்று. எனவே நாங்கள் வழங்குகின்ற ஆசிரியர்கள் எல்லோரும் எல்லாம் கற்பிப்பார்கள், எல்லோருக்கும் நல்ல குணங்கள் இருக்கும் என்று நாங்கள் எடுத்துக்கொள்ள முடியாது. அவர்களும் மனிதர்கள். முரண்பாட்டுக்கல்வியூடாக நாங்கள் செல்ல முடியாது. அவர்களுடன் சேர்ந்து போவதற்கு அவர்களை வசியப்படுத்தி அவர்களுடன் சேர்ந்து பாடசாலைச் செயற்பாடுகளை நடத்துவதற்கு முன்வரவேண்டும். உங்களுடைய ஊழியர்களின் விடுதி கட்டப்பட்டு இன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது திருப்திகரமான முறையிலே கட்டிடத்தை அமைக்கவில்லை. இங்கு அதன் தொழிநுட்பவியலாளர் இருக்கின்றாரோ தெரியவில்லை. அதன் கதவுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. எனவே அவற்றை திரும்பவும் செப்பனிட்டுப் புதிய கதவுகளை அமைக்கும்படி கோருகிறேன். மாகாண கட்டிடத்திற்குப்பொறுப்பாகவுள்ளவர்களிடம் இது பற்றி முறையிடுவேன்.

பாடசாலையிலே ஒரு மாணவனையும் தண்டனைக்குட்படுத்தல் ஆகாது என்று வடக்கு மாகாணத்திலே கட்டாயப்படுத்தியிருக்கின்றோம்.

அப்படியிருந்தும் உங்களுடைய வலயத்திலே பல மாணவர்கள் பல ஆசிரியர்கள் பிரம்புடன் சென்றதாகவும் சரீர தண்டனையை பிள்ளைகளுக்கு வழங்குகின்றார்கள் என்றும் கூறப்படுகிறது. இவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அது முற்றாக நிறுத்தப்பட வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் நேர்முறை வகுப்பறை முகாமைத்து வம்பற்றிய செய்திகளை உங்களுக்குத் தருவதற்கு ஆவலாகக் காத்திருக்கின்றோம். எனவே வலயக்கல்விப் பணிப்பாளர் உங்களுடைய ஆசிரியர்கள் கணிசமானவர்கள் இந்தப்பயிற்சியை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்கவும். என்று மேலும் தெரிவித்தார்.

(4)

## ஒட்டுசுட்டானிலிருந்து கற்சிலைமடுவரை கால்நடைகளைப் பாதுகாக்கத் தண்ணீர்

### நான்கு நாள்களாக வழங்கப்படுகிறது

முல்லைத்தீவு, ஜூன் 10

வறட்சியிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க ஒட்டுசுட்டான் குளத்திலிருந்து கற்சிலைமடுவரை தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் பயிர்ச் செய்கைக்கு தண்ணீர் வழங்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவில் வறட்சிப் பாதிப்பினால் பயிர்கள் அழிகின்றன. கால்நடைகள் வறட்சிக்கு ஈடுகொடுக்க முடியாது தவிக்கின்றன. இந்த நிலையை ஓரளவாவது கட்டுப்படுத்த, முத்துஐயன்கட்டு குளத்து நீரினை சாளம்பன் ஆறு மூலமாகப் பேராற்றில் கலந்து விடுமாறு முத்து விநாயகபுரம் கமக்கார அமைப்பினர் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் கோரி அவரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இதே கோரிக்கையை ஏனைய பல கமக்கார அமைப்புக்களும் விடுத்துள்ளன. மனுவும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள தொடர் வறட்சி காரணமாக முல்லைத்தீவில் நிலக்கடலை மற்றும் வான்பயிர்கள் அழிவடைந்து வருகின்றன. கால்நடைகள் குடிநீரின்றித் தவிக்கின்றன என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது பற்றி கமக்கார அமைப்பின் தலைவர் சு.யோகராசா தெரிவித்ததாவது,

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக பேராறு தொடக்கம் பல குளங்களிலும் தண்ணீர் வற்றிவிட்டது. பேராற்றை நம்பி வலதுகரை 4 ஆம் கண்டம் வரையில் நிலக்கடலைப் பயிர் மேற்கொண்டுள்ள நிலையில் ஆற்றில் நீரின்றி அவை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அழிவடைந்தால் கடும் நட்டத்தினை நாம் எதிர்கொள்ளவேண்டி வரும்.

அதுமட்டுமன்றி, எங்குமே நீரில்லாத நிலையில் கால்நடைகள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே முத்து ஐயன் கட்டு குளத்து நீரினை சாளம்பன் ஆறு மூலமாகப் பேராற்றில் திறந்து விட்டால் பயிர்களையும் கால்நடைகளையும் காப்பாற்ற முடியும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால், தண்ணீரை சாளம்பன் ஆறு மூலமாகப் பேராற்றில் கலந்து விடமுடியாது. என்று நீர்ப்பாசனப் பொறியியல் பிரிவுத் தகவல்கள் கூறுகின்றன. அதனால் ஒட்டுசுட்டான் குளத்திலிருந்து முதன்மை வாய்க்கால் ஊடாக கற்சிலைமடு வரை தண்ணீர் வழங்கப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இவ்வாறு தண்ணீர் வழங்கப்படுகிறது. இன்று அதனை இடைநிறுத்தவேண்டி வரலாம் என்றும் நீர்ப்பாசனப் பொறியியல் பிரிவுத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (4, 500)

## முன்மாதிரியாக உள்ள கொழும்புத்துறை ஆலயம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்காக உதவி வழங்கும் பணியை கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய நிர்வாகம் முன்னெடுத்து வருகிறது.

கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலை மாணவர்களுக்கு இந்த உதவிகளை வருடா வருடம் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவின் போதும் இந்த மாணவர்களுக்கு கல்விக்கான ஒரு தொகை நிதி வழங்கி வைக்கப்பட்டது.

கனடாவில் உள்ள நடராசா சிவநாதன் என்பவரின் உதவியுடன் இந்த உதவி வழங்கப்படுகிறது.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இந்த உதவி வழங்கும் நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். (4,17)

## சாலைச் சீரமைப்பு தாமதத்தால் வர்த்தக நடவடிக்கை பாதிப்பு

### வவுனியா வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டு

வவுனியா, ஜூன் 10

வவுனியா தொடருந்து நிலைய சாலைச் சீரமைப்பு மந்தகதியில் நடைபெறுவதால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாக அப்பகுதி வர்த்தகர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வவுனியா நகரத்துக்கும் குருமன்காட்டுக்கும் இடையிலான தொடருந்து நிலைய சாலை பல வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருடத்தில் இருந்து திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத் திருத்த வேலைகளின்போது சாலையின் இரு மருங்கிலும் வெட்டப்பட்ட கால்வாய்கள் பூரணப்படுத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றன. வெட்டப்படும் கால்வாய்கள் ஒரு வாரத்திற்குள் மூடப்பட்டு பாவனைக்கு விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் சில இடங்களில் இரண்டு மாதங்களுக்கு மேலாக வெட்டப்பட்ட வடிகான்கள், கால்வாய்கள் முழுமைப்படுத்தப்படாது காணப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சாலையோரத்தில் அமைந்துள்ள தமது வர்த்தக நிலையங்களுக்கு தமது வாடிக்கையாளர்கள் வர முடியவில்லை எனவும், இதுவரை முழுமைப்படுத்தப்படாத வடிகால்களால் 5 வரை யான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் பல முறை தெரியப்படுத்தியும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபையைத் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை.

(4,21)

## முஸ்லிம் மீள்குடியேற்றத்துக்கு கூட்டமைப்பில் சிலர் தடை

### அது தொடர்பில் ஆராய திகதி தருமாறு அமைச்சர் ரிசாத் சம்பந்தருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்கு மாகாண முஸ்லீம் மக்களின் மீள்குடியேற்றத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பிரதிநிதிகளே தடையாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டும் அமைச்சர் ரிசாட் பதீயுதீன், அது தொடர்பில் ஆராய ஒரு சந்தர்ப்பம் அளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்; நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்த முஸ்லீம்களின் மீள்குடியேற்றத்தை முழுமையடையச் செய்யும் பணியை நிறைவு செய்ய விடாது கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் தடையாக செயல்படுகின்றனர். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட மீள்குடியேற்றம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஒருவரும் இடையூறு விளைவிக்கின்றனர். குடியேற்றம் செய்வதற்கான இடத்தை வழங்குவதிலும் வீடுகள் வழங்குவதிலும் இந்தப் பிரச்சினை காணப்படுகிறது. அதனால்மக்களின்மீள்குடியேற்றத்தை நிறைவு செய்ய முடிய வில்லை. எனவே இது தொடர்பில் நேரில் சந்தித்துப் பேசுவதற்குத் திகதி வழங்குங்கள் என்று அமைச்சர் ரிசாத் கேட்டுள்ளார்.

இந்த விடயம், நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமைப்பின் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுக் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. "மாவட்டத்தில் இரு இனங்களையும் சேர்ந்த பல ஆயிரம் பேர் காணி இன்றி குடியிருப்புக்கள் இன்றி உள்ளனர். மாவட்டத்தில் குடியிருப்புக்களை வழங்க யாருமே தடையாக இல்லை. மாறாக ஒரு இனத்துக்கு மட்டும் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொண்டு இன்னுமோர் இனத்தை வஞ்சிப்பதனையே எமது மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றனரேயன்றி, மீள் குடியேற்றத்துக்கு எவருமே தடையில்லை.

முல்லைத்தீவு மாவட்ட முஸ்லீம்களில 915 குடும்பங்களுக்கு நிலம் இல்லை என்பது வெளிப்படையான உண்மை. அதேநேரம் தமிழ் மக்களில் 2 ஆயிரத்து 860 குடும்பங்களுக்கு நிலம் இல்லை. மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்குக் காணி வழங்க நடவடிக்கை எடுத்தால் அது இரண்டு தரப்புக்குமாக இருக்க வேண்டும். அல்லது எத்தனை காணிகள் வழங்க முடியுமோ அவற்றை மாவட்டத்தில் காணி அற்றவர்களின் விகிதத்துக்கு ஏற்ப வழங்க வேண்டும். ஒரு இனத்துக்கு மட்டும் வீடுகள் கொடுத்தால் அங்கே இன விரிசல் ஏற்படும்" என்று எடுத்துக் கூறப்பட்டது.

இந்த விடயம் குறித்து அமைச்சர் ரிசாட் பதியுதீன் நாடாளுமன்றிலும் பேசியுள்ளார். அதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான ம.ஆ.சுமந்திரன் இது தொடர்பில் பதிலளித்திருந்தார். அவரது பதிலில் "வடக்கில் பரம்பரையாக வாழ்ந்த எந்த மக்களும் மீள்குடியேற கூட்டமைப்பு தடையாக இருக்கவில்லை. இனி மேலும் தடை விதிக்காது. ஆனால் மீள்குடியேற்றம் என்னும் பெயரில் வடக்கில் இருந்து 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்கு முன்னர் புலிகளால் வெளியேற்றப்பட்ட மக்களுக்கு என்ற சொற்பிரயோகத்தின் கீழ் ஓர் இனத்தவர்களுக்கு மட்டும் மறைமுகமான திட்டங்களை அனுமதிக்க முடியாது. என்று பதிலளித்திருந்தார். (4, 101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மலகூடங்கள், வீடுகள் இல்லாதபோதும்

# கல்வி வளர்ச்சிக்காகவே அதிகளவு நிதி ஒதுக்கீடுகள்

### மாகாண உறுப்பினர் லிங்கநாதன் கூறுகிறார்

வவுனியா, ஜூன் 10
வவுனியா மாவட்டத்தில் 11 ஆயிரத்து 680பேருக்கு குடியிருப்புக்கள் இல்லை. 4 ஆயிரத்து 620பேருக்கு மலசலகூடங்கள் இல்லை. அப்படியிருந்தும் கடந்த 3 வருடங்களாக வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு மாத்திரம் முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளுக்கென 26 இலட்சத்து 85ஆயிரம் ரூபாவைச் செலவிட்டுள்ளேன். கல்வியின் முக்கியத்து வம் கருதி, கல்வியை மீண்டும் மேல்நிலைக்குக் கொண்டுவருவதற்காகவே இவ்வாறு செய்கிறேன்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் தெரிவித்தார்.
வவுனியா வடக்கு கல்வி வயலத்தில் பணியாளர்கள் விடுதியினைத்திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தப் பணத்தை வைத்து பலருக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்திருக்கலாம். ஆனால் நாங்கள் இழந்த கல்வியை திரும்ப உயர்த்தவேண்டிய தேவை இருக்கின்றது.
1960ஆண்டுகளுக்கு முற்பகுதியில் இலங்கையில் மிகப்பெரிய பொறுப்புக்களில் இருந்தவர்கள் தமிழர்கள். இன்று இத்தனை வருடங்கள் கழித்துப்பார்த்தால் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் உள்ளனர்.
கிட்டத்தட்ட மாவட்டச் செயலர்கள்கூட சிங்கள இனத்தவர்கள் தான் வந்துகொண்டு இருக்கின்றார்கள். இதை நாங்கள் மாற்றியமைக்க வேண்டுமாக இருந்தால் கல்வியால் தான் முடியும். எங்களால் இனிப் படிக்க முடியாது. என்னுடைய பிள்ளையின் பிள்ளை யைத்தான் படிப்பிக்கவேண்டி இருக்கின்றது. எங்களுடைய நாட்டில் கல்வியால்தான் நாம் நிமிர முடியும். அந்த ஒரு உயரிய சிந்தனையில்தான் நாங்கள் எங்களுடைய பணிகளைச் செய்கிறோம். முயற்சி செய்கின்றோம்.
எங்களுடைய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முதலமைச்சருடன், அமைச்சர்களுடன் செயலாளர்களுடன் முரண்பட்டு க்கொண்டிருக்கின்றேன். காரணம் எங்களுடைய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கே. எங்களுக்கும் அவர்களுக்கும் வேறு ஒருபிரச்சினையு மில்லை. பெற்றோர்களைவிட



ஆசிரியர்களுக்கு மிகப்பெரிய கடப்பாடு இருக்கின்றது. ஏனென்றால் பிள்ளையின் ஒருநாள் காலத்தை பெற்றோருடன் இருப்பதை விட ஆசிரியர்களுடன்தான் கழிக்கின்றார்கள். வீட்டிற்குப் போனால் சிறிதுநேரம். அதன்பிறகு கல்வி நிலையத்துக்குப் போகின்றார்கள். இரவு படுக்கையைத் தவிர மிகுதியான செலவை பாடசாலைக்கல்வி முடியும் வரையும் கல்வியியலாளர்களுடனேயே செலவளிக்கின்றார்கள்.
ஆகவே அதற்குரிய மிகப்பெரிய பொறுப்பும்கடமையும் அனைவருக்கும் இருக்கின்றது. எதிர்காலத்தில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தை மட்டுமல்லநாங்கள் அனைவரும் இணைந்து வவுனியா மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியை முன்நிறுத்துவதற்கு உங்களுடைய அர்ப்பணிப்பான செயற்பாடு தேவை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுகின்றேன் - என்றார்.
(4)

## சமுர்த்தி வழங்கப்படாததால் மக்கள் வறுமையில் தவிப்பு

### அரும்பு பெண்கள் சம்மேளனம் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, யூன் 10
பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராஞ்சி கிராமத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள அதிகளவானவர்களுக்கு இதுவரை சமுர்த்தி முத்திரைகள் வழங்கப்படவில்லை என்று கிளிநொச்சி மாவட்ட "அரும்பு" பெண்கள் சம்மேளனம் கவலை தெரிவிக்கின்றது.
குறிப்பாக இரணைமாதநகர், பள்ளிக்குடா, கிராஞ்சி, வலைப்பாடு, நாச்சிக்குடா உள்ளிட்ட கிராமங்களில் அதிகளவானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். சிலருக்கேசமுர்த்தி முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு வழங்கப்படுகின்ற பணத்திலும் அதிகமான தொகையைக் கட்டாய சேமிப்புக்குக் கழித்துக் கொள்கின்றனர். அதுவும் பாதிப்பாக உள்ளது என்று அரும்பு அமைப்பினர் கூறுகின்றனர்.
"வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பொதுமக்கள் சமுர்த்திப் பயனாளிகள் விண்ணப்பதாரிகள் என்ற இரு கட்டங்களில் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. தற்போதைய புதிய நடைமுறையின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உதவிப் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமூகசேவை உத்தியோகத்தர் ஆகியோர் மூலமாக நேர்முகத்தேர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.
மீள்குடியேற்றத்தின் பின்னர் 30 வீதமான மக்களுக்கே சமுர்த்தியே வழங்கப்பட்ட நிலையில் தற்போது வந்திருக்கும் புதிய நடைமுறையின் கீழ் 85 வீதமான மக்களுக்கு நிதியை வழங்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். மிக விரைவில் சமுர்த்தி பெறாதவர்களுக்கும் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ஆரணி தவபாலன் தெரிவித்தார். (4-6)

## கோயில்களில் திருடிய 4 பேருக்கு மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சியிலுள்ள ஆலயங்களில் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்கள் உட்பட நால்வருக்கும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டது.
குறித்த சந்தேகநபர்கள் புத்தளத்திலிருந்து வந்திருந்தவர்கள் என்பதும் கிளிநொச்சியில் ஆலயங்களில் திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் நால்வரும் நீதிமன்றில் கடந்தமாதம் முற்படுத்தியபோது கடந்த 7 ஆம் திகதிவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நீதிமன்றில் 7ஆம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (4-21)

## அதிபர் தாக்கியதால் மாணவனுக்கு சிகிச்சை

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் மாணவர் ஒருவர் தாக்கப்பட்டு நோவு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று முறையிடப்பட்டிருக்கிறது.
சம்பவம் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது. ஒழுங்கு விதிமுறையை மீறியதாகக் குற்றஞ்சாட்டி அந்த மாணவர் மீது அதிபர் தாக்கினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.
இது தொடர்பில் வைத்தியசாலையில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (4-35)

## பக்தர்கள் வழிபாடு செய்ய கடற்படையினர் இடையூறு

### பூநகரி தேவாலய வளாகத்தில் இந்தநிலை



கிளிநொச்சி, ஜூன் 10
தேவாலய வளாகத்தில் கடற்படையினரின் பாவனை உள்ளதால் நினைத்த நேரத்துக்கு வந்து வழிபாடு செய்யமுடியாத நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச பள்ளிக்குடா கிராமத்தில் உள்ள யூத கிறிஸ்தவ தேவாலயத்தின் பின்புறம் கடற்படையினர் முகாம் அமைத்து தங்கியுள்ளனர். அவர்கள் தமது பல தேவைக்காகவும் குறித்த தேவாலய வளாகத்தை பயன்படுத்தி வருகின்றதனால் நாம் நினைத்த நேரத்துக்குச் சென்று வழிபாடு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.
கடற்படையினர் மாலையில் விளையாடுவதற்குக்கூட ஆலய வளாகத்தையே பயன்படுத்துகின்றனர். ஏற்கனவே ஆலய வளாகம் உள்ளடங்கலாக நில சுவீகரிப்பு செய்வதற்கு கடற்படையினர் முனைந்தனர். நிலஅளவை திணைக்களத்தினர் அளவீடு செய்ய வந்தபோது மக்களின் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டிருந்தது. எனவே எங்களுக்கு சுந்திரமாக வழிபாடு செய்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். "அங்கு உள்ள கடற்படையினர் தமது படைமுகாமை இடம்மாற்றுவதற்கு இடம் கோரியிருந்தனர். கடந்த வருட இறுதியில் மாற்று இடம் அடையாளப்படுத்தப்பட்டது. இருப்பினும் இதுவரை முகாமினை மாற்றுவதற்கான எந்த நடவடிக்கையையும் கடற்படை எடுத்ததாகத் தெரியவில்லை" என்று பூநகரி பிரதேச செயலாளர் தெரிவித்தார். (4-6)

### வாக்குரிமையைத் தவறவிடாதீர்

## தேர்தல்கள் ஆணைக்குழு செயலக ரீதியாக கருத்தமர்வு

அச்சுவேலி, ஜூன் 10
"வாக்காளர்கள் தமது வாக்குரிமையைத் தவறாமல் பயன்படுத்த முன்வர வேண்டும். வாக்குரிமை ஒவ்வொருவரினதும் இறைமை. வாக்காளராகப் பதிவு செய்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அதனை தவறவிட்ட பின்னர் கவலைப்படுவதில் அர்த்தமில்லை".
இவ்வாறு கூறினார் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட ஆணைக்குழுவின் அபிவிருத்தி அலுவலர் கே.கோகுலராஜன்.
தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலஉபாயதிட்டத்தின் கீழ் நடைபெற்ற கருத்தரங்கு ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் நடைபெற்றது.
கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தல்களில் வாக்குக்களை செல்லுபடியாகும் விதத்தில் பயன்படுத்துவதன் மூலமாக தமக்கு விருப்பமான பிரதிநிதியையும் தெரிவு செய்ய முடியும். வாக்காளர்கள் தேர்தல்களின் போது வாக்களிப்பதைத் தமது தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும்.
இலங்கையில் நடைபெற்ற எந்தவொரு தேர்தலிலும் 100 வீதம் வாக்களிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை:

> “ இலங்கையில் நடைபெற்ற எந்தவொரு தேர்தலிலும் 100 வீதம் வாக்களிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

75 வீதத்துக்குக் குறைந்தவர்களே வாக்களித்து உள்ளனர். ஏனையவர்கள் தமது வாக்குரிமையை அளிக்கத் தவறிவிட்டனர். வாக்குஅளிக்காமல் விடுவதும் உரிய முறையில் வாக்களிக்காமல் வர்க்குகளை செல்லுப்படியாகாமல் செய்வதும் தமது இறைமையை துஷ்பிரயோகம் செய்வதாக அமையும்.
எதிர்வரும் ஜூன் மாதம் 18 வயதுக்கு வந்ததும் ஒவ்வொருவரும் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். வாக்குரிமை மூலமே குறித்த இடத்தில் வசிக்கின்றோம் என்ற வதிவிட உரிமையை அத்தாட்சிப்படுத்த முடியும். வதிவிடம் அத்தாட்சிப் படுத்தப்படாவிடில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போவதுடன் வேறுபல தேவைகள், வசதிகளை நிறைவு செய்யமுடியாமல் போய்விடும்.
வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு முன்னர் வாக்களிக்கும் முறையை உரிய முறையில் அறிந்து கொள்ள வேண்டும். அல்லது வாக்களிப்பு நிலையத்தில் உரிய அலுவலர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.
ஜனநாயக முறையில் தேர்தல் மூலமாக எமது பிரதி நிதிகளைத் தெரிவு செய்வதன் மூலமாக எமது பிரதே சங்களை அபிவிருத்தி செய்ய முடியும். பயன்படுத்தாமல் விட்டுவிட்டு தமது பிரதேசம் அபிவிருத்தி அடையவில்லை என்ப புலம்புவதில் அர்த்தமில்லை" - என்றார். (4-11)

## கையளிக்கப்பட்ட காணிகளுக்கு எல்லைக் கற்கள் நடுவது ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூன் 10
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கிய காணிகள் அளந்து எல்லைக்கல் நடும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கடந்த பல வருடங்களாகக் காணி அனுமதிப்பத்திரம் பெறாத உரிமையாளர்களின் காணிகள் தொடர்பில் விசாரணைகள் சில வாரங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி காணித் திணைக்களத் [illegible] ரியவர்களுக்குக் காண [illegible] திரங்களை வழங்கியிருந்தனர். அவ்வாறு வழங்கப்பட்ட காணிகள் மற்றும் ஒழுங்கைகளுக்கான எல்லைக்கற்களே நடப்பட்டு வருகின்றன. விரைவில் அந்த நடவடிக்கை நிறைவடைந்து [illegible] (4-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை தேவை

## ஐ.தே.கவிடம் கோருகிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, ஜூன் 10
நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத் துள்ளது. அத்துரலிய ரத்ன தேரருக்கும், ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் இடையில் அண்மைக் காலமாக கடும் முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்ற நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினராகச் செயற்பட்டு வந்த ரத்ன தேரர் கட்சியின் ஒழுக்கவிதிகளை மீறியுள்ளதாகக் கட்சியின் தலைவர் ஹெடில்லே விமலசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபிர் ஹாசிமிடம் ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத் துள்ளது. உத்தியோகபூர்வ அடிப்படையில் இந்தக் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

அத்துரலிய ரத்ன தேரர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# அர்ஜுனவின் முடிவை மாற்றினார் சமரசிங்க



கொழும்பு, ஜூன் 10
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்போவதில்லை என்று துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அர்ஜுன ரணதுங்க துறைமுக அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றிருந்தன. அதற்கான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் புதிதாகத் துறைமுக அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் மஹிந்த சமரசிங்க, முன்னைய அமைச்சர் அர்ஜுனவின் தீர்மானத்தை கிடப்பில் போடும் முடிவில் உள்ளார். அதற்குப் பதிலாகச் சீன நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கூட்டு வர்த்தக முயற்சியாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் அவர் ஆராயத் திட்டமிட்டுள்ளார்.

இது தொடர்பாகச் சீன நிறுவனம் ஒன்றுடன் இரண்டு தடவைகள் கலந்துரையாடியிருப்பதாகவும், எந்தக் கட்டத்திலும் நாட்டுக்கு இழப்பு ஏற்படும் வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்கப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (த)

# அழிவடைகிறது பௌத்த இனம்

## கந்தளாய் விபஸ்ஸி தேரர் கவலை

கொழும்பு, ஜூன் 10
நாளுக்கு நாள் நாட்டில் பௌத்த இனம் அழிவடைந்து வருவதாக கந்தளாய் நீலபொல விகாரையின் விகாராதிபதி கந்தளே விபஸ்ஸி தேரர் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்குள்ள சிங்களவர்களுக்குப் பௌத்த கொள்கையொன்று இல்லை. எமது நாட்டுக்கு அழிவு காலம் விரைவில் உள்ளது. இதற்குச் சட்ட ரீதியில் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றை முன்னெடுக்காமல் சீர்செய்ய முடியாது.

இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்தால், சிங்கள இனம் எதிர்காலத்தில் அழிந்தே போகும்.

எனைய சமூகத்தவர்களுடன் போட்டி நிலைமையொன்று இல்லாதிருப்பினும், பௌத்த மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கின்றது. இது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது.

ஒரு சிங்களக் குடும்பத்தில் இன்று இராணுவத்தில் சேர்வதற்கு இளைஞன் ஒருவன் இல்லை.

விகாரையில் வழிபடுவதற்கு ஒரு இளைஞன் இல்லை. அப்படியொரு இளைஞன் இருந்தாலும், அவன் போதையுற்ற நிலையில் வீதியில் இருப்பான்.

எது எப்படியோ சிங்கள இனம் குறைந்து செல்கின்றது. மற்ற இனம் அதிகரிப்பது என்பதையிட்டு நான் பொறாமை கொள்ளவில்லை. அதற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு வெற்றி கொள்வதற்குப் போட்டியொன்று இல்லை.

தோல்வியடையச் செய்வதற்கு எவரும் இல்லை. இருப்பினும், பௌத்த கலாசாரமும், சிங்களவர்களும் எதிர்காலத்தில் அழிந்தே செல்கின்றனர் என்றார். (த)

# சொகுசு வாகனச் சாரதிகளிடம் பணம் பறிக்கும் மர்மக் கும்பல்

## பொலிஸ் தலைமையகம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 10
வெளியிடங்களிலிருந்து கொழும்புக்கு வரும் சொகுசு வாகனங்களைத் தங்களது வாகனங்களால் வேண்டுமென்றே மோதி விபத்தை ஏற்படுத்தியபின் சொகுசு வாகனங்களில் வந்தவர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் கும்பலொன்று கொழும்பில் திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாகவும், பொதுமக்கள் இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ளவேண்டுமெனவும் பொலிஸ் தலைமையகம் எச்சரிக்கை செய்துள்ளது.

கொழும்பிலும் அதை அண்டியுள்ள பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிகளில் தங்களது ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார்களுடன் காத்திருக்கும் இந்தக் கும்பல் தங்களது வலையில் சிக்கும் சொகுசு வாகனங்களை வேண்டுமென்றே மோதுகின்றன.

விபத்துக் காரணமாக அந்த வாகனங்கள் நிறுத்தப் பட்டதும் அந்த வட்டாரங்களில் கூடும் கும்பல் விபத்துக்கான காரணத்தைச் சொகுசு வாகனக் காரர்கள் மீது சுமத்தி அவர்களை மிரட்டுவதுடன் நட்டஈடாக பெருந்தொகைப் பணத்தைக் கறந்து வருவதாகக் கூறப்படுகிறது.

அவ்வாறானவர்களிடம் சிக்குபவர்கள் உடனடியாகப் பொலிஸ் அவசர அழைப்புடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த)


# மரண அறிவித்தல்கள்

## சண்முகரெத்தினம் பூங்காவனம்

(சின்னம்மா)

பிறப்பு :- 21.03.1947 இறப்பு :- 08.06.2017

புங்குடுதீவு, ஏழாம் வட்டாரம், ஊரதீவை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு முதலாம் வட்டாரம் பெருங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா என அழைக்கப்படும் சண்முகரெத்தினம் பூங்காவனம் 08.06.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்
சபாபதி குடும்பம்
(லக்ஸனா மிக்சர்)

077 266 9902, 077 899 4886

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 12 . 1948

மறைவு 07 . 06 . 2017

## கணபதிப்பிள்ளை கணநாதன்

175, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கு, சுன்னாகத்தை வதிவிடமாகவும், கனடா ரொறொன்ரோவை இருப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணநாதன் (அபிராமி மரக்காலை Transport உரிமையாளர்) 07.06.2017 புதன்கிழமை இலங்கையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் பாசமிகு மகனும், ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னைநாள் ஆசிரியர் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - தங்கமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலவேணியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன், வாசுகி, பாலாம்பிகை, நிரோஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷேளி, காந்திதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், வைரவநாதன் (இலங்கை), ஜெயக்குமார் (டென்மார்க்), ஸ்ரீரங்கநாதன் (பிரான்ஸ்), ரவீந்திரநாதன் (பிரான்ஸ்), சிவயோகநாதன் (கனடா), பிறேமநாதன் (ராசி சில்க் ஹவுஸ் - கனடா), அருந்தவநாதன் (கனடா), காந்திமலர் (இலங்கை), புஸ்பமலர் (டென்மார்க்), இரஞ்சிதமலர் (கனடா) ஆகியோரின் அருமைமிகு சகோதரனும், துரைச்சாமி, அநுராதா, பிரதிமாதேவி, கௌரிதேவி, விஜித்தா, ஜெயந்தினி, மகேந்திரன், தர்மராசா, ஜெயரட்ணம், கமலவேணி, ஞானவேணி, சுகுணவீரன், பூங்கொடி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சகானா, ஹரிஷான், விசாகன், ஜசீகன், கார்த்திகேயன் ஆகியோரின் அன்புமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊரெழு மேற்கு, சுன்னாகத்தில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கணபதிப்பிள்ளை பிறேமநாதன் - (சகோதரன் - கனடா- 416 264 1939 (ராசி சில்க் ஹவுஸ்), கணபதிப்பிள்ளை சிவயோகநாதன் - (சகோதரன் - கனடா- 416 436 8002), பாலவேணி கணநாதன் - (இலங்கை - 01194 7636 91687), நக்கிரன் - (இலங்கை - 01194 779 046 207)

## மதுமதி செல்வராசா

(மது அக்கா)

(கொக்குவில் வளர்மதி முன்பள்ளி தலைமை ஆசிரியர்)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட மதுமதி செல்வராசா (மதுஅக்கா) 08.06.2017 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் Pastor ஜேசன் ஜெ. செல்வராசா (Pastor Assembly of God chavakachcheri, இயக்குனர் கொழும்பு இறையியல் கல்லூரி Cts) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் வாமதேவன் மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கு.டெ செல்வராசா மற்றும் Phoep ராஜலக்ஷ்மி (ஆஸ்திரேலியா) தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மதிஅமுதனின் சகோதரியும் ஜோஅன்னா (சென் ஜோன்ஸ் கல்லூரி Staff), ஜேன் மதூஷா (மருத்துவகல்லூரி பங்களாதேஷ்), ஜொனத்தன் மிர்கேஷ் (HNB Jaffna) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜோன் பிரியந்த் அவர்களின் அத்தையும் திஷான் திலீபன் (London) ஆகியோரின் மாமியும் கீதாஞ்சலி, ருபாஞ்சலி, டங்கன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (10.06.2017) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 14,இராசாவின் தோட்டம் அசெம்பிளி ஒவ்கொட் திருச்சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்க ஆராதனை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொட்டடி கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32/1, சுண்டிக்குளி விதானையார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபால ஜூலை 13 பங்களாதேஷ் பயணம்



கொழும்பு, ஜூன் 10
பங்களாதேஷ் பிரதமர் ஷிக் ஹஸினாவின் அழைப்பை யேற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி அந்த நாட்டுக்கு உத்தியோகபூர்வப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார். 16ஆம் திகதிவரை அவர் அங்கு தங்கியிருப்பார்.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை இடருக்கு பங்களாதேஷ் ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்களை நிவாரண உதவியாக வழங்கியிருந்தது எனவும், அந்த உதவியைத் தொடர்ந்து அரச தலைவரை தனது நாட்டுக்குப் பயணம் செய்யுமாறு பங்களாதேஷ் தலைமை அமைச்சர் அழைப்பு விடுத்திருப்பதாகவும் இலங்கையிலுள்ள பங்களாதேஷ் தூதுவர் ரிபல் அப்துல்லா தெரிவித்தார்.

அரச தலைவரின் இந்தப் பயணத்திபோது இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் பல கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (து)

# எண்ணெய்த் தாங்கிகள் மூலம் உள்நாட்டில் இலாபம் ஈட்டலாம்

## பெற்றோலிய தொழிற்சங்க சம்மேளனம் அரசுக்கு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 10
திருகோணமலையிலும் அம்பாந்தோட்டையிலும் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை வெளிநாட்டவர்களுக்கு வழங்காமல் உள்நாட்டிலேயே இலாபமீட்ட முடியும் என பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழிமுறைகள் பற்றிய அறிக்கையொன்றை அரசுக்குச் சமர்ப்பிக்கப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கச் சம்மேளனம் முடிவ செய்திருப்பதாக. சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் டீ.ஜே.ராஜகருண தெரிவித்தார்.

அரசின் வேண்டுகோளின்படி தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையை பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மூலமாக அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகள் மூலம் அநுராதபுரம், பொலநறுவை, வடமேல் மாகாணம், குருநாகல் ஆகிய பகுதிகளுக்கு எரிபொருள் விநியோகத்தை இலகுவாகச் செய்யலாம்.

இதன்மூலம் சுமார் 100 கோடி ரூபாவைச் சேமிக்கலாம். அத்துடன், தாமதக் கட்டணங்கள், பராமரிப்புச் செலவுகள் போன்றவையும் கணிசமாகக் குறையும்.

சரியான முறையில் நிர்வாகம் செய்தால் இந்த எண்ணெய்த்தாங்கிகளை வெளிநாட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டிய அவசியமே கிடையாது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக ராஜகருண குறிப்பிட்டார். (து)

# சப்ரகமுவ மாகாணத்தில் 26 ஆயிரம் மாணவர்களின் புத்தகங்கள் இடரால் நாசம்

கொழும்பு, ஜூன் 10
அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 26 ஆயிரம் மாணவர்களின் பாடப் புத்தகங்களும் ஏனைய கற்றல் உபகரணங்களும் அழிவடைந்திருப்பதாக அந்த மாகாணத்தின் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான புதிய பாடப் புத்தகங்களையும், ஏனைய கற்றல் உபகரணங்களையும் வழங்குவதற்கு மாகாணக் கல்வியமைச்சு ஏற்பாடு செய்துவருவதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், இந்த வெள்ளப்பெருக்கால் அந்த மாகாணத்திலுள்ள 81 பாடசாலைகளின் தளபாடங்களும், ஏனைய உபகரணங்களும் சேதமடைந்துள்ளதுடன், பல பாடசாலைகளின் கட்டடங்களும் சேதமாகியுள்ளன. அவற்றை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கான துரித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# பதுளையில் 127 ஏக்கர் காணி ஆலயத்திடம் கைமாறும் நிலை

## அச்சத்தில் மலையகத் தொழிலாளர்கள்

பதுளை, ஜூன்10
பதுளை லுணுகலை, சோலன்ஸ் பெருந்தோட்டத்தில் 127 ஏக்கர் தேயிலைக் காணிக்கு, அந்தப் பகுதி பத்தினியம்மன் ஆலய நிர்வாகம் உரிமை கோருவதால், 90 மலையகத் தொழிலாளர் குடும்பங்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது:
ஹப்புகஸ்தன்னை பிளான்டேசன் நிர்வாகத்திலேயே இந்தத் தோட்டம் இயங்கியது. எனினும் அந்தப் பகுதி பத்தினியம்மன் ஆலயத்துக்குச் சொந்தமானதாகும்.

கடந்த இரு வருடங்களாக காணிக்கான குத்தகை வரி செலுத்தப்படவில்லை. இதனையடுத்து கடந்த 2017 மே மாதம் 31ஆம் திகதியுடன் ஒப்பந்தம் நிறைவுறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட 127 ஏக்கர் தேயிலைக் காணியும் அப்பகுதி பத்தினியம்மன் ஆலயத்திற்கு உரித்தானதென்று கூறித் துண்டுப்பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டது.

இதனால் அங்கு வாழும் தோட்டத் தொழிலாளர்கள் தமது இருப்பு மற்றும் வாழ்வாதாரம் குறித்தும் அச்சமடைந்துள்ளனர்.

அதிக விளைச்சலைக் கொடுக்கும் பகுதியாக இந்தத் தோட்டக்காணி விளங்குகின்றது. ஆலய நிர்வாகத்தின் அழுத்தங்களை அடுத்து தோட்ட நிர்வாகம் லுணுகலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளதுடன், நீதிமன்ற நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளது.

எனவே, இப்பகுதி அரசியல் பிரதிநிதிகள் மாகாண சபையிலும், நாடாளுமன்றத்திலும் பிரேரணைகளைச் சமர்ப்பித்து குரல் கொடுக்கவேண்டும்.

இதனை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டுத் தோட்ட மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனப் பல்வேறு தரப்புகளிடமிருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (து-ய-41)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 05 . 1960



மறைவு
18 . 05 . 2011

### அமரர் இராமநாதன் லோகநாதன்

(முன்னாள் செயலாளர் - காரைநகர் பிரதேசசபை)

திதி:- அபரபக்க பிரதமை (10.06.2017)

சென்றதுவோ ஆறு ஆண்டுகள் செல்லவில்லை என் துயரம்
காலத்தின் கட்டளையோ! கடவுளின் வேண்டுகோளோ!
சொந்தங்கள் பல இருந்தும் சொல்லியழ யாருமில்லை
உள்ளத்து நினைவலைகள் உறங்காதே எனைவிட்டு...
ஓம் சாந்தி!

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

உங்கள் நினைவு...
அன்பு மனைவி ...

## 45ஆம் நாள் நினைவலைகள்





### கணேசமூர்த்தி கலைச்செல்வன்

(தனியார் பேருந்து நடத்துநர் - கிளிநொச்சி)

பிறப்பு 07.11.1983 இறப்பு 28.04.2017

### கலைச்செல்வன் வனிதா

பிறப்பு 14.10.1987 இறப்பு 01.05.2017

எமது பிள்ளைகளின் மரணச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறிய உற்றார். உறவினர். நண்பர்கள். விநாயகர் சங்கம் மற்றும் தனியார் பேருந்து சங்க நிர்வாகிகள் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கௌதாரிமுனை, பூநகரி.

கணேசமூர்த்தி குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துராஜவெல குப்பைமேட்டால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

## மனித உரிமை குழுவில் முறையீடு

கொழும்பு, ஜூன் 10

முத்துராஜவெல பிரதேசத்தில் கொழும்பு நகரத்தின் குப்பைகள் குவிக்கப்பட்டு வருவதால் அப்பகுதியில் தொற்றுநோய்கள் பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு மாநகர சபை ஆணையாளர் உட்பட 11 அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் ஒரு சில அரசியல்வாதிகளுக்கும் எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ராகம, வெலிசரவத்த நலன்புரிச் சங்கம் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய இந்த முறைப்பாட்டின் சாராம்சம் வருமாறு:

கொழும்பு நகரில் நாளாந்தம் சேகரிக்கப்படும் சுமார் 800 தொன் குப்பைகள் கொழும்பு மாநகர சபை ஆணையாளரின் உத்தரவின்படி முத்துராஜவெல பிரதேசத்தில் குவிக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் இந்தப் பகுதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் நாசமாகியுள்ளது.

இதனால் நீர்கொழும்பு வீதி, வத்தளை, மஹபாகே, நாகொட, கந்தான போன்ற பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன், எலிகள், நுளம்புகள், ஈக்கள் ஆகியவற்றின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

நுளம்புகளால் டெங்கு நோயின் தீவிரம் அதிகரித்துள்ளது. அத்துடன், மழைக் காலங்களில் உஸ்வெட்டகெயாவ, திக்ஓவிட்ட, லெகந்த கெரவலப்பிட்டிய போன்ற பகுதிகளில் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

எனவே, இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டு முத்துராஜவெல பிரதேசவாசிகளுக்குத் தீர்வொன்றைப் பெற்றுத்தரவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

# பொய் முறைப்பாட்டின் பேரில் மாணவனை நீக்கிய பாடசாலை நிர்வாகத்துக்கு அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 10

நுகேகொடை லைசியம் சர்வதேச பாடசாலையில் கல்வி கற்றுவந்த மாணவன் ஒருவரைக் காரணமின்றிப் பாடசாலையிலிருந்து விலக்கியமை தொடர்பில் விளக்கமளிக்குமாறு அந்தப் பாடசாலையின் தலைவரும் உயர் கல்வி இராஜாங்க அமைச்சருமான மொஹான் லால் கிரேரு உட்பட மூவ்ரை இம்மாதம் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நுகேகொடை மாவட்ட நீதிவான் சஹன மாப்பா பண்டார உத்தரவிட்டுள்ளார்.

இந்த மாணவனின் தந்தையான டபிள்யூ.பீ.இந்திரஜித் தாக்கல் செய்த வழக்கில், தனது மகன் ஆரம்ப வகுப்பு முதல் உயர்தரம் வரை இந்தச் சர்வதேசப் பாடசாலையில் கல்விகற்று வந்ததாகவும், அடுத்த வருடம் லண்டன் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த சமயம் பாடசாலை நிர்வாகம் அவரைப் பொய் முறைப்பாடொன்றின் அடிப்படையில் பாடசாலையைவிட்டு விலக்கியிருப்பதாகவும் முறையிட்டுள்ளார்.

அத்துடன், தனது மகனுக்கு லைசியம் சர்வதேசப் பாடசாலையின் வத்தளை அல்லது யக்கல கிளையில் அனுமதி வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முறைப்பாட்டாளரின் மனுவைப் பரிசீலித்த நீதிவான், பிரதிவாதிகள் மூவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளார். (த)

# 7 இலட்சத்து 26 ஆயிரம் வழக்குகள் நிலுவையில்

## நீதியமைச்சு தெரிவிப்பு

2016 டிசெம்பர் 31ஆம் திகதிவரை இலங்கை நீதிமன்றங்களில் மொத்தமாக 7 இலட்சத்து 25 ஆயிரத்து 944 வழக்குகள் தேங்கிக் கிடப்பதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

நீதியமைச்சின் 2016ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி உயர்நீதிமன்றத்தில் 3,566 வழக்குகளும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 4,837 வழக்குகளும், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 5,973 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றங்களில் 1,42,749 வழக்குகளும், நீதிவான் நீதிமன்றங்களில் 5,35,644 வழக்குகளும், தொழில் நியாயச் சபைகளில் 5,031 வழக்குகளும், 188 வழக்குகள் காதி சபையிலும், 7,832 வழக்குகள் காதி நீதிமன்றங்களிலும் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு தேங்கியுள்ள 7,25,944 வழக்குகளில் அதற்கு முந்திய வருடங்களில் நிலுவையாக இருந்த 6,99,784 வழக்குகள் உள்ளடங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

# மின்சார சபையின் அசமந்தப் போக்கு

## வாடிக்கையாளர்கள் பெரும் சிரமம்

கொழும்பு, ஜூன் 10

பொலநறுவை மாவட்டத்திலுள்ள சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மின்பாவனையாளர்களுக்கு மாதாந்தம் அனுப்பவேண்டிய கட்டணப் பட்டியலை அனுப்பாமல் பல மாதங்களுக்கான கட்டணங்கள் சேர்க்கப்பட்டு ஒரேயடியாகப் பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. இதனால் மின் கட்டணத்தைச் செலுத்துவதில் திக்குமுக்காடி வருவதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இவ்வாறு திரட்டப்பட்டு அனுப்பப்படும் கட்டணப் பட்டியல் 8 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரை உள்ளதால் வாடிக்கையாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வாடிக்கையாளர்கள் உள்ள இந்த மாவட்டத்தில் 40 மானிவாசிப்பாளர்கள் மாத்திரமே உள்ளனர் எனவும், அவர்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையே மானி வாசிப்புக்கு வருவதாகவும் வாடிக்கையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (த)

# சைட்டம் விரைவில் அரசுக்குக் கீழ் வரும்

## அதன் தலைவர் நெவில் பர்னாந்து தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) விரைவில் அரசின் நிர்வாகத்துக்குக் கீழ் வரவுள்ளதாக அந்தக் கல்லூரியின் தலைவர் மருத்துவர் நெவில் பர்னாந்து தெரிவித்தார்.

தற்போது 3.5 பில்லியன் ரூபாவுக்கு மதிப்பிடப்பட்டுள்ள இந்தக் கல்லூரி அடுத்த இரு வாரங்களில் அரசால் பொறுப்பேற்கப்படும் எனவும், இது தொடர்பில் தனக்கும் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவுக்குமிடையில் நடந்த கலந்துரையாடலின் பின் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசின் 51 வீதப் பங்குகளுடனும் பங்குச் சந்தையின் 49 வீதப் பங்குகளுடனும் சைட்டம் பொறுப்பேற்கப்படும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

# குற்றம் நிரூபணமானால் நாமலுக்கு 20 வருடச் சிறை

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மீது சுமத்தப்பட்டுள்ள பண மோசடிக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 20 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

30 மில்லியன் ரூபா பணத்தை தவறான முறையில் பெற்றுகொண்டமை தொடர்பில் நாமலுக்குஎதிராக 11குற்றச்சாட்டுக்கள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் நாமல் ராஜபக்ச சிறை செல்வது உறுதி எனக் கூறப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் நாமலுக்கு எதிரான குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய முதல் முறையாக உயர்நீதிமன்றத்தில் முன்னிலையான நாமல் ராஜபக்ச உட்பட மூவருக்குக் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்கவினால் கடந்த 6ஆம் திகதி குற்றப் பத்திரிகை ஒப்படைக்கப்பட்டது. (த)

# சிறுநீரக நோய் குறித்து ஆராய ஆஸ்திரேலியக் குழு வருகிறது

கொழும்பு, ஜூன் 10

இனங்காணப்படாத சிறுநீரக நோய் 11 மாவட்டங்களில் தீவிர அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த ஆஸ்திரேலிய ஒத்துழைப்பை அரசு கோரியுள்ள நிலையில், அந்த நாட்டு ஆய்வுக் குழு இலங்கை வரவுள்ளது.

இனங்காணப்படாத சிறுநீரக நோய் இலங்கையில் காணப்படும் முக்கிய தொற்றா நோய்களுள் ஒன்றாக மாறியுள்ளது. 11 மாவட்டங்களிலும் 60 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இந்த நோய் பரவியுள்ளது.

ஆஸ்திரேலிய அணு விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனம் இந்த நோயின் மூலகாரணத்தைக் கண்டறியும் ஆராய்ச்சிகளில் இலங்கை அரசுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது. இதனடிப்படையில், ஆஸ்திரேலிய ஆய்வு மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்து குறித்த மாவட்டங்களில் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (த)

**உடன் வாடகைக்கு**

இராசபாதை வீதியில் UNHCR
களஞ்சியத்துக்கு அருகில் அமைதியான சூழலில்
4½ பரப்புக்காணியுடன் 3 அறை, சமையலறை,
வரவேற்பறையுடன் சகல
வசதிகளும் உள்ள வீடு உடன் வாடகைக்குண்டு.

**077 729 9031**

**மல்லாகம் வீடு விற்பனைக்கு உண்டு**

மல்லாகம் K.K.S வீதியில் அமைந்துள்ள
விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகில்
20 3/4 பரப்பு காணியுடன் அமைந்த வீடு
விற்பனைக்கு உள்ளது. இந்தக் காணி
தோட்டம் செய்யவோ அல்லது மண்டபங்கள்
கட்டுவதற்கோ மிகவும் உகந்தது.
தொடர்பு கொள்ள.

**021 321 9802/ 077 871 4374**

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவகுடும்பம், 30.05.1987,
செவ்வாய் தோசமற்ற, கிரகபாவம் 16இற்கு கீழ்
B.B.A பட்டதாரி, அரசதொழில் அபிவிருத்தி
உத்தியோகத்தர் (D.O) மணமகனுக்கு தொழில்
புரியும் பட்டதாரி மணமகளைப் பெற்றோர்
எதிர்பார்க்கின்றார்கள். (CS 4766) (14)

**076 803 5612**

**வேலையாள்கள் தேவை**

K.K.S. வீதியில் இயங்கும் சிகை
அலங்கரிப்பு நிலையத்திற்கு (சலூன்)
வேலையாள்கள் உடன் தேவை.
40,000/= இற்கு குறையாத வேதனம்
வழங்கப்படும். (CS 4774) (14)

**077 131 0927/ 075 227 9068**



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு,
உள்நாடு ஆகிய சகல திருமணங்களும்
எம்மால் செய்து கொடுக்கப்படும்.
T.P: 077 9733 183
021 227 1968

**VACANCY**

யாழ் திருநெல்வேலி சந்தியை அண்மித்த பிரதேசத்தில் உள்ள பிரபல
நகைக்கடை ஒன்றுக்கு
DATA ENTRY OPERATER பதவிக்கு
1. ஆண்கள் (வயது எல்லை 18 -25)
2. தகைமை (O/L , A/L)
3. கணினி அறிவு மிக முக்கியம்
4. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
பொருத்தமானவர்கள் தமது சுயவிவரக்கோவையை மேற்படி மின்னஞ்சல்
முகவரிக்கு Rajjewel2002@gmail.com 16.06.2017 இற்கு முன் அனுப்பி
வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 786 1677**

**மணமகள் தேவை**

" சொர்க்கம் திருமணசேவை " கனடாவில் Engineer ஆகப் பணிபுரியும் 40 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 29 வயதுடைய றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த அழகான மணமகனுக்கு அழகான படித்த மணமகளை தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 30,36 வயதுடைய மணமகன்களுக்குத் தகுந்த மணமகள்களைத் தேடுகின்றோம்.

**T.P & Viber - 0014 166 661 855, 0016 4750 43336**

**Chundikuli Girls' College
Old Girl's Association, Jaffna**

**ANNUAL GENERAL MEETING AND
Fellowship Lunch**

*Date :- Saturday 17th June 2017*
*Venue :- College Hall*

Agenda
**9.00 a.m** :- Holy Communion & Worship Service at St.John the Baptist's Church, Chundikuli.
**11.00 a.m** :- A.G.M
**12.30 p.m** :- Lunch and Games

**Lunch Tickets - Rs.350/=**
**All old Girls are cordially invited**

**- Secretary -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொசன் பூரணை தினத்தன்று

# அநுராதபுரத்தில் திரண்ட 12 லட்சம் யாத்திரிகர்கள்

கொழும்பு, ஜூன் 10
கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்ட பொசன் பூரணை தினத்தன்று அநுராதபுரத்தில் சுமார் 12 இலட்சம் யாத்திரிகர்கள் திரண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புராதனப் பெருமை வாய்ந்த அநுராதபுரத்தின் அட்டமஸ்தானய, மிஹிந்தலை, ருவன்வெலி, தந்திரிமலை, அவுகன மற்றும் விஜிதபுர உட்பட ஏனைய விகாரைகளில் மக்கள் பெருமளவில் திரண்டிருந்ததாகவும் அன்றைய தினம் காலையில் மாத்திரம் ருவன்வெலி விகாரையில் சுமார் இரண்டு இலட்சம் யாத்திரிகர்கள் குழுமியிருந்ததாகவும் விழா ஏற்பாட்டுக் குழு தெரிவித்தது.

சகல விகாரைகளிலும் மத அனுஷ்டானங்களும், தானம் வழங்கும் நிகழ்வுகளும் நடைபெற்றதுடன் யாத்திரிகர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டிருந்ததாகவும் விழா ஏற்பாட்டுக் குழு கூறியுள்ளது. (த)

# இலங்கை எல்லைக்குள் தாக்குதல் ஆயுதங்களை அனுமதிக்கவேமாட்டோம்

## அமைச்சர் ரவி இந்தியாவில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
எந்த நாட்டின் தாக்குதல் ஆயுதங்களாக இருந்தாலும் அவை இலங்கை எல்லைக்குள் அனுமதிக்கப்படமாட்டாது என்று இலங்கை அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



இந்தியப் பயணத்தின் முடிவில் புதுடில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

இலங்கையில் தரித்துச் செல்வதற்குச் சீன நீர் மூழ்கிக்கு அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாகச் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அயலுறவு அமைச்சர், "கப்பற் பாதைகள் என்ற வகைக்குள், கடற்படை மற்றும் தாக்குதல் ஆயுதங்களை உள்ளடக்க முடியாது. இலங்கைக் கடற்பரப்புக்குள் தாக்குதல் ஆயுதங்கள் வரவேற்கப்படாது. நாம் எந்தவொரு நாட்டையும் குறிவைக்கவில்லை" என்று குறிப்பிட்டார். (த)

பெறுகை அறிவித்தல்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை- 2017

1. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபாரம் அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 12.06.2017 தொடக்கம் 30.06.2017 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 30.06.2017 ஆம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
6. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 21.06.2017 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
7. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | தோப்பு வீதி புனரமைத்தல் ஏழாலை | 1.51 | 1½ மாதம் | C9 | 16000.00 |
| 2 | ஞானவைரவர் வீதி புனரமைத்தல் மயிலங்காடு | 1.43 | 1½ மாதம் | C9 | 15000.00 |
| 3 | தன்னை வீதி புனரமைத்தல். உடுவில் | 3.75 | 02 மாதம் | C8 | 38000.00 |
| 4 | மல்வம் 2ம் குறுக்கு வீதி புனரமைத்தல் | 1.76 | 1½ மாதம் | C9 | 18000.00 |
| 5 | விளாங்கனை வீதி புனரமைத்தல் கந்தரோடை | 3.88 | 02 மாதம் | C8 | 39000.00 |
| 6 | சந்தை வீதி காப்பெற்றிடல், சுன்னாகம் | 3.22 | 02 மாதம் | C8 | 33000.00 |

தி.சுதர்சன்
தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.

# தமிழரை பாதுகாக்க தவறிய சம்பந்தனை தண்டிக்கவேண்டும்

## கூறுகிறார் ஆனந்தசங்கரி



கொழும்பு, ஜூன் 10
இறுதிப் போரின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்க்கமற்ற சில முடிவுகள் காரணமாகத்தான் வன்னிக்குள் சிக்குப்பட்டிருந்த அப்பாவி மக்களைப் பாதுகாப்பாக மீட்கமுடியாமல் போனது. இதற்காகக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனைத் தண்டிக்கவேண்டும்

இப்படித் தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி.

பல தடவைகள் நான் சொன்ன அறிவுரைகளைக் கேட்காமல் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் கடப்பாட்டிலிருந்து தவறியிருக்கிறீர்கள். இந்தக் குற்றத்திற்காகக் கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் நீங்கள் தண்டிக்கப்பட வேண்டியவர் என்று அவர் இரா. சம்பந்தனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில். ஆற்றிய உரை தொடர்பிலேயே ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது. தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் கலாசாரம் இனியும் தொடரக்கூடாது என இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பில் வீ.ஆனந்தசங்கரி நேற்று அனுப்பியுள்ள நீண்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 7ஆம் திகதி உள்ளூர் ஊடகங்களில், நீங்கள் நாடாளுமன்றில் ஆற்றிய உரை பிரசுரிக்கப்பட்டிருந்தது. படித்தவுடன் அதற்குப் பதில்தரவேண்டும் என்ற தூண்டுதலைக் கட்டுப்படுத்த முடியாமல் இதனை எழுதுகிறேன். உங்களின் உரையில் குறிப்பிட்ட பல விடயங்கள் ஜனநாயகக் கோட்பாடுகள் சம்பந்தமாக உள்ளன. ஜனநாயகம் பற்றிப் பேசும் தார்மீக உரிமை உங்களுக்கு இல்லை. புதிதாக உருவாகி வரும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பது ஒரு புது கலாசாரமாக உருவாகி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளீர்கள். தாராள மனப்பான்மை தன் வீட்டிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது நீங்கள் அறியாததல்ல. நீங்கள் திரும்பத் திரும்ப ஒரே குற்றத்தைப் பல தடவைகள் செய்கின்றமையால் நீங்களும் தண்டிக்கப்பட வேண்டியவரே.

நீங்கள் பதவிகளைத் துறந்திருந்தால் அப்பாவி மக்களை காப்பாற்றியிருக்கலாம்.

2009 மார்ச் மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற அரசியல்கட்சித் தலைவர்கள் அரச தலைவருடனான சந்திப்பைப் புறக்கணிக்காமல், மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை அழைத்துச் செல்லுமாறு அரச தலைவரிடம் வேண்டியிருக்கலாம். ஏப்ரல் மாதம் 10ஆந் திகதி இந்திய அயலுறவி அமைச்சின் செயலாளர் சிவசங்கர் மேனனின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் சென்றிருந்தால் மக்களைக் காப்பாற்றியிருக்கலாம். இவ்வாறு பலவற்றைக் குறிப்பிடலாம் என அதில் குறிப்பிட்டுள்ளார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரணில் மகிந்த பேச்சு

கொழும்பு, ஜூன் 10
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு பேசியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கா சென்ற தலைமை அமைச்சரை, ஜப்பானில் இருக்கும் மகிந்த அவசர தொலைபேசியில் அழைத்துப் பேசியுள்ளார். இதன் போது வளைகுடாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

கட்டாரிலுள்ள இலங்கையர்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டால் அவர்களைநாட்டுக்குஅழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு மகிந்த, ரணிலிடம் தெரிவித்துள்ளார். கட்டாரில் வாழும் இலங்கையர்கள் சிலர் இது தொடர்பில்தன்னிடம்கோரிக்கை முன்வைத்ததாக மகிந்த இதன் போது குறிப் பிட்டுள்ளார். (த)

## கலைஞர்களுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 10
இலங்கையிலுள்ள கலைஞர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த 5 ஆயிரம் ரூபா மாதாந்தக்கொடுப் பனவை 10 ஆயிரமாக அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தக் கொடுப்பனவுக்காக 5 ஆயிரம் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், பல்வேறு துறைகளில் அவர்கள் ஆற்றிவந்த சேவையைப் பாராட்டுவதற்கும், அவர்களது நிதித் தேவைகளைச் சமாளிப்பதற்காகவுமே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

# துன்புறுத்தல்களை இனவாத நோக்குடன் அணுகுவது தவறானது

### வடமாகாணசபை உறுப்பினர் அஸ்மின் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 10
சிறுவர் துன்புறுத்தல்களை இனவாத நோக்குடன் சித்திரிப்பது தமிழ் முஸ்லிம் நல்லிணக்கத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

போருக்குப் பின்னரான வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவுநிலை குறித்தும், மீள்குடியேற்றச் செயற்பாடுகளில் காணப்படும் முன்னேற்றங்கள் குறித்தும் கனேடிய தூதரக அதிகாரி ஜெனீபர் ஹார்ட் மற்றும் வடக்கு முஸ்லிம் சிவில் சமூகத்தவர்கள், அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் கடந்த 6ஆம்திகதி இடம்பெற்ற சிறப்புச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
1980களுக்குப் பிற்பட்ட வடக்கு கிழக்கிலே இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான உறவு திட்டமிட்டுச் சீர்குலைக்கப்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் இரண்டு சமூகங்கள் குறித்தும் பரஸ்பர சந்தேகங்கள் இரண்டு சமூகங்களின் மத்தியிலும் ஏற்படுத்தப்பட்டன. முஸ்லிம்களை தமிழ் மக்களின் எதிரிகளாகவும், தமிழர்களை முஸ்லிம்களின் எதிரிகளாகவும் சித்திரிக்கும் நிகழ்வுகள் ஏராளமாக இடம்பெற்றன. முஸ்லிம் எல்லைக் கிராமங்களைத் தமிழ் ஆயுததாரிகள் அழித்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. உண்மையில் தமிழ் ஆயுததாரிகளா அல்லது கூலிப்படையினரா அத்தகைய செயற்பாடுகளைச் செய்தார்கள் என்று உறுதியான தகவல்கள் எதுவும் கிடையாது. அதே போன்று முஸ்லிம் ஊர்காவல் படையினரால் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் உண்மையில் முஸ்லிம் ஊர்காவல் படையினர்தான் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று எதுவித உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களும் கிடையாது.

இவ்வாறு இரண்டு சமூகங்களுக்கும் இடையில் பகைமை திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. அதன் உச்சக்கட்டமே 1990களில் கிழக்கின் முஸ்லிம் மக்கள் மீதான நாசகாரத் தாக்குதல்களும், வடக்கின் முஸ்லிம் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையுமாகும்.

தமிழ் மக்களின் ஆயுததாரிகள் சற்று நிதானமாகவும் தூர நோக்குடனும் சிந்தித்திருந்தால் இத்தகைய இடைவெளி ஏற்பட்டிருக்காது. இன்றும்கூட அந்தப் பகைமை உணர்வு இரண்டு சமூகங்களுக்கு மத்தியிலும் இருக்கின்றது. அது முற்றாக இல்லாமல் செய்யப்படவில்லை. இருப்பினும் இப்போது இத்தகைய முரண்பாடுகளை இரண்டு சமூகங்களுக்கு மத்தியிலும் மனம்விட்டுப் பேசக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. இதனை நாம் சாதகமாகப் பயன்படுத்தவே முயற்சிக்கின்றோம்.

அண்மையில் மூதூர்ப் பிரதேசத்திலே மல்லிகைத்தீவு கிராமத்தில் இடம்பெற்ற அசிங்கமான சம்பவம் எமது கவனத்தை ஈர்த்திருக்கின்றது. பாலியல் துன்புறுத்தலில் எவர் ஈடுபட்டாலும் அவர்கள் இன, மத, மொழி, வேறுபாடுகளுக்கு அப்பால் தண்டிக்கப்படவேண்டியவர்களே. இதுவே முஸ்லிம் மக்களின் நிலைப்பாடாகும்.

ஆனால் இந்தப்பிரச்சினையை இனவாத நோக்குடன் அணுகுகின்றபோது முஸ்லிம் மக்கள் நீதிக்காகக் குரல்கொடுக்கும் நிலையில் இருந்து பின் தள்ளப்படுகின்றார்கள். இது ஆரோக்கியமானதல்ல. முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற போது அவர்களைக் குற்றவாளியாகக் காண்பது தவறல்ல. அதற்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் குற்றவாளிகளாக மாற்றிவிடக்கூடாது.

புங்குடுதீவிலே வித்தியாவின் கொடூரப் படுகொலையின் போது குற்றவாளி களை அடையாளம் கண்டோமே தவிர ஒட்டுமொத்த புங்குடுதீவு மக்களையோ, அல்லது ஒரு குறித்த சமூகத்தையோ நாம் குற்றவாளிகளாகக் காணவில்லை. எனவே இத்தகைய பக்குவநிலைகள் இரண்டு சமூகங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்போது மாத்திரமே இரண்டு சமூகங்களுக்குமிடையிலான ஆரோக்கியமான நல்லிணக்கம் ஏற்படும். என்றார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தில் காணப்படும் பிரதான சவால்கள் குறித்தும், அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள மீள்குடியேற்றப் பொறிமுறையில் காணப்படும் முக்கிய குறைபாடுகள் குறித்தும் விரிவாகப் பேசப்பட்டது. (த)



## சைட்டத்தால் நேற்று வெறிச்சோடியிருந்தது ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையில் நேற்றுச் சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகப் பிரேரணை முன்வைக்கப்படுவதை ஆட்சேபித்து முதலமைச் சர் உள்ளிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 22 பேர் சபை அமர்வைப் புறக்கணித்திருந்தனர்.

ஊவா மாகாணசபையின் அமர்வு சபைத் தலைவர் ஏ.எம்.புத்ததாச தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமானது. ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பைச் சேர்ந்த முதலமைச்சர் உள்ளிட்ட22பேர்அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

ஜே.வி.பி.னரால் சைட்டத்துக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்படுவதை எதிர்த்தே இவர்கள் அமர்வைப் புறக்கணித்திருந்தனர்.

ஐ.தே.க. உறுப்பினர்களும், ஜே.வி.பி.யின் இரு உறுப்பினர்களுமாக 11பேர் மட்டுமே அமர்வில் கலந்து கொண்டனர்.

இந்தநிலையில், பிரேரணையை முன்வைத்தால் பொறுப்பு வாய்ந்தவர்களிடம் பதிலைப் பெறமுடியாது போய்விடும்என்றும், பிரேரணையை அடுத்துவரும் அமர்வில் சமர்ப் பிக்குமாறும் சபைத் தலைவர் ஏ.எம். புத்ததாச அறிவித்தார். சுமார் இருபது நிமிடங்களே நடைபெற்ற சபை அமர்வு எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-ய-41)

## கட்டாரிலுள்ள இலங்கையர் விவரம் கோருகிறார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 10
அரசியல் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கட்டார் நாட்டிலுள்ள இலங்கையர்கள் முகம்கொடுக்கக் கூடிய பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக அந்த நாட்டிலுள்ள இலங்கையர்களின் முழு விவரங்களைத் திரட்டி அடுத்த செவ்வாய்க்கிழமை தனக்குச் சமர்ப்பிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் தலதா அத்துகோரளவுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

கட்டார் நாட்டில் சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் தங்கியுள்ளனர்.

கட்டார் நாட்டுடன் ஆறு மத்திய கிழக்கு நாடுகள் தங்களது இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்டதைத் தொடர்ந்து அந்த நாடு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையால் அங்குள்ள இலங்கையர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்குமே இந்த அறிக்கை கோரப்பட்டிருப்பதாகவும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடக்கவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அரச தலைவர் செயலகம் தெரிவித்துள்ளது. (த)




இணுவில்
கந்த சுவாமி கோயில்
12 ஆம் திருவிழா மஞ்சத் திருவிழா
விஞ்ஞாபனம்

பகல் நிகழ்ச்சிகள்

காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம்

முற்பகல் 11 மணிக்கு வசந்தமண்டப பூஜை

நண்பகல் 12 மணிக்கு விநாயகர், வள்ளி தெய்வானை சமேதரராய் ஆறுமுகப்பெருமான் உள்வீதி வலம் வருவார்.

பிற்பகல் ஒரு மணிக்கு பகல் திருவிழா நிறைவடையும்.

மாலை 5மணிக்கு வசந்தமண்டபபூசை ஆரம்பமாகி சண்முக அர்ச்சனை நடைபெறும்.

இரவு 7மணியளவில் பிள்ளையார், சிவன், பார்வதி, வள்ளி தெய்வானை சமேதரராய் ஆறுமுகப்பெருமான் வீதி வலம் வருவார்.

அடியார்கள் அனைவரும் சண்முகபெருமானின் திருமஞ்ச காட்சியை கண்டு சண்முகப்பெருமானின் ஆசியை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

12 ஆம் திருவிழா உபயகாரர்களும்
தர்மகர்த்தா சபையினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமெ. அதிபர் தேர்தலில்
# ரஷ்யத் தலையீடு உண்மையானதே
## ஜேம்ஸ் கோமே தெரிவிப்பு

அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யா தலையிட்டது உண்மையே என்று அந்த நாட்டின் நடுவண் புலனாய்வுத்துறையின் (எவ்பிஐ) முன்னாள் இயக்குநர் ஜேம்ஸ் கோமே சாட்சியம் அளித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலின்போது குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவாக ரஷ்யா திரைமறைவு செயல்களில் ஈடுபட்டதாக ஜனநாயக கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதுதொடர்பாக விசாரணை நடத்தினார் ஜேம்ஸ். அவர் கடந்த மே மாதம் 9ஆம் திகதி பணிநீக்கம் செய்யப்பட்டார். இதற்கு அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் முரண்பட்ட விளக்கங்களை அளித்தது. "ஜனநாயக கட்சி அதிபர் வேட்பாளர் ஹிலாரியின் மின்னஞ்சல்களை வெளியிட்டதால் அவர் நீக்கப்பட்டார்" என முதலில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அதிபர் ட்ரம்ப், "அதிபர் தேர்தலில் ரஷ்ய தொடர்புகள் குறித்த விசாரணை விவகாரத்தால் ஜேம்ஸ் கோமே நீக்கப்பட்டார்" எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜேம்ஸ் கோமே அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையின் முன்பு நேற்றுமுன்தினம் முன்னிலையாகி சாட்சியம் அளித்தார். அப்போது ரஷ்யாவின் தலையீடுகளை அவர் உறுதி செய்தார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடுகள் இருந்தது உண்மையே. இது தொடர்பான விசாரணையை நிறுத்த ட்ரம்ப் கோரினார். இது எனக்கு அதிர்ச்சி அளித்தது. என்னை நீக்கியதற்காக அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியதெல்லாமே பொய். என் மீது முதலில் அவதூறுகளை அள்ளி வீசினார்கள். பின்னர் மத்தியபுலனாய்வுத்துறைமீதுவிமர்சனங்களை முன்வைத்தனர். எதற்கும் நான் கட்டுப்படவில்லை. எனவே என்னைப் பணிநீக்கினார்கள்" என கோமே மேலும் தெரிவித்தார். (ம)

# சிறுவன் உயிரிழப்பு;



கரஸ்கஸ், ஜூன் 10

வெனிசுலாவில் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டத்தில் வீசப்பட்ட கண்ணீர்புகைக் குண்டு பட்டதில் 17 வயதுச் சிறுவனான நியோமர் லான்டர் என்பவர் உயிரிழந்தார். இதனால் அங்கு பதற்ற நிலை மேலும் அதிகரித்துள்ளது.

தென்னமரிக்க நாடான வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவை அடுத்து அந்த நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோவைப் பதவி விலக வேண்டும் என்று தலைநகர் கரஸ்கஸ் உள்ளிட்ட ஏராளமான இடங்களில் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. 24 மணிநேரமும் இரவு பகல் எனப் பாராது போராட்டம் நடைபெறுவதால் பதற்றநிலை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களைக் கலைக்க முற்பட்டு வீசப்பட்ட கண்ணீர்புகைக் குண்டு மார்பைத் தாக்கியதாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மூச்சுத் திண

ழுந்தார்.


நியோமரின்

அவருக்கு

## 2 நாள்களில் 230 மக்களை கொன்றது ஐ.எஸ்.ஐ.எஸ்.

ஈராக்கின் மேற்கு மோசூல் நகரில் தமது கட்டுப்பாட்டில் இருந்து தப்பிக்க முற்பட்ட 230 மக்களை கடந்த ஒரு வாரத்தில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக் கொன்றுள்ளது என்று அதிர்ச்சித் தகவல் வெளி வந்துள்ளது. மேற்கு மோசூல் மீட்புப் போர் தற்போது உச்சக்கட்ட நிலையில் நடைபெற்று வருகிறது. தமது பின்னடைவைச் சமாளிக்க மக்களை மனிதக் கேடயங்களாக ஐ.எஸ். பயன்படுத்துகிறது என்று ஐ.நா. சபை எச்சரித்திருந்த நிலையில் இந்தத் தகவல் வெளிவந்துள்ளது. (ம)

# பெரும்பான்மை கு
# ஆளுநரைச் சந்
## ஸ்டாலின் முழக்கம்



சென்னை, ஜூன் 10

தமிழக அரசின் பெரும்பான்மை பலம் குறைந்தால் ஆளுநர், குடிய ரசுத் தலைவரை சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கைக்கு வலியுறுத்துவோம் என தி.மு. கழக செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை கோவூரில் தி.மு.க. சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள குளம் தூர்வாரும் பணியை ஸ்டாலின் நேற்றுமுன்தினம் மேற்பார்வையிட்டார்.

அப்போது செய்தியாளர்கள், தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க. கட்சி மூன்று அணியாக பிரிந்து கிடக்கிறதே என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் வழங்குகையிலேயே ஸ்டாலின் இந்தக் கருத்தைப் பதிவுசெய்தார்.

"தமிழக அரசின் பெரும்பான்மை பலம் குறைந்தால் ஆளுநர், குடியரசுத் தலைவரை சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கைக்கு வலியுறுத்துவோம். தமிழக அரசை பா.ஜ.க. இயக்குகிறது எ பதை அவர்கள் படிப்படியா உறுதி செய்கின்றனர்.

> தமிழக அரசின் பெ
> பலம் குறைந்தால்
> குடியர சுத் தலைவ
> அடுத்தகட்ட நடவடி
> வலியுறுத்துவோம். தமிழக அர
> இயக்குகிறது என்பதை அவர்க
> யாக உறுதி செய்கின்றனர்.

## சோமாலியாவின் புந்துலாந்து பகுதி ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில்

சோமாலியாவின் புந்துலாந்து பகுதியை அல் ஷபாப் ஆயுததாரிகள் கைப்பற்றியுள்ளனர். இந்த மோதலில் 61 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெயிளிட்டன.

வியாழக்கிழமை காலை உரூர் பகுதியை அல் கொய்தா ஆயுதக் குழுவுடன் தொடர்புடைய அல் ஷபாப் ஆயுததாரிகள் தாக்கினர். அங்கே குறைந்த அளவிலான சிப்பாய்கள் இருந்ததால், எளிதாக நகரத்தைக் கைப்பற்றினர்.

தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதால், உயிரிழப்பு தொடர்பில் எந்தத் தாகவலும் வெளிவரவில்லை. எனினும் 61 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர் என்று இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

"மீட்புப் போரில் இராணுவம் கடும் முனைப்பில் ஈடுபட்டு வருகிறது. இன்னும் சில தினங்களில் நகரை மீண்டும் கைப்பற்றுவோம்" என்று இராணுவ செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்தார். (ம)

## திராவிட முன்னேற்ற கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் கைது



சென்னை, ஜூன் 10

தி.மு.கழகத்தின் மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் புதுக்கோட்டையில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

புதுக்கோட்டையில் அமைக்கப்பட்ட அரச மருத்துவமனைத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி திறந்து வைத்தார். இந்த நிகழ்வுக்கு வந்திருந்த தி.மு.கழகத்தின் சட்ட மன்ற உறுப்பினர்களான வைத்தியநாதன், ரகுபதி, பெரியண்ணன் ஆகியோரே அவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். முதல்வருடன் வாக்குவாதம் செய்யத் திட்டமிட்ட குற்றச்சாட்டில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# மீண்டும் ஆரம்பித்தார் ஐயாக்கண்ணு

சென்னை, ஜூன் 10

பல்வேறுபட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சென்னையில் நேற்று அரை நிர்வாணப் போராட்டம் நடத்தினர். விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன் [illegible] செய்ய வேண்டும். வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும், விவசாயிகள் தற்கொலையைத் தடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில், கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் தமிழக விவசாயிகளால் போராட்டம் நடத்தப்பட்டது. விவசாயி அய்யாக்கண்ணு இந்தப் போராட்டத்துக்கு தலைமை தாங்கினார். தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி விவசாயிகளைச் சந்தித்ததை அடுத்து போராட்ட கைவிடப்பட்டது. எனினும் தமது கோரிக்கை கள் நிறைவேற்றப்படாவிட்டால் போராட்ட மீண்டும் நடத்தப்படும் என்று எச்சரிக்கையு விடுக்கப்பட்டது. இந்த நிலையில் சேப்பாக்கத்தி நேற்றுப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ு; வெனிசுலாவில் பதற்றம்



சுத் திணறலாலும் நியோமர் உயிரி
ார்.
ாமரின் உயிரிழப்பைத் தொடர்ந்து
ருக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது. நியோமரின் மறைவால் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் கண்ணீர் மல்கி கதறியளும் ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. நியோமரின் மறைவு பதற்றத்தை மேலும் இரட்டிப்பாக்கும் என்றும் கருதப்படுகிறது. (ம)



# மியன்மார் வானூர்தி விபத்தில் உயிரிழந்தோரின் சடலங்கள் மீட்பு

நைபியடா, ஜூன் 8
மியன்மார் இராணுவத்துக்குச் சொந்தமான விமானம் கடந்த புதன்கிழமை விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 122 பேரும் உயிரிழந்தனர். அவர்களில் சிலரின் சடலங்கள் அந்தமான் கடல் பரப்பில் நேற்று மீட்கப்பட்டன.

மேக்நகரில்இருந்துயாங்கோனுக்குப் புறப்பட்டுச் சென்ற விமானமே அவ்வாறு விபத்துக்குள்ளானது. அதில் 108 இராணுவச் சிப்பாய்களும், 14 பணியாளர்களும் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானம் தரையுடன் தொடர்பை இழந்தபோதேநிலைமைதொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டது. அது அந்தமான் கடல்பரப்பில் விழுந்து நொறுங்கியிருக்கலாம் என்று சந்தேகமும் வெளியிடப்பட்டது. விமானத்தின் பாகங்களையும், உயிரிழந்தவர்களின் சடலங்களையும் கண்டறியும் பணியில் 9 போர் கப்பல்கள், 5 இராணுவ வானூர்திகள், 2 உலங்கு வானூர்திகள் ஈடுபட்டுள்ளன. முதல்கட்டமாக நேற்றுக் காலை 10 சடலங்கள் மீட்கப்பட்டன. (ம)

# ) குறைந்தால் ந்திப்போம்



ரஜேந்திர பாலாஜியின் கருத்தும் இதை உறுதி செய்துள்ளது. மக்கள் பணியை ஒதுக்கிவைத்துவிட்டு ஆட்சியை தக்க வைக்கவே ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர்' ' என்றார்.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி, "பாரதிய ஜனதா கட்சி ஒன்றும் தீண்டத்தகாத கட்சி அல்ல, நாட்டை 10 ஆண்டுகள் ஆண்ட கட்சி.மதவாத கட்சி என்று கூறி பா.ஜ.கவை ஒதுக்கி வைக்கக்கூடாது. இஸ்லாமியரான அப்துல் கலாமை குடியரசு தலைவர் ஆக்கியது பாரதிய ஜனதா கட்சி தான். குடியரசு தலைவர் தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளரை அதிமுக ஆதரிப்பதில் தவறில்லை'' எனத் தெரிவித்திருந்தார். (ம)

ின் பெரும்பான்மை
ந்தால் ஆளுநர்,
லைவரை சந்தித்து
நடவடிக்கைக்கு
ழக அரசை பா.ஜ.க.
அவர்கள் படிப்படி
னர்.

கிறது என்
டிப்படியாக
னர்.

# மோடி – நவாஸ் மீண்டும் சந்திப்பு



அஸ்தானா, ஜூன் 10
சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டுக்காக கஜகஸ்தான் சென்றுள்ள இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, பாகிஸ்தான் தலைமை அமைச்சர் நவாஸ் செரிப் இருவரும் அங்கு சந்தித்துக் கொண்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த அமைப்பில் கஜகஸ்தான், ரஷ்யா, கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் உறுப்பினராக உள்ளன. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்ற மோடி, செரிப்பையும், அவரது தயாரையும் பற்றி நலம் விசாரித்தார் என்று தெரிவிக்கப்பட்டுகிறது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் கடந்த வருடத்தின் மத்திய பகுதியில் இருந்து பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. பாகிஸ்தானைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இந்தியா தீவிரம் காட்டி வருகிறது. இத்தகைய பின்னணியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. மோடி-செரிப்சந்திப்புபதற்றத்தைத்தணிக்கும் என்றுசொல்லப்படுகின்றபோதிலும்இதுவெறும்சம்பிரதாயமான சந்திப்பே என்பது பொதுவான கருத்து. (ம)

# ு



விவசாயி
ாராட்டம்
ாரிக்கை
ாராட்டம்
க்கையும்
ாக்கத்தில்
டது. (ம)

## வைத்தியத்துறையில் பொன்விழாக்காணும் வைத்தியத் தம்பதிகள்




## வைத்தியத் தம்பதிகள்

### டாக்டர் சு.சின்னத்துரை
### திருமதி டாக்டர் செந்தில் வள்ளி சின்னத்துரை

ஆகியோர் வவுனியாவில் வைத்திய சேவையில் ஐம்பதாவது ஆண்டில் காலடி வைத்து மனநிறைவு பெறுகின்றனர். அவர்களை வவுனியா சமூகம் மனமுவந்து வாழ்த்துகிறது.

வவுனியா குடியிருப்பு கித்துல் வீதியில் 10.06.1968 இல் அன்றைய வவுனியா பாராளுமன்ற உறுப்பினரின் கையினால் சிறந்த சுபவேளையில் திறந்து வைக்கப்பட்டு வவுனியா ஹொறவப் பொத்தானை வீதியில் 23.02.1974 இல் தற்போதிருக்கும் இடத்தில் அமைந்த வைத்திய சாலைக்கு வந்து பணியாற்றும் இவ் வைத்தியத் தம்பதியினரின் மருத்துவ, சமூக, சைவசமயப் பணிகள் ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்கின்றன.

வவுனியாவில் சிறந்த தனியார் வைத்தியசாலைகள் இல்லாதிருந்த அக்காலத்தில் இவ் வைத்தியத் தம்பதிகளின் வைத்திய சேவை வவுனியா மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது. அதிலும் நான் அறிந்தவரை அக்காலத்தில் தனியார் வைத்தியசாலை யில் பெண் வைத்தியராக வைத்தியம் செய்தது வைத்தியகலாநிதி திருமதி செந்தில் வள்ளி சின்னத்துரை அம்மையார் ஒருவர் மாத்திரமே

ஆண் வைத்தியர்கள் எவரும் தமது கையைப் பித்து நாடிபார்த்து அல்லது தொட்டு வைத்தியம் செய்ய அனுமதிக்காத அன்றைய பெண்கள் பலருக்கும் அம்மா ஒரே ஒரு அமிர்த சஞ்சீவியாகத் திகழ்ந்தார்.

சஹஸ்ராபிஷேக வைத்திய சூரி வைத்திய கலாநிதி, வைத்தியசிரோமணி சுப்பிரமணியம் சின்னத்துரை யாழ்ப்பாண மாவட்டம், கைதடி, வேலுப்பிள்ளை சுப்பிரமணியம், வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் மகனாக 05.01.1940 இல் பிறந்தார். இவர் கைதடி வடக்கு குருசாமி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்று (1-4), கைதடி சி.எம்.எஸ் ஆகிலப் பாடசாலையில் பத்தாம் ஆண்டுவரை கற்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பதினோராம் பன்னிரண்டாம் வகுப்புக்கள் கற்றுத் தேறி கொழும்பு அரசினர் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் (1961 - 1966) கற்று பட்டம் பெற்று வைத்திய கலாநிதியானார்.

1967 இல் தன்னோடு படித்த யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் பொன்னம்பலம் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வி செந்தில் வள்ளியை திருமணம் செய்து 1968 இல் வவுனியாவுக்கு குடும்பமாக வந்தார். தனியார் வைத்திய சாலையை அமைத்து அதே ஆண்டில் தனது வைத்திய சேவையை வவுனியாவில் தொடங்கினார்.

### தமிழ்மணி அகளங்கன்

நிறைந்த சேவையை ஆற்றி வரும் இந்த வைத்தியத் தம்பதிகளை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் கடந்த ஆண்டில் சாறோர் விருது வழங்கி வாழ்த்தி கௌரவப்படுத்தியது இவர்கள் இன்னும் பல்லாண்டுகள் சிறப்போடு வாழ்ந்து தமது பணிகளைச் செவ்வனே செய்து நிறை வாழ்வு வாழ வவுனியா சமூகம் இறைவனைப் பிரார்த்தித்து வேண்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## அதிகாரிகளே நீங்களுமா!

வடக்கு மாகாணசபை திறம்பட இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உண்டு. அதற்கு எப்போதுமே அரசியல்வாதிகளையே குறைகூறுவதும் வழமை. ஆனால் மாகாணசபை திறம்பட இயங்காததற்கு அரசியல்வாதிகள் மட்டும்தானா காரணம்? அவர்களை வழிப்படுத்தி, நெறிப்படுத்தி காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டிய அரச அதிகாரிகள் அதற்குக் காரணமில்லையா?

பூநகரி கமநல சேவைகள் நிலையத்தில் புத்தம் புதிதாக வாங்கப்பட்ட 23 உழவு இயந்திரங்கள் பயன்பாட்டுக்கே விடப்படாமல் பழுதடைய விடப்பட்டிருப்பதைக் காணும்போது இந்தக் கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச அதிகாரிகள், ஊழியர்களில் 90 வீதமானோர் தமிழர்கள். வடக்கு மாகாணம் போரால் பட்ட அவலங்களையும் சந்தித்த இழப்புக்களையும் நன்கு அறிந்தவர்கள். மக்களின் துயரங்களை அருகில் இருந்தே பார்ப்பவர்கள். மக்களோடு மக்களாகத் துயர் சுமந்தவர்கள். இந்த மண்ணின் முன்னேற்றத்தில், வளர்ச்சியில் அவர்களுக்கு இயல்பாகவே அக்கறையும் அவாவும் இருக்க வேண்டும்.

ஆனால், கிடைக்கின்ற வாய்ப்புகளையும் வசதிகளையும் வீணடிக்கும் விதத்தில் அதிகாரிகள் இப்படி நடந்துகொள்வது எவ்வளவு பெரிய குற்றம்! வாங்கப்பட்ட 23 டிராக்டர்களை யும் வீணடித்திருப்பது எவ்வளவு பெரிய துரோகம்!

அதிகாரிகள் நினைத்தபடி நினைத்த நேரத்தில் எதையும் செய்துவிட முடியாது. ஒரு சின்னப் பொருளை நகர்த்துவதற்கும் அவர்கள் ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள், இன்னும் பல கட்டுப்பாடுகள் என எல்லாவற்றையும் பின்பற்றித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அதற்கும் மேலே அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்கு ஏற்ப அவர்கள் பணியாற்றவும் வேண்டியிருக்கிறது என்கிற காரணங்கள் எல்லாவற்றையும் புரிந்துகொள்ளமுடிகிறது. அதற்காக, மக்களின், பிரதேசத்தின் அத்தியாவசிய வளர்ச்சியையும் இந்தக் காரணங்களைக் கூறிப் புறந்தள்ளிவிடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரச பணியாளர்கள் எப்போதுமே மக்கள் சேவகர்களாக இருக்கவேண்டும் என்று உயர் அதிகாரிகள் நிகழ்வுகளில் உரையாற்றுகிறார்கள்; அறிவுறுத்துகிறார்கள். ஆனால், பூநகரிச் சம்பவத்தைப் பார்க்கின்றபோது அதிகாரிகள் மக்கள் சேவகர்களாக நடந்துகொண்டார்கள் என்பதைப் போன்று தெரியவில்லை.

ஒருபுறத்தில் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு, மறுபுறத்தில் அதிகாரிகளும் அசமந்தம் என்றால் மாகாணம் எப்படித்தான் முன்னேற முடியும்? மக்கள் பாவம் இல்லையா?

கொழும்பு அரசோ, போரால் பாதிக்கப்பட்ட பகுதி என்று வடக்கின் மீது ஏதும் சிறப்புக் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அது அவ்வப்போது ஏதேள்ளித் தெளிப்பவற்றையும் அதிகாரிகள் இப்படி அசண்டையுடன் கையாள்வார்களாக இருந்தால் இந்த மாகாணம் எப்படி முன்னேற முடியும்?

அண்மையில் வெளியான வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையில் இறுதியில் விசாரணைக் குழு இது தொடர்பில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது. அதனை இங்கு சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்தமாக இருக்கும்.

''மாகாண நிர்வாகத்துக்குட்பட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் என்போர் தமது முழுத் திறமையையும் வெளிக்கொண்டு வந்து மாகாண சேவையைத் திறம்பட மக் களிடம் கொண்டு செல்வதற்குப் பல செயற்கையான தடை கள் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் தமது திறமை, அனுபவம் என்பவற்றைக் கைவிட்டு மாகாண சபை நிர்வாகத்தில் தமக்குக் கிடைக்கும் வசதிகளோடு நிம்மதியடைகிறார்கள் எனவும் இந்தக் குழு கருதுகின்றது. ஆனால் வட பகுதி மக்கள் எதிர்பார்த்தது இவற்றை அல்ல என்பது யாவருக்கும் தெரிந்தது!''

என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. வடக்கு மாகாணத்தின் அவல நிலையை அது சரியாகவே குறிப்பிடுகிறது என்பதைப் பூநகரிச் சம்பவம் நிரூபிக்கிறது. இனியாவது அதிகாரிகள் விழித்துக்கொள்வார்களா?

# இன்றைய அரசு தவறான பாதையில் பயணிக்கிறது

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவிப்பு



■ தமிழில் வீ.எஸ்.ரீ

போர் வெற்றியின் எட்டாவது ஆண்டை நிறைவு செய்யும் நிலையில், நாட்டின் தேசிய பாதுகாப்பு, இன்றைய அரசியல் நிலை நல்லாட்சி நிர்வாகம் என்பவை குறித்து முன்னைய அரசின் பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்ஷ 'லங்காதீப' சிங்கள நாளிதழுக்குத் தெரிவித்த கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

**கேள்வி:** போர் வெற்றியின் எட்டாவது ஆண்டு நிறைவு அண்மையில் கொண்டாடப்பட்டது. போர் வெற்றிக்கு முக்கிய பங்களிப்புச் செய்தவர் என்ற வகையில் நீங்கள் அது குறித்துக் கருதுவதென்ன?

**பதில்:** உண்மையில் அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நாட்டில் எந்தவொரு பிரஜையும் எந்தவித உயிராபத்தோ, பொருள் இழப்போ இன்றி நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று வரத்தக்க சூழலை உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. வன்னியாவுக்கு அப்பால், கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கு சிங்கள இனத்தவர்கள் செல்ல இயலாததொரு நிலை நிலவியதுண்டு. நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குக் கூட அச்சத்துடனேயே செல்லும் நிலை நிலவியதுண்டு. இன்று அத்தகைய நிலை முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தருமொன்றே.

**கே:** அவ்வாறானால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டு பொய்யானதொன்றல்லவா?

**ப:** உள்ள அச்சுறுத்தல் குறித்து ஒருவருக்குப் புரிந்துணர்வு இல்லையாயின் அது பிரச்சினைக்கு உரியதொன்றே. நாட்டின் தலைவர்களுக்கு நாட்டின் பாதுகாப்புக் குறித்த புரிந்துணர்வு இருக்க வேண்டியது மிக அவசியம். இன்று உலகில் சகல துறைகளிலும் வளர்ச்சி கண்ட நாடுகளில் கூட, தலைவர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து முன்னெச்சரிக்கையுடனேயே செயற்பட்டு வருகின்றனர். போர்முடிவுக்கு வந்தபின்னர் ஐந்து ஆண்டுகள் வரை நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்திருக்கிறேன். அந்த வேளையில் வடக்கிலும் கிழக்கிலும் பயங்கரவாதநிலை மீண்டும் தலைதூக்காத விதத்தில் எத்தகைய முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியிருந்ததோ, அந்தளவுக்கு கவனம் செலுத்திச் செயற்பட்டுள்ளோம். நாட்டு மக்களது பொது வாழ்க்கையில் எத்தகைய பாதிப்பும் ஏற்படாத விதத்தில் எமது நடவடிக்கைகளைக் கையாண்டோம் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

**கே:** நாட்டின் இன்றைய அரசியல் நிலை குறித்த தங்களது கருத்தென்ன?

**ப:** தனிப்பட்ட வகையில் மனிதர்களுக்கு கரைச்சல்கள் கொடுக்கும் இன்றைய அரசியல் அணுகுமுறையில் நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிட்டாது. சகல தரங்களைச் சேர்ந்தோரும் இன்று குழம்பிப் போயுள்ளனர். நல்லாட்சித் தரப்பினருக்கு வாக்களித்தவர்கள் இன்று மாற்றம் வேண்டி நிற்கின்றனர். அரசின் இன்றைய போக்கு தவறானதென்பது தெளிவாகப் புலப்படுகிறது. அதிகாரத்தில் இருப்போர் தமக்குள் மகிழ்ச்சியாக இருப்பதால் பயனேதுமில்லை. நாட்டு மக்கள் குழப்பமடைவதற்கான பிரச்சினை என்ன என்பது குறித்து ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். இன்று நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி பொது மக்களது வாழ்க்கை நிலை, விரக்திநிலை என்பவை குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும் அதைவிடுத்து எதிர்த்தரப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னரைத் தூற்றித் திரிவதால் பயனேதுமில்லை. நீண்ட காலமாக எவராலும் செய்ய இயலாது போன விடயத்தை 2005 இல் அதிகாரத்துக்கு வந்த நாம் செய்து காட்டினோம். சரத் பொன்சேகாவால் இராணுவத் தளபதியாக இருந்து செய்தவற்றை அதற்கு முந்தைய காலத்தில் செய்யமுடியாது போனதேன்? பல சந்தர்ப்பங்களில் அவரால் புலிகளை அடக்கி ஒடுக்க இயலாது போயிற்றல்லவா? நாங்கள் தவறுகளை இனம்கண்டு அவற்றுக்கான பதில் நடவடிக்கையை மேற்கொண்டோம். இன்று பெரிய அளவில் வீரம் பேசும் அவரால், பெண்ணொருவர் அன்று இராணுவத்தலைமையகத்துள் புகுந்து தம்மீது தற்கொலைத் தாக்குதல் நடத்த முயன்றமையைத் தடுத்திட இயலாது போயிருந்ததே. அந்த அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நலிவு நிலை கண்டிருந்தன.

**கே:** நாட்டு மக்கள் குழம்பிப் போயுள்ளதாகக் கூறினீர்கள். நல்லாட்சி அரசின் நிர்வாகம் சரியான பாதையில் தானே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது?

**ப:** ஊழல் ஊழல் எனக் கூறும் நோக்கில் இன்று அரசியல் திருட்டே இடம்பெறுகிறது. அரசியலில் தமக்கு எதிரானவர்களைப் பயமுறுத்துவதற்காகவே இந்தவிதம் செயற்படுகிறார்கள். நான் எடுத்த முடிவுகள் ஊழலானவை எனக் குற்றம்சாட்டி என் மீது வழக்குத் தொடுத்துள்ளனர். நான் மேற்கொண்ட தீர்மானத்தாலேயே நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணி பெரிய அளவில் கிட்டியது. பலருக்கு வேலை வாய்ப்புக் கிட்டியது. இந்த அரசு உண்மையில் அரசியல் பழிவாங்கல்களுக்காகவே இந்தவிதம் செயற்படுகிறது. இந்த விதம் அரசுக்கு எதிரானவர்களை வேட்டையாட முயல்வது நல்லாட்சி என்றாகுமா?

**கே:** அரசதரப்பில் இடம்பெறும் தவறுகளைக் கூட இந்த அரசு விசாரிக்கின்றதல்லவா? மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குறித்த விசாரணை ஆணைக்குழு இதற்குப் பொருத்தமான உதாரணம். அந்தவகையில் அரசுக்கு எதிரானவர்கள் பழிவாங்கப்படுகின்றனர் என எப்படி நீங்கள் வாதிட முடியும்?

**ப:** அந்த விசாரணை ஆணைக்குழு திருடர்களைத் திருடர்களல்ல எனக் கூறுவதற்காக நியமிக்கப்பட்ட ஒன்றானால் அது நல்லாட்சியின் இலட்சணமானது இத்தகைய பல விசாரணை ஆணைக்குழுக்களை நாம் நியமித்ததுண்டு. சொல்லப்போனால் காணாமல் போனோரைக் கண்டுபிடிக்கும் ஆணைக்குழுவைக் கூட நாங்கள் தான் நியமித்தோம்.

**கே:** இன்றுபொருளாதாரப்பிரச்சினை உட்பட்ட பல பிரச்சினைகள், முன்னைய அரசின் தவறான அணுகுமுறை காரணமாகத் தானே ஏற்பட்டுள்ளன. உங்களது அரசு வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடனைத் தற்போதைய அரசு செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது அல்லவா?

**ப:** அது தாம் தப்பித்துக் கொள்ள முன்வைக்கும் நொண்டிச் சாட்டுக்கள் நாம் ஆரம்பித்து முன்னெடுத்து வந்த பல அபிவிருத்தித் திட்ட வேலைகளை இன்றைய அரசு முற்றுமுழுதாக நிறுத்தி விட்டுள்ளது. இதனாலேயே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது. சீனாவின் உதவி மூலமோ அல்லது கடன் ஊடாகவோ முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை மட்டுமல்லாது இந்த நாட்டின் நிதியைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களையும் இன்றைய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

உலக வங்கியின் கடனுதவி பெற்ற நான் ஆரம்பித்த கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் இடையில் நிறுத்தி வைக்கப்பட்டு தற்போது இன்றைய அரசால் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாக பொய்கூறி அந்தத் திட்டத்தை முன்னெடுக்க முனைந்துள்ளனர். ஒரு சிறு மழைக்கே கொழும்பின் புறநகரின் சிலபகுதிகள் வெள்ளத்தில் மூழ்குகின்றன. அது குறித்த ஆராய்ந்த வேரஸ் கங்கை அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தேன். இந்த நாட்டின் நிதியைப் பயன்படுத்தி, இந்த நாட்டுப் பொறியியலாளர்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட அந்தத் திட்டத்தையும் இந்த அரசு பதவிக்கு வந்ததும் நிறுத்தி வைத்தது. தற்போது நல்லாட்சி அரசின் திட்டமெனத் தெரிவித்து அதனை மிகமிக மெதுவாக முன்னெடுத்து வருகிறது. இத்தகைய திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதாலேயே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மாறாக வெளிநாட்டுக் கடன் காரணமாக அந்த விதம் ஏற்படவில்லை.

இத்தகைய வேலைத் திட்டங்களை முன்னெடுத்த நீண்ட கால அனுபவமும் திறமையும் மிக்க துறைசார் அதிகாரிகளை அவர்கள் மகிந்தவின் ஆதவாளர்கள் எனக் கூறி இந்த அரசு அவர்களை வேலைத் திட்ட செயற்பாடுகளில் இருந்து விலக்கிக்கொண்டது. இதுவும் வேலைத்திட்டங்கள் வெற்றியளிக்காமைக்கானதொரு காரணமாகும்.

வெளிநாட்டு நிறுவனங்கள் பல இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளமுன்வந்தபோதிலும்அவற்றை இன்றைய அரசு தவிர்த்துக் கொண்டது. அதேவேளை நான் முயன்று ஆரம்பித்துவைத்த வெளிநாட்டு முதலீட்டு வேலைத்திட்டங்களைத் தவிர இந்த அரசால் புதிதாக வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் எவற்றையும் ஆரம்பிக்க முடிய வில்லையே? இத்தகைய பின்னணியில் நாட்டின் பொருளாதார நிலையில் எப்படி உயர்ச்சியை எதிர்பார்க்க இயலும்?

**கே:** உங்களது மத்தியஸ்தத்துடன் இருதரப்புக்கள் மத்தியிலும் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படவதாகக் கூறப்படுகிறதே? இதில் எந்த அளவுக்கு உண்மைத்தன்மை இருக்கிறது?

**ப:** அத்தகையதொரு திட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் எனக்கு அது குறித்து மேலதிகமாக எதுவும் தெரியாது. அது குறித்து என்னுடன் எவரும் தொடர்பு கொண்டதுமில்லை. இதுதான் உண்மை. அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்கு இதுவரை இருந்ததில்லை. நான் அரசியலுக்கு வரவேண்டுமெனப் பலர் கோரி வருகின்றனர். ஆனாலும் இன்றைய அரசியல்வாதிகளது செயற்பாடுகளை நோக்கும்போது அரசியலில் ஈடுபட எவரும் விரும்பமாட்டார்கள். முன்னாள் அரச தலைவரைத் தூக்கில் இடவேண்டுமெனக் கூறும் அரசியலுக்கு நானும் வரவேண்டுமா? ஒருபோதும் நான் அரசியலில் பிரவேசிக்கப்ப போவதில்லை.


**கே:** அப்படியானால் நாட்டின் அரசியல் எத்தகைய பாதையில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?

**கே:** சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் எத்தகைய விதத்தில் தொழிற்றுறையினரை அரச நிர்வாகத்துள் இணைத்து நாட்டை முன்னேற்றினார்கள் என அண்மையில் வெளியான நூலொன்றில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டிலும் எந்தவொரு அரசும் நாட்டைச் சிறந்த முறையில் முன்னேற்ற வேண்டுமானால் தொழிற்றுறையினரையும் இணைத்துச் செயற்பட வேண்டுமெனவே நானும் கருதுகிறேன். தொழிற்துறையினரைப் புறமொதுக்கி வைத்துவிட்டு அரசியல்வாதிகள் மட்டும் நாட்டை நிர்வகிக்க முயன்றால் ஒருபோதும் அது வெற்றியளிக்கப் போவதில்லை. இன்றைய அரசைக் கவிழ்த்து புதியதோர் அரசை நிறுவினாலும் அதுவும் இதேபோக்கில் நிர்வாகத்தை முன்னெடுக்கு மானால் அதனால் பயனேதும் கிட்டப் போவதில்லை. முன்னோக்கி அடியெடுத்து வைத்தல் அவசியம். அதற்காகத் தான் இத்தகைய முன்னேற்றகரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அடுத்து ஆட்சி அதிகாரம் பெறும் தலைவர் யாரென என்னால் தீர்மானிக்க இயலாது. அது குறித்து எனக்கு எத்தகைய பிரச்சினையும் கிடையாது-என கோத்தபாய ராஜபக்ச கருத்து வெளியிட்டுள்ளார்.

> “இன்றைய அரசியல் அணுகுமுறையில் நாட்டுக்கு எந்த வித நன்மையும் கிட்டாது. சகல தரங்களைச் சேர்ந்தோரும் இன்று குழம்பிப் போயுள்ளனர். நல்லாட்சித் தரப்பினருக்கு வாக்களித்தவர்கள் இன்று மாற்றம் வேண்டி நிற்கின்றனர்.





## ஆசிரியருக்கான கடிதம்

## தீதும் நன்றும் பிறர் தர வாரா

இலங்கையில் புகையிலை உற்பத்தி செய்வதை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிலிருந்து முற்று முழுதாகத் தடைசெய்யவுள்ளதாக அரசுதெரிவித்துள்ளது. இது ஒரு புறம் மனதுக்குத் திருப்தி தருவதாக இருப்பினும், மற்றொரு புறத்தில் ஏமாற்றம் தருமொன்றாகவும் அமைகிறது. இது ஒரு புதிர் போடலன்று. மனித குலத்தை வருத்தும் கொடு நோய்களில் புற்றுநோயும் முக்கிய இடம் வகிக்கிறது. இந்தப் புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகளில் புகையிலைப் பாவனைக்குத் தனியிடம் உண்டு. குறிப்பாக யாழ்.மாவட்டப் பொதுமக்கள் மத்தியில் முன்னைய காலகட்டங்களில் புகையிலை மெல்லுதல், புகையிலையில் தயாரித்த சுருட்டுப் புகைத்தல் எனப் புகையிலைப் பாவனை கணிசமான அளவில் இருந்து வந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் அந்தப் பழக்கம் அருகிப் போயினும், இன்றும்கூட எம்மவர்கள் மத்தியில் புகையிலைப்பாவனை வழக்கில் இருந்து வருவது உண்மையே. அந்த வகையில் அரசின் மேற்குறித்த முடிவு எம்மவர் மத்தியிலுள்ள புகையிலை பயன்படுத்தும் பழக்கத்தை முற்று முழுதாக இல்லாமல் செய்யும் என்பதால் அது மனதுக்குத் திருப்தி தருமொன்றாகக் கொள்ளத்தக்கது. மறுபுறத்தில், எம்மவரின், குறிப்பாக யாழ்.குடாநாட்டு விவசாயிகள் மத்தியில் புகையிலைச் செய்கை பெரும் இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும் ஒன்றாக இன்று நேற்று என்றல்லாது மிக நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. பணப்பயிர் எனக் குடாநாட்டு விவசாயிகளால் சுட்டப்படும் புகையிலைப் பயிர்ச் செய்கை, இன்றைய கால கட்டத்தில் நாட்டில் 2 ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் 30 ஆயிரம் விவசாயிகளது தொழில் முயற்சியாக இருந்து வருகிறது என்பது புள்ளிவிவரத் தகவல். இவர்களால் உற்பத்தி செய்யப்படும் பெருமளவிலான புகையிலையில் கூடிய அளவு தென்பகுதிச் சிங்கள மக்களது முக்கிய பாவனைப் பொருளான சுருட்டு உற்பத்தியாக அமைந்து, வடபகுதி விவசாயிகளுக்கு பெரும் இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும் தொழில் முயற்சியாக உள்ளதுடன் சுருட்டுக் கைத்தொழிலும் கணிசமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பைத் தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளது. அரசின் மேற்குறித்த முடிவு காரணமாக குறித்த தொழிற்றுறையில் ஈடுபட்டு வரும் எம்மவர்களுக்கு பொருளாதாரரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இது மாறவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் அரசின் மேற்குறித்த முடிவு ஒரு புறத்தில் எம்மவர்களில் ஒரு சாராருக்குப் பொருளாதார ரீதியில் நட்டத்தை ஏற்படுத்தும் ஒன்றாக அமை யும். அதேவேளை ஒட்டுமொத்த ரீதியில் தமிழ் இனத்தவர்களது உடல்நல ஆரோக்கியத்தில் புகையிலை ஏற்படுத்தி வந்த பாதிப்பைக் களையும் ஒன்றாக அமைவதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

க.கணபதிப்பிள்ளை -வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேநீர் மற்றும் பால் தேநீருக்கான விலை நிர்ணயம் அதிகரிப்பு



தேநீர்மற்றும்பால்தேநீருக்கானவிலைநிர்ணயங்கள் நேற்று அதிகரிக்கப்பட்டுள்ளதான தகவல் இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சீனியின்இறக்குமதிதொடர்பிலானவரிஅறவீடுகள் பத்துரூபாவால்அதிகரிக்கப்பட்டதைத்தொடர்ந்தே தேநீர்மற்றும்பால்தேநீருக்கானவிலையைஐந்து ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

குறிப்பாக புதிய விலை நிர்ணயத் திருத்தத்திற்கு அமைவாக 15 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த தேநீர் 20 ரூபாவுக்கும், முப்பத்தைந்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த பால் தேநீர் நாற்பதுரூபாவுக்கும்விற்பனைசெய்யப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ‘ராசி அதிர்ஷ்டம்’ விசேட சீட்டிழுப்புச் செயற்பாடுகள் மானிப்பாயில் நேற்று

வடக்குக்கிழக்குமக்களுக்குப்பரிசுகளைவழங்கும்வரப்பிரசாதமாக அமைந்துள்ள ‘ராசி அதிர்ஷ்டம்’ அதிர்ஷ்ட லாபச் சீட்டின் விசேட சீட்டிழுப்புச் செயற்பாடுகள் மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் ‘ராசி அதிர்ஷ்டம்’ எனும் அதிர்ஷ்ட லாபச் சீட்டுகள் கடந்த 05 ஆம் திகதி முதல் வடக்குக் கிழக்கு சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி வழமையான சீட்டிழுப்புக்கு மேலதிகமாக இந்தச் சீட்டிழுப்பின் விசேடத்துவமாக மற்றுமொரு சீட்டிழுப்புக்கான சந்தர்ப்பம் இந்த அதிர்ஷ்ட லாப சீட்டில் வழங்கப்பட்டிருந்தமை குறித்து நோக்கத்தக்கது.

**இந்த விசேட சீட்டிழுப்பில் வெற்றிபெறுவோருக்கான பரிசு வழங்கலில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டதான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

1. முதலில் தெரிவு செய்யப்படும் 40 இலக்கங்களுக்கு ஒரு தங்க நாணயம் வீதம் 40 தங்க நாணயங்கள் பரிசாக வழங்கப்படும்.
2. இரண்டாவதாகதெரிவுசெய்யப்படும் 4 இலக்கங்களுக்கு ஒரு அப்பிள் ஐ போன் வீதம் 4 ஐ போன்கள் பரிசாக வழங்கப்படும்.
3. மூன்றாவதாக தெரிவு செய்யப்படும் 3 இலக்கங்கங்களுக்கு ஒரு தங்க ஆபரணம் வீதம் 3 தங்க ஆபரணங்கள் பரிசாக வழங்கப்படும்.
4. நான்கவதாக தெரிவு செய்யப்படும் 2 இலக்கங்களுக்கு ஒவ்வொருஸ்கூட்டர்வீதம் 2ஸ்கூட்டர்கள் பரிசாக வழங்கப்படும்.
5. ஐந்தாவதாகதெரிவுசெய்யப்படும்இலக்கத்திற்கு பெறுமதிமிக்க எக்சியா வகை சார்ந்த கார் ஒன்று பரிசாக வழங்கப்படும்.




# விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமனம்

*வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சு நடவடிக்கை*

உள்நாட்டுச்சந்தைகளில் பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பிலான கண்காணிப்புநடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளை இலங்கை வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சு நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 62 புதிய கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் நாடு முழுமைக்குமாக மொத்தமாக 250 அதிகாரிகள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன் நுகர்வோரைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை இவர்கள் முன்னெடுக்கவுள்ளனர் எனவும் தகவல் கூறப்பட்டுள்ளது. நுகர்வோர் சார்ந்து ஆண்டுக்கு 21மில்லியன் ரூபாவை கண்காணிப்பு சார் நடவடிக்கைகள் மூலமாக சேமிப்பாக மீதப்படுத்திக் கொள்வதாகவும் அமைச்சுத் தெரியப்படுத்தியுள்ளது.




# இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை அதிகப்படுத்தத் திட்டம்

*சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் தெரிவிப்பு*



எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகைதரவுள்ள சுற்றுலாப் பயணிகளை கவரத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வருகை தரவுள்ள நான்குமில்லியன்சுற்றுலாப்பயணிகளைக் கவரும் விதமான தீர்மானங் களையும், புதிய திட்டமிடல்களையும்மேற்கொண்டுள்ளவுள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மொத்தமாக 20 இலட்சத்து 58ஆயிரம்சுற்றுலாப் பயணிகள்இலங்கைக்குவருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி தொகை மதிப்பீடானது 17 சதவீகித அதிகரிப்பாக காணப்படுகிறது. நடப்பாண்டிலும் நாட்டினுள் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைஅதிகரிக்கவும்சுற்றுலாப் பயணிகள் மேற்கொள்கின்ற செலவினங்களின் தொகையை அதிகரிப்பதற்கும் முன்னாயத்தமானதிட்டமிடல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் கூறப்பட்டுள்ளது.

> “ கடந்த ஆண்டு மொத்தமாக 20 இலட்சத்து 58 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி தொகை மதிப்பீடானது 17 சதவிகித அதிகரிப்பாக காணப்படுகிறது.

# சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்துக்கு தங்க விருது

## பெரியளவிலான உற்பத்திப் பிரிவில் பெற்றுக்கொண்டுள்ளது

தொழிலாளர் திணைக்களத்தால் ஏற்பாடுசெய்ப்பட்டிருந்த, 2016 ஆம் ஆண்டுக்கான சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புத் தொடர்பிலான நாடளாவிய விருதுகள் வழங்கும் வைபவத்தில் பெரியளவிலான உற்பத்திப் பிரிவிலே சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனம் தங்க விருதைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அந்த வகையிலே தொழிலாளர் திணைக்களத்தின் சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புப் பிரிவின் வகிபாகம் என்பது தொழில்தருநர்கள், முகாமையாளர்கள், ஊழியர் நிறுவனம், தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் நிறுவனமற்றும்திணைக்களமட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது.




அதேபோன்று தனியார், அரச துறைஇணைந்தஅல்லதுதனியார் நிறுவனங்களில்எழுகின்றதொழிற்துறைப் பிணக்கு களைத் தீர்த்து வைப்பதில்தொழிலாளர்சட்டங்கள் மூலமாகவும் இரு தரப்பினருக்கிடையேயானஒத்துழைப்புச்செயற்பாட்டுடனும் தொழிலாளர்களிடையே மனோபாவ ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஓர் சூழலை ஏற்படுத்தி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட நோக்கத்தின் முன்னிலைப்படுத்தலாக சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புத்தொடர்பானசெய்தியைப்பரப்பும் விதமான நாடளாவிய போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. உள்நாட்டு உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்மத்தியில்சமூகஉரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பைஊக்குவித்து, சமூகஉரையாடலின் மூலமாக சிறந்த தொழிற்றுறைஉறவுமுறையொன்றைத் தோற்றுவிப்பது மேற்படி செயற்பாடுகளின் தூர நோக்காகக் காணப்படுகிறது.

இதன்படி தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில்விழிப்புணர்வை ஏற்படுத்திச்சிறப்பான தரத்திலான பணிச் சூழலைத் தோற்றுவிப்பதுடன், படைப்பாக்கத்திறன்களை மேம்படுத்துவதன் மூலமாக இவை முன்னெடுக்கப்படுகின்றமை நோக்கத்தக்கது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின்குழுமபொதுமுகாமையாளரான (மனித வளங்கள்) சஜித் விக்கிரமாராச்சி,

“நாம் கட்டியெழுப்பியுள்ள பரஸ்பர நம்பிக்கைமற்றும்ஒற்றுமைதொடர்பான மிகச் சிறந்த நடைமுறைகளுக்குக்கிடைக்கப்பெற்றமகத்தான ஓர் ஆசீர்வாதமாகவே இவ்விருது அமையப்பெற்றுள்ளது.

நிறுவனம் மற்றும் அதன் பணியாளர்களின்மேம்பாடுதொடர்பானஒரு பொதுவான நோக்கத்தின் வழியே எமது தொழிற்சங்கங்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுடனும் இணைந்துஎமதுபயணத்தைமுன்னெடுப்பதற்குஇந்தவிருதானதுபக்கபலமாக அமைந்துள்ளது” என்றார்.

CSE COLOMBO STOCK EXCHANGE

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| 9/6/2017 | | | |
| www.cse.lk | | | |
| ASPI | 4.96 | 6,668.96 | 6,664.00 |
| S&P SL20 | 7.10 | 3,840.77 | 3,833.67 |
| வியாபாரப்புரள்வு | | 534,882,720 | 2,085,474,560 |
| உள்நாடு:- கொள்வனவு | | 178,693,056 | 465,142,624 |
| விற்பனை | | 310,032,032 | 781,413,310 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 356,189,632 | 1,620,331,900 |
| விற்பனை | | 224,850,688 | 1,304,061,180 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டோக்கியோ சிமேன் -X | TKYO.X | 58.00 | 1,916,387 | 111,156,693 |
| சிலோன் ஹோல் ஸ்ரோஸ் | CCS.N | 850.00 | 119,270 | 101,383,753 |
| டோக்கியோ சிமேன் -N | TKYO.N | 67.00 | 634,865 | 40,721,494 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி - X | COMB.X | 107.00 | 313,605 | 33,550,778 |
| டயலொக் | DIAL.N | 12.00 | 2,776,052 | 33,033,359 |
| சம்பத் வங்கி | SAMP.N | 297.00 | 110,131 | 32,718,207 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி - N | COMB.N | 135.60 | 215,303 | 29,034,733 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 139.50 | 161,884 | 22,416,933 |
| எல் பீ பைனான்ஸ் | LFIN.N | 144.00 | 114,869 | 16,210,560 |
| காகில்ஸ் சிலோன் | CARG.N | 210.00 | 53,127 | 11,156,662 |

**Workshop**

[illegible]
இன்று ஆரம்பம் 9.30 மு.ப

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| [illegible] | 218 |
| [illegible] | 11.5 |
| [illegible] | 1.5 |
| [illegible] | 2.7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



மருத்துவர் ஆ.பேரின்பநாதன்

# குழந்தைகளின் உயர்வுக்கு அன்பும், கல்வியும் உதவும்

(நேற்றுமுன்தினம் வெளியான **“வேதனையில் உழலும் குழந்தைத் தொழிலாளர்”** என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி....)

சிறுவர்கள் அடிக்கடி வீட்டில் அல்லது பாடசாலையில் அல்லது சமூகத்தில் பல்வேறுவிதமான தண்டனைகளுக்கு ஆளாகின்றனர். உலகநாடுகள்போன்றே இலங்கையும்சிறுவர்மீதான எல்லா உடல் உள வன்முறையிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கு அவர்களுக்கு உள்ள சம உரிமையை ஐ.நா. சிறுவர் உரிமைச் சாசனம் (Convention the right of the Child) அங்கீகரித்ததன் அடிப்படைகளின் மூலம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்படி, உடன்படிக்கையில் வழங்கப்பட்டுள்ளவிடயதானங்களுக்கு ஏற்றதாகப் பாடசாலை ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை நிச்சயப்படுத்தல் வேண்டும். சகல நடவடிக்கைகளையும் இந்த உடன்படிக்கையின் (சரத்து 28(2) பங்காளி நாடுகள் அனைத்தும் முன்னிலைப்படுத்த வேண்டும். ஆதிகாலத்தில்சரீரத்தண்டனைமாணவர்களுக்குப்பொதுவான ஒன்றாகவே இருந்துள்ளது. அந்நியராட்சிக்குள் எமது நாடும் அரை நூற்றாண்டு காலங்கள் இருந்தமையால் எமது நாட்டிலும் அதன் பிரதி விம்பமாகக் கல்வியில் சரீரத் தண்டனை முக்கியமாகப் பாவிக்கப்பட்டுள்ளது. இன்றும் ஒரு பிரிவினர் அதனை ஆதரிப்பதைப்பார்க்க முடிகின்றது. பிள்ளைகள் அடிவாங்குவதினாலேயே உளவியல்ரீதியாக மாற்றம் கொண்டு வீட்டிலும், பாடசாலையிலும் பொய் பேசுகின்றனர்.

**ஏன் பிள்ளையை உடலியல் ரீதியாகக் தண்டிக்கக்கூடாது?**
தாம் சிறியவர்கள், வலிமையற்றவர்கள் என்பதாலே பெரியவர்கள் தம்மை அடிக்கின்றனர் எனப் பிள்ளை நினைக்கின்றனர். எல்லா உயிர்களும் நீண்டநாள் உயிர்வாழ ஆசைப்படுகின்றன. அனைத்து உயிர்களும் தண்டனை கண்டு பதறுகின்றன. அஞ்சுகின்றன. சிறுவர்களை அடிக்கும்போது அவர்களுக்கு வேதனை, அவமானம், பதகளிப்பு, ஆத்திரம், இதனால் வஞ்சம் தீர்க்கும் எண்ணம் போன்றன ஏற்படுகின்றன. உளவியல் ரீதியான தாக்கத்தை அவர்களில் ஏற்படுத்துகின்றது. இப்படியாக உடலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்ட பிள்ளைகளில் பெரும் பாலானோர், பிற்கால வாழ்வில் வன்முறையாளர்களாக மாறுகின்றனர். வீட்டிலும் சமூகத்திலும் பிறழ்வடைகின்றனர். இவர்கள் போதைக்கு அடிமையாவதுடன், தற்கொலையும் செய்கின்றனர். பிள்ளை தண்டிக்கப்படும்போது, அவமானப்படும் போது அது பிள்ளையில் ஆழமான மன வடுவை ஏற்படுத்திவிடுவதால் பிள்ளைகள் பாடசாலை செல்ல மறுக்கலாம் அல்லது வகுப்புச் செயற்பாடுகளில் ஆர்வமிழக்கின்றனர். தண்டனை வழங்கியவர்களும், தண்டனை பெற்றவர்களுமே தண்டனை வழங்க வேண்டும் என்பதற்கு ஆதரவாயுள்ளனர். பெற்றோர்கள் தாமே பிள்ளைகளை இந்த உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் என்ற உரிமை மூலம், பிள்ளைகளை எப்படியும் தண்டிக்கலாம் என்று நினைக்கின்றனர். அது தவறானது. சிறுவர் உரிமைச்சாசனமும் 1995 ஆம் ஆண்டுக்குரிய இலங்கைச் சட்டக்கோவைத் திருத்தமும், சிறுவர்களுக்குச் சட்டபூர்வ பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என்பதுடன், பெரியவர்கள் போன்றே சகல மனித உரிமைகளுக்கும், கௌரவத்துக்கும் உரித்துடையவர்கள் என்பதை வலியுறுத்துகின்றது. இதன்படி பிள்ளைகளைத் தண்டிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

01. குற்றம் செய்யத் தூண்டுதல் அல்லது விபத்தில் சிக்க வைத்தல்.
02. பிள்ளைகளின் உணவு, உடை, சுத்தம், உறையுள் என்பவற்றில் பெற்றோர் அக்கறை காட்டாமை.
03. பிள்ளைகளை வீடுகளில் வேலைக்கு அமர்த்துதல்.
04. பிள்ளைகள் கருத்துக்கு வீட்டில் மதிப்பளியாமை.
05. பிள்ளைகள் எதிர்பார்க்கும் அன்பையும், ஆதரவையும் வழங்காமை.
06. பிள்ளையை சொந்த வீட்டிலேயே வேலைக்காரியாக்கி, பாடசாலை செல்லும் உரிமையை மறுத்தல்.
07. மன அதிர்ச்சி, உளப்பாதிப்பு ஏற்படும் வகையில் தண்டித்தல்.
08. பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
09. பிள்ளையைப் பாதுகாப்பாய் வளர்க்காமை, பெற்றோரும், ஆசிரியரும் முன் உதாரணமாக நடக்காமை.
10. பிள்ளையின் நடத்தைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் அதன் வளர்ச்சிப் படிநிலைகளில் ஏற்படும் உடல் உளக் குறைபாடும் பிரதான காரணமாக விளங்குகிறது.

**பிள்ளைகளின் கல்வி சார்ந்த பிரச்சினைகள்**
01. வகுப்பறை சார்ந்தவை
எண்ணிக்கை கூடிய மாணவர்கள், காற்றோட்ட வசதியற்ற வகுப்பறைகள், வெளிச்ச வசதியற்ற வகுப்பறைகள்.
02. மிகக்குறைந்த பௌதிக வளங்கள்.
மாணவர் தொகைக்குப் போதாத இருக்கை வசதிகள். (வாங்குகள், மேசைகள், கதிரைகள்)
03. பற்றாக்குறையான பாடப் புத்தகங்கள்.
பற்றாக்குறையான கற்பித்தல் உபகரணங்கள், ஒழுங்கு சீர்குலைய ஆசிரியர்கள் காரணமாதல்.
பாடங்களைத் தயார் செய்யாது வருதல், அனுகூலமற்ற கற்பித்தல் முறைகளும், பிள்ளைகளில் அல்லது கற்பிக்கும் பாடங்களில் அக்கறையின்மையும். எனவே, பிள்ளைகளைத் திருத்துவதற்காக அடிக்கக்கூடாது. நீங்கள் செய்வது தவறு என்பதை உணர்த்தவேண்டும். “வன்முறை வன்முறையையே வளர்க்கும்”, “பரிவு அகிம்சையை வளர்க்கும்.”



சிறுவர்களின் வீட்டுச்சூழல் பிள்ளைகளுக்குப் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. மன இறுக்கம், உணர்ச்சி வசப்படல் போன்றவற்றுக்கு ஆளாக அவர்களைத் தூண்டுகிறது அவற்றுள் சில,
01. வீட்டின் வறுமை நிலை.
02. வீட்டிற் போதியளவு மேற்பார்வையின்மை.
03. மகிழ்ச்சியற்ற மனநிலையுடைய பெற்றோர்.
04. தந்தை மதுபோதைக்கு அடிமையாயிருப்பது.

**சிறுவர் இம்சை என்பது என்ன?**
01. அவசியமின்றி அதட்டுதல்.
02. அவசியமின்றிக் கோபமூட்டல்.
03. பாலியல் நடவடிக்கையைத் தூண்டுதல்.
04. தீய எண்ணத்துடன் பிள்ளையை வருடுதல்.
05. தங்களை அரவணைக்கும்படி கேட்டல்.
06. பெற்றோர் மீதான நம்பிக்கையைப் பிள்ளைகள் இழக்கச் செய்தல்.
07. பிள்ளைகளில் தமது ஆத்திரத்தைத் தீர்த்தல்.
08. பாடசாலை நிர்வாகத்தில் உள்ள நிறைகுறைகள்.
09. மாணவர்கள் பற்றியதான எதிர்மறை மனப்பான்மை.
10. நேரமுகாமைத்துவமின்மை.
11. பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் நன்னடத்தையின்மை.

ஆக குழந்தைகளின் ஒவ்வொரு பருவமும் அதற்கான குறிப்பிட்ட நோக்கத்தை உள்ளடக்கியது. குழந்தைப் பருவம் என்பது உண்பது, உறங்குவது, தன் சூழலை அறிவது, கற்பது தெரிந்துகொள்ள வேண்டும்.

**பிள்ளைகள் பாடசாலை செல்ல விரும்பாமைக்கான காரணங்கள்**
01. நெடுங்காலம் பெற்றோருடன் வாழ்ந்த குழந்தைகள் அவர்களைப் பிரிந்து வாழ விரும்பாமை.
02. சிறிய அறைக்குள் நெடுநேரம் பாடசாலையில் உட்கார்ந்த நிலையில் இருப்பதை வெறுப்பது.
03. பெற்றோரை விட்டு வெளியே வந்தால் தம்மை எவராவது பிடித்து விடுவர் என நினைப்பது.
04. ஏனைய குழந்தைகளின் செயற்பாடுகளைக் கண்டு அஞ்சுவது.
05. பிற குழந்தைகளுடன் பழகுவதில் உண்டாகும் இடைஞ்சல்கள்.
06 பிற குழந்தைகளை ஆசிரியர்களை அனுசரித்துப்போக முடியாமை.
07. பாடசாலைச் சூழல், பிள்ளைகளுக்குப் பிடிக்காமை.
08. இரவில் போதுமான அளவு தூக்கமின்மை.
09. இரவில் பயங்கரக் கனவு கண்டு அவை அப்படியே நடக்கும் என நம்புதல்.
10. பயங்கர மிருகங்கள், பேய் பற்றிய கதைகளை உண்மையென நம்புதல்.

ஆகவும் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லும் பிள்ளைளில் பத்துப் பேரில் ஒருவர் பாடாலைப் பாடங்களில் திறமையற்றிருப்பர். இது ஒரு நரம்பியல் தொடர்பான நோய். இவர்கள் அளவுக்கு மீறிய சுறுசுறுப்புடன் காணப்படுவர். ஒரு இடத்தில் சில நிமிடங்களுக்கு மேல் இருக்கமாட்டார்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்கமாட்டார்கள். பாடங்களை ஒருசில நிமிடங்களுக்கு மேல் அவதானிக்கமாட்டார்கள். இவர்களைக் குழந்தைநல மருத்துவரிடம் காட்டினால் குணமாக்கலாம்.

பாடசாலையைவிடவும் பெற்றோரிடமிருந்தே பிள்ளைகள் நிறையக் கற்றுக்கொள்கின்றனர். பெற்றோரிடம் பிள்ளைகள் எதிர்ப்பார்ப்பது அன்பையும், பாராட்டையுமே. பலமுறை போட்டியில் பங்குபற்றிப் பெறும் வெற்றியைப் பெற்றோர் பாராட்ட வேண்டும். பலரிடம் சொல்லிப் பெருமைப்பட வேண்டும்.

**பிள்ளைகளைத் தண்டிப்பதால் ஏற்படும் விளைவுகள்**
01. பொறுமை, அன்பு, பரிவு, விளக்கங்கள் ஊடாகவே அவர்களைத் திருத்தமுடியும்.
02. திக்குவாய்க்கு, குழந்தையின் மனப் போராட்டமும் பதற்றமுமே காரணமாகும்.
03. பொதுவிடயங்களில்வைத்துப்பெற்றோரோ, மாணவர் முன் வைத்து ஆசிரியரோ பேசுவதையோ, அடிப்பதையோ பிள்ளைகள் அவமானமாகவே கருதுகின்றனர். பாடசாலை இடைவிலகல், வீட்டை விட்டு ஓடுதல் இவற்றால் ஏற்படுகின்றன.
04. குழந்தைக்குப் பிறப்பிலிருந்தே சுயநலம் தொடர்பான வன்முறையிருக்கும்.
05. தண்டனை, தவறு செய்யும் பிள்ளைகளை முரடனாக்குகின்றது.
06. எடிசனின் மின் குமிழ் கண்டுபிடிப்பு இருளில் இருந்த உலகை வெளிச்சத்துக்கு ஆளாக்கியது. பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் பிள்ளைகளைப் பெரியவர்களாக்க உதவுகின்றன.
07. குழந்தைகள் பொய் சொல்வது பெற்றோரின் தவறினால்தான்.
08. தவறு செய்யும் குழந்தைகளை அரவணைத்து தவறுகளால் விளையும் தீமைகள் பற்றி விளங்கப்படுத்த வேண்டுமன்றித் தண்டிக்கக் கூடாது.
09. தண்டனை குழந்தைகளிடம் மாறுபட்ட எதிர்மறை விளைவை ஏற்படுத்தும். இதனால் பிள்ளைகள் எரிச்சலடைவதுடன், தம்மீது இரக்கம் கொள்வதுடன் "தமக்கு யாருமில்லை" என்ற பய உணர்வுக்கும் பழிவாங்கும் எண்ணத்துக்கும் தள்ளப்படுகின்றனர்.

அண்மைக்காலமாக வேலியேபயிரைமேய்வதுபோன்று, கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், அதிபர்களும், பிக்குமாரும் சிறுவர்கள் மீதான கொடுமையில் ஈடுபட்டிருப்பது யாரைத்தான் நம்புவதோ என்ற திரிசங்கு நிலையைஅவர்கள் மத்தியிலே ஏற்படுத்தியுள்ளது. தினமும் 3 தொடக்கம் 5 பிள்ளைகள் இந்தக் கொடுமைக்குள்ளாவது ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது. 2011 இல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்த முறைப்பாட்டைவிடவும் இந்த வருடத்தின் முதல் 3 மாத காலப்பகுதியில் கிடைத்த முறைப்பாடுகள் 8 வீதத்தால் அதிகரித்துள்ளது. போர் இடம்பெறுமிடங்களில் பெண்களும், சிறுவர்களும் அரசபடைகளாலும், போராட்டக்குழுக்களாலும் பாலியல் வதைக்கு ஆளாவது போர் இடம்பெறும் நாடுகளுக்குச் சாதாரண நிகழ்வாகும். இங்கு பெண்களும் சிறுமிகளும் போராயுதமாகவே பயன்படுத்தப்படுகின்றனர். வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் போர் நிறைவடைந்து 8 ஆண்டுகள் கடந்தபோதும் இந்தக் கொடிய நிகழ்வுகள் தொடர்வது முற்றுப் பெறவில்லை.

> தாம் சிறியவர்கள், வலிமையற்றவர்கள் என்பதாலே பெரியவர்கள் தம்மை அடிக்கின்றனர் எனப் பிள்ளைகள் நினைக்கின்றனர். எல்லா உயிர்களும் நீண்டநாள் உயிர்வாழ ஆசைப்படுகின்றன. அனைத்து உயிர்களும் தண்டனைகண்டு பதறுகின்றன. அஞ்சுகின்றன. சிறுவர்களை அடிக்கும்போது அவர்களுக்கு வேதனை, அவமானம், பதகளிப்பு, ஆத்திரம், இதனால் வஞ்சம் தீர்க்கும் எண்ணம் போன்றன ஏற்படுகின்றன. உளவியல் ரீதியான தாக்கத்தை அவர்களில் ஏற்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கடகம்

தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு பக்குவமாக காரியங்களை சாதிக்கும் கடக ராசியினரே, இந்த காலகட்டத்தில் திட்டமிட்டபடி காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பண வரத்து தாமதப்பட்டாலும் கையில் இருப்பு இருக்கும். வேளை தவறிச் சாப்பிட வேண்டி இருக்கும். முக்கியமான பணிகள் தாமதமாக நடக்கும். வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிச் சென்று விடுவது நல்லது. மற்றவர்களுக்கு உதவும் போது கவனமாக இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்படியான நிகழ்ச்சிகள் நடக்கும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடின உழைப்புக்குப்பின் முன்னேற்றம் அடைவார்கள். எதிர்பார்த்த விடயங்கள் வந்து சேரும். வாடிக்கையாளர்களை திருப்தி செய்யக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயற்பட்டுப் பாராட்டு பெறுவார்கள்.

குடும்பத்தில் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்களின் நலனுக்காக பாடுபடுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனதில் துணிச்சல் ஏற்படும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு சாதகமான காலமாக அமையும். உழைப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கும். மனதிற்கு சந்தோஷமான காரியங்கள் நடக்கும். கலைத்துறையினருக்கு ஓரளவு முன்னேற்றம் கிடைக்கும். தாங்கள் மேன்மையடைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்ப்புகள் வரலாம். அதிலும் தொழில்நுட்பத் துறை சார்ந்து இருப்பவர்களுக்கு வாய்ப்புகள் குவியும்.

பழைய கொடுக்கல வாங்கல்களை வசூலிப்பதில் வேகம் காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்திட நினைப்பவர்கள் அதற்கான ஆலோசனைகளில் ஈடுபடுவது நல்லது.

பெண்களுக்கு முக்கியமான வேலைகளில் தாமதம் உண்டாகும். வீண் பிரச்சினைகளை கண்டால் ஒதுங்கிச் சென்று விடுவது நல்லது. அரசியல் துறையினர் முக்கிய நபர்களை சந்திக்க வேண்டி இருக்கும். கொடுத்த கடனை திருப்பி வாங்க முயல்வீர்கள். வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். கவனமாகப் பேசுவது நல்லது. நண்பர்களிடம் முக்கிய விடயங்களை ஆலோசனை செய்வதையும், அடுத்தவர் பற்றி பேசுவதையும் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் இருந்த மெத்தன போக்கு மாறும். புத்தகங்களை இரவல் கொடுக்கும் போது கவனம் தேவை.

**பரிகாரம்:**
திங்கட்கிழமைதோறும் அங்காள பரமேஸ்வரியை வணங்க பிரச்சினைகள் சுமுகமாகத் தீரும். மனக்குறை நீங்கும்.

**அதிர்ஷ்ட நாள்கள்:**
ஞாயிறு. புதன். வெள்ளி.

## வரலாற்றில் இன்றைய தினம்

1940-பிரான்ஸ் மற்றும் பிரிட்டனுக்கு எதிராக இத்தாலி போர்ப்பிரகடனம் செய்தது.
1944-கிரேக்க போரியா டிஸ்ரோமாவில் ஜேர்மணிய துருப்புக்களால் ஆண்கள், பெணகள், சிறுவர்கள் என 218 பேர் படுகொலைசெய்யப்பட்டனர்.
1945-புரூணையை விடுவிக்க புருணே குடாவில் ஆஸ்திரேலியப் படைகள் தரையிறங்கின.
1963 -பால்வேறுபாட்டின் அடிப்படையில் வேறுபட்ட சம்பளம் வழங்கும் முறையை ஒழிக்கும் சம சம்பளம் வழங்கும் சட்டத்தில் ஜோன் எப்.கெனடி ஒப்பமிட்டார்.
1967 -சிரியாவும், இஸ்ரேலும் போர் நிறுத்தத்துக்கு சம்மதித்ததையடுத்து ஆறு நாள் போர் முடிவுக்கு வந்தது.
1986-குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் கடற்படையால் மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டனர்.
1996-சின்பின் அமைப்பின் பங்குபற்றல் இன்றி, வடக்கு அயர்லாந்தில், சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கியது.
1997 -கெமர் நோச் தலைவர் பொல்பொட் தனது பலம் வாய்ந்த தெற்குப் பகுதியிலிருந்து தப்பி ஓடுவதற்கு முன்னர், பாதுகாப்புப்படைப் பிரிவுத் தலைவர் சண் சென் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களைக் கொன்றுவிடுமாறு கட்டளை பிறப்பித்தார்.
1999 -கொசோவோவிலிருந்து சேர்பியப் படைகளை திருப்பப் பெற ஸ்லோபோடன் மிலோசெவிக் சம்மதித்ததை அடுத்து நேட்டோ விமானத் தாக்குதலை நிறுத்தியது.
1992- விமானக் குண்டு வீச்சில் கல்வளைப் பிள்ளையார் கோயில் சேதம்.
1992 - விமானக் குண்டு வீச்சில் மாகியப்பிட்டியில் பெண் ஒருவரும் சிறுவனும் சாவு.
1992- பூநகரியில் கண்ணிவெடி, லெப்டினன்ட் கேணல் உட்பட 3 படை அதிகாரிகள் இறந்ததாக ரூபவாஹினி தெரிவிப்பு.
1992- ஈழப் போர் 2 தொடங்கி இரண்டு வருடங்கள் முழுமை.
1992- ராஜீவ் கொலை வழக்கு பகிரங்க விசாரணைக்கு திமுக வற்புறுத்து.
1994 - கல்வி உலகின் கலங்கரை விளக்கு பேராசிரியர் அழகையா துரைரசா 11.06.1994 இல் மறைந்தார். 1988 செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரானார்.
2002 - இரண்டு மனிதர்களிடையே நரம்பு மண்டலத்தொகுதி ஊடாக, முதல் முறையாக நேரடி இலத்திரனியல் தொடர்பாடல்ப் பரீட்சார்த்தமாக பிரிட்டனில் கெவின்வோர் விக்கால் மேற்கொள்ளப்பட்டது.

**நாளை**

**வைகாசி-28**
ஞாயிற்றுக்கிழமை -11.06.2017
திதி: துதியை மு.இ.10.41
நட்சத்திரம்: மூலம் கா. 08.08
சுபநேரம்:08.52-10.22 வரை
ராகுகாலம்:04.22-05.52 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதை நாம் விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்வோம்

வெளிநாட்டிலிருந்து வந்த தனயன், தனது தாயாரை முதியோர் இல்லத்தில் சேர்த்ததால் முதுமையான அந்தத் தாய் அழுது புரண்டு கண்ணீர் விட்ட சம்பவம் அச்சுவேலியில் இடம்பெற்றிருக்கிறது. இது அவரது உறவுகளை மட்டுமன்றி ஒட்டுமொத்தச் சமூகத்தையும் உணர்வு ரீதியாகத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

முதியோர் இல்லங்கள் எதற்காக உருவாக்கப்பட்டன என்பதறகப்பால் எவர் வேண்டுமானாலும் அங்கு முதியவர்களைச் சேர்த்துவிட்டுச் செல்லலாம் என்ற நிலை தற்காலத்தில் ஏற்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

திருமணம் செய்து பிள்ளை இல்லாதவர்கள் துணையை இழந்திருந்தால் அல்லது அவர்கள் இறுதிக்காலத்தில் தமது இயலாமை காரணமாக முதியோர் இல்லங்களை நாடிச் செல்லலாம். பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்து பராமரிக்க எவருமில்லாது விட்டாலும் வேறு வழியின்றி முதியோர் இல்லம் போகலாம். ஆனால் அச்சுவேலியில் இடம்பெற்ற சம்பவம் மிக மோசமானது. மகன் வெளிநாட்டில் இருக்கும்வரை அந்தத் தாய் தனது வீட்டில்தான் இருந்துள்ளார். மகன் வெளிநாட்டிலிருந்து வந்ததும் தாயாரை வீட்டைவிட்டுத் துரத்துவதற்காக முதியோர் இல்லத்தில் சேர்த்திருக்கிறார். ஒருவேளை மகன் வராதிருந்தால் அந்தத்தாய் தனது வீட்டில் சந்தோசமாக இருந்திருக்கக்கூடும். வயோதிபர்கள் வீட்டில் இருப்பது ஒரு நூலகத்துக் குச் சமம் என்று கூறுவார்கள். அந்தளவு அனுபவம், பட்டறிவு அவர்களிடம் இருக்கும். தவிர, முதியவர்கள் பெரும்பாலும் ஓய்வு நிலையில் இருப்பவர்கள். இயன்ற வேலைகளைச் செய்தாலும் அவை வீட்டை மையப்படுத்தியதாகவே இருக்கும். அதனால் வீட்டில் அவர்கள் இருப்பார்கள். வீட்டிலுள்ள பிள்ளைகள் தொழில் நிமித்தமாக வெளியில் சென்றுவரலாம். வீட்டின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுகின்றது. முதியவர்களை நம்பிப் பிள்ளைகளை வீட்டில் விட்டு விட்டு எங்கும் சென்றுவரலாம். அப்படிப் பிள்ளைகளை விட்டுச் செல்பவர்கள், தாம் இந்த விடயத்தில் எவ்வளவோ கொடுத்து வைத்தவர்கள் என்று கூறுமளவுக்கு முக்கிய இடத்தை முதியோர் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதனை மறுக்க முடியாது.

ஆனால் அச்சுவேலிச் சம்பவம் முரணாக அமைந்துவிட்டது. மறுத்தபோதும், வேண்டாம் வேண்டாம் என்று அழுதபோதும் தன்னைப் பெற்றெடுத்து ஆளாக்கி வளர்த்துவிட்ட தாயை, தாயார் மகன் முதியோர் இல்லத்தில் சேர்த்துள்ளார். அவர் அங்கு அழுது புரண்டு குளறியதைக் கண்ட அந்தத் தாயின் உறவுகளும் அவரை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனையும் மீறி வலிகாமத்திலுள்ள முதியோர் இல்லத்தில் சேர்த்திருக்கிறார். அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்




பயன் கிடைக்கவில்லை. இறுதியில் தாய் மகன் உறவு அற்றுப் போனது. முதியோர் இல்லத்தி லிருந்து தாயை உறவுகள் அழைத்துச் செல்ல மகன் விடாப்பிடியாக இருந்து ள்ளார். சட்ட வரைமுறையும் அதற்குக் காரணமாகிவிட்டது. பின்னர் ஊர்ப் பெரியவர்களது உதவியுடன் அந்தத் தாயை முதியோர் இல்லத்திலிருந்து உறவுகள் தமது வீட்டுக்குக் கொண்டு சென்றனர்.

ஆக, முதியோர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள எவ்வளவோ இருக்கின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது ஆலோசனையும், வழிகாட்டுதல்களும் ஆசீர்வாதமும் எமக்கு முக்கியமானவை என்பதனை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். எதை நாம் விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்வோம்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அனைவரிடமும் அன்புடன் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் வரும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். ஆன்மிக நிகழ்ச்சியில் பங்கேற்பர்.

**மிதுனம்:** நேர்மையான குணத்துடன் செயல்படு வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தி ஆதாயம் காண்பீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** புதியவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேர தாமதமாகும்.

**சிங்கம்:** உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உண்டாகும். விருந்து உபசரிப்பில் கலந்து கொள்வீர்கள். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**கன்னி:** உழைப்புக்குரிய நற்பலன் உங்களைத் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் உயரும். விருப்ப தெய்வ வழிபாடு நிறைவேறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**துலாம்:** மனதில் இருந்த குழப்பம் மறையும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் ஆதாயம் உயரும். மனைவியின் செயல்பாடு பெருமை சேர்க்கும்.

**விருச்சிகம்:** பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வளர்ச்சி உண்டாகும். திடீர் செலவால் சேமிப்பு கரையும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

**தனுசு:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் கூடும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உறவினருக்கு இயன்ற அளவில் உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் உண்டாகும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**கும்பம்:** திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் லாபம் காண்பீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும். விருப்ப தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மீனம்:** அன்றாட பணிகளில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைவதால் வருமானம் கூடும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். ஆரோக்கியத்தில் அக்கறை உண்டாகும்.

# பிரபாஸின் புதிய அவதாரம்..!



எஸ்.எஸ்.ராஜமௌலியின் பிரம்மாண்ட படைப்பான 'பாகுபலி' வெற்றியைத் தொடர்ந்து அமெரிக்காவில் விடுமுறை கொண்டாடிவிட்டு நாடு திரும்பிய நாயகன் பிரபாஸ், புதிய அவதாரம் எடுத்துள்ளார். உலகம் முழுவதும் அபரிமிதமான வசூல் வேட்டையாடி வரும் 'பாகுபலி' திரைப்படம், இந்தியச் சினிமாவின் பெருமையாகக் கருதப்படுகிறது. இந்த நிலையில், இந்தப் படத்துக்காகக் கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் தனது கடும் உழைப்பைக் கொட்டிய பிரபாஸ் அமெரிக்காவில் விடுமுறையைக் கொண்டாடினார். விடுமுறை முடிந்து நாடு திரும்பிய பிரபாஸ், பிரபல சிகையலங்கரிப்பாளர் அலிம் ஹக்கிம்மைச் சந்தித்து புதிய அவதாரத்தை உருவாக்கியுள்ளார். பாகுபலியில் அரசர் கதாப்பாத்திரத்துக்காக வளர்த்திருந்த முடியை வெட்டி புதிய நபராக காட்சியளிக்கிறார். பிரபாஸின் புதிய அவ தாரத்தை அலிம் ஹக்கிம் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். பாகுபலி திரைப்படத்துக்காக உடல் எடையை கூட்டிய பிரபாஸ், இந்த ஒளிப் படத்தில் சற்று மெலிந்து காணப்படுகிறார். இதைத் தொடர்ந்து சுஜித் இயக்கத்தில் பிரபாஸ் நடிக்கவிருக்கும் 'சாஹோ' திரைப்படத்தின் படப்பிடிப்பில் கலந்துகொள்வார் எனக் கூறப்படுகிறது. 'சாஹோ' திரைப்படத்தில் பிரபாஸின் தோற்றம் குறித்த ஆர்வம் தற்போதே ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**பணம் அதிகம் வைத்திருப்பவர்களை பார்த்து பொறாமைப் பட்ட காலம் மாறி**



**ஆரோக்கியமானவர்களை பார்த்துத் தான் தற்போது பொறாமைப்படுகின்றனர்**

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| | 3 | | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 6 | 8 | 3 | 2 | 5 | 9 | 7 | 4 |
| 3 | 2 | 7 | 9 | 4 | 1 | 5 | 6 | 8 |
| 6 | 4 | 3 | 8 | 7 | 9 | 1 | 5 | 2 |
| 7 | 9 | 2 | 1 | 5 | 4 | 3 | 8 | 6 |
| 5 | 8 | 1 | 2 | 6 | 3 | 7 | 4 | 9 |
| 2 | 7 | 9 | 4 | 3 | 8 | 6 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 7 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 6 | 5 | 1 | 2 | 4 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**மத்தியூஸ்: சார் கைய குடுங்க சார் ஏற்கனவே 14 ஆட்டங்களில வெண்டுட்டிங்க எப்படியும் இதயும் நீங்கதான் வெல்லப் போறிங்க...**




**கோக்லி: ஏன் மத்தியூஸ் நீங்களும் நாங்க வெல்லுவம் எண்டு தானே நினைச்சிங்க அப்போ நாங்க நினைச்சதில தப்பில்லயே...!**




**அடேய்... இது தெரியாம நான் கூட நாலஞ்சி தடவ பிளைட்ல போயிட்டு வந்துட்டேனப்பா...**



சச்சின் @itz_vj

தவறுகளை ஒப்புக் கொள்ளும் தைரியமும், அதைத் திருத்திக் கொள்ளும் பலமும்தான் உண்மையான வெற்றிக்கு வழி

பிரபாஸ்க்கு 6 ஆயிரம்
பெண்களிடம் இருந்து திருமணம்
செய்ய அழைப்பு வந்ததன்
காரணம்?
பாகுபலி - மதயானை
அடக்கியதாலோ
காளகேயர்களுடன் போரில்
வென்றதாலோ
[illegible]
மூன்று அம்புகள் எய்யும் வீரன்
என்பதாலோ
ஆணழகனோ நல்லவனோ
எதுவும் இல்லை
அவன் அம்மாவிடம் துணிந்து
"நீ செய்தது தவறு. என் மனைவி
செய்வதே சரி" என்று சொன்னான்
பாருங்க! அந்த ஒரே ஒரு
காரணத்துக்காகத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு படங்களுக்கும் இடையே 10 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்





## விகடத் துணுக்குகள்



"வெளியே, உத்தரவின்றி உள்ளே வரக் கூடாதென்று எழுதிப் போட்டிருக்கிறேனே ஏன் உள்ளே வந்தாய்? "
உத்தரவு வாங்குவதற்காகத் தான் உள்ளே வந்தேன்.



மேல் நோக்கி வீசும் பொருள் கீழ் நோக்கி வரக் காரணம் என்ன?
மேலே அதைப் பிடிப்பதற்கு எவரும் இல்லாத காரணத்தால் தான் கீழே விழுகிறது.



"அம்மா எங்கள் வகுப்பில் ஒரு சிறுவன் கீழே விழுந்து விட்டான். எல்லோரும் அவனைப் பார்த்து சிரித்தார்கள். நான் மட்டும் அழுதேன்"
"உனக்கு மிகவும் இரக்க குணம்"
"விழுந்ததே நான்தான் அம்மா"



உங்க மகன் என்ன செய்கிறான்?
மேலே படிக்கிறான்.
மருத்துவருக்கா?பொறியியலாளருக்கா?
இல்லை, மாடியிலே கதைப்புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறான்.



# தாயின் இதயம்

ஒரு ஊரில் ஒரு தாயும் மகனும் வாழ்ந்து வந்தனர். சிறு வயதிலே தந்தையை இழந்த மகனைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து ஒரு மருத்துவராக்கியும் பார்த்து விட்டாள் தாய். அந்தத் தாய் அவனது படிப்புக்காக அவர்கள் வாழ்ந்து வந்த அந்தச் சிறிய வீட்டைத் தவிர இருந்த நில புலமெல்லாம் விற்று விட்டாள். இந்த நிலையில் அவன் விரும்பிய பெண்ணையே மணம் முடித்துக் கொடுக்க இரண்டு பேரப்பிள்ளைகளுக்கும் அவள் பாட்டியானாள். பேரப்பிள்ளைகளுடன் கதை கூறுவதும் விளையாடுவதுமே அவள் பொழுது போக்காயிற்று.

நாளாக நாளாக அவளது மருமகள் மாமியாரிடம் கடும் எதிர்ப்பைக் காட்டி வந்தாள். மகன், வயதான தன் தாயில் காட்டும் அன்பை அவள் மனம் ஏற்றுக் கொள்ள மறுத்திருக்க வேண்டும். தினமும் மகன் வேலைவிட்டு வீட்டுக்கு வந்ததும், தாய் பற்றிய குற்றப் பத்திரிகையை மனைவி வாசிக்க, மகன் நிலைமையைப் புரிந்து கொண்டு அவளிடம் சமாதானம் பேசுவதும் அதன் பொருட்டு விவாதங்கள் நடைபெறுவதுமாக வீடு நிம்மதியிழந்து காணப்பட்டது. மகன் தனக்கும் மனைவிக்கு கிடையில் இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தவிப்பதைத் தாய் உணர்ந்தாள். ஒரு முடிவுக்கும் வந்தாள். ஒரு கிலோ மீற்றர் தூரத்துக் கப்பால் இருந்த் வெளிநாட்டில் வாழும் அவளது தூரத்து உறவினர் ஒருவரின் வீட்டில் தனித்து வாழப்போவதை மகனிடம் தெரிவித்தாள். "மகனே! நீ வாழ வேண்டியவன். எனக்காக உன் குடும்ப சந்தோஷத்தைக்கெடுத்துக் கொள்ளாதே! என் செலவுக்கு அப்பப்ப கொஞ்சப் பணம் தா. அது போதும். நீ விரும்பினால் இடையிடையே என்னை வந்து பார்த்துக் கொள். நான் எங்கிருந்தாலும் என் நினைவு உன்னைச் சுற்றியே இருக்கும்" என்றாள். மகனோ முடிவெதுவும் எடுக்க முடியாமல் தவித்தான். ஆனால் இங்கிருந்தும் தாய் வயதான காலத்தில் நிம்மதியாக இல்லை. அங்காவது நிம்மதியாக இருக்கட்டும் என்ற மனத்திருப்தியில் தாயின் விருப்பப்படியே எல்லா ஒழுங்குகளையும் செய்து விட்டான்.

காலம் நகர்ந்தது. மகனின் மனைவி நோய் வாய்ப்பட்டாள். அவனது இதயத் தசைகள் யாவும் செயலிழந்து வருவதாகவும், மிக விரைவில் மாற்று இதயம் பொருத்தாவிடில் இதயம் முற்றாக செயலிழந்து விடும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மகன் எங்கு தேடியும் இன்னொரு இதயம் கிடைக்க வேயில்லை. மனம் சோர்ந்து போன அவன் தாயின் முன் சோகமாக உட்காந்திருந்தான். "மகனே நான் வயசானவள். எப்படியும் சாகத்தான் போகிறேன். என்னைக் கொன்று என் இதயத்தைப் பொருத்தி உன் பிள்ளைகளின் தாயைக் காப்பாற்று" என்றாள். "ஐயோ அம்மா" என்னால் அது முடியாது" என்று கூறி மகன் எழுந்து போய் விட்டான். இரண்டு வாரங்களாக இதயத்துக்காக அலைந்ததில் தாயைச் சந்திக்க அவன் வரவில்லை.

மகன் சென்ற பின் தாய் அன்ன ஆகாரம் தண்ணீர் தவிர்த்து, படுத்த படுக்கையானாள். மருமகளை இழந்தால் மகனதும் பேரப்பிள்ளைகளதும் வாழ்வு எப்படியாகுமோ என்ற கவலை அவளை வாட்டியெடுத்தது. இறுதியாக வயதான அவள் உடல் பலவீனப்பட்டுப் போனது. சாவுப் படுக்கையில் மகனை அழைத்தாள். மகன் மடியில் தாயின் உயிர் பிரிந்தது. உயிர் பிரியும் வேளை அவள் அவனின் கைகளைப் பற்றி தனது நெஞ்சில் வைத்து அழுத்தியதில் அவன் ஏதோ ஒன்றைத் தாய் சொல்ல முற்பட்டதை உணர்ந்தான். அவனது வைத்திய அறிவு விழித்துக் கொண்டது. தாயை இழந்த வேதனையைச் சுமந்த படி துரிதமாக செயற்பட்டு, தாயின் இதயத்தை கையில் எடுத்தபடி விரைவாக வைத்திய நிலையம் புறப்பட்டான். புறப்படுகையில் பதற்றத்தில் தடுமாறித் தரையில் விழுந்தான்.

அப்போது "அன்பு மகனே அடிபட்டு விட்டதாய்யா? கொஞ்சம் பார்த்துப் போகக் கூடாதா? என்று அவன் கையிலிருந்த அம்மாவின். இதயம் பாசத்துடன் குரல் கொடுத்தது.

**இறைவன் தன்னை வெளிப்படுத்த மனிதனுக்கு தாயைப் படைத்தான்.**

## நான் மிருகக் காட்சிச்சாலைக்கு சென்ற அனுபவம்



- நான் எனது பெற்றோருடன் காலை ஒன்பது மணியளவில் தெஹிவளையிலுள்ள மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்றேன்.
- மிருகக் காட்சிச் சாலையைப் பார்வையிடுவதற்கான நுழைவுச் சீட்டை எனது பெற்றோர் பெற்றுக் கொண்டனர்.
- முதலில் அங்குள்ள பலவர்ணப் பறவைகளைப்பார்வையிட்டோம்.
- அதன் பின்னர் அங்கிருந்த கண்ணாடியிலான நீர்த் தொட்டிகளில் அழகிய வண்ண வண்ண மீனினங்களைப் பார்வையிட்டோம்.
- அபூர்வ மீன்களைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்.
- பின்னர் பாம்பு இனங்களைப் பார்வையிட்டோம்.
- அனகொண்டா பாம்பினத்தைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் பயமாக இருந்தது.
- அதனால் அந்த இடத்தை விட்டு நீரில் வாழும் முதலை, நீர் யானை டொல்பின் போன்ற வற்றைப் பார்வையிட்டேன்.
- இறுதியாக பல வகையான மிருகங்களைப் பார்வையிட்டோம்.
- ஒட்டகச்சிவிங்கி, காண்டா மிருகம், மனிதக்குரங்கு என்பன விசித்திரமானவையாக இருந்தன.
- அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் யானைகளின் நடன நிகழ்ச்சி நடக்குமென அங்கிருந்தவர்கள் கூறினார்கள்.
- அதனால் மாலை ஐந்து மணி வரை இருந்து யானைகளின் நட னங்களையும் சாகச நிகழ்வுக ளையும் கண்டு களித்து விட்டு வீடு திரும்பினோம்.



## மாதா பிதா குரு தெய்வம்

அம்மாவின் பாசம் – நமக்கு
அன்பு நிறைந்த பாசம்
அப்பாவின் நேசம் – நமக்கு
ஆசை வளரும் நேசம்

ஆசானின் பாடம் – நமக்கு
அறிவூட்டும் பாடம்
ஆண்டவன் காவல் – நமக்கு
அருளை ஈட்டும் காவல்

ஒன்றே கடவுளாம் – நமக்கு
ஒற்றுமைதான் வேண்டுமாம்
நன்றே கூடுவோம் – நமக்கு
நன்மைதான் நாடுமாம்

# கடலடிக் கேபிள்

தந்திக் கம்பி முதன் முதல் 1844இல் வழக்கில் வந்தது. மக்களின் வெகு விரைவான தொடர் பாடலுக்காக நிலத்தின் மேல் கம்பங்கள் நட்டு ஆயிரக் கணக்கான கிலோ மீற்றர்கள் நீளத்தில் தந்திக் கம்பிகள் அமைக்கப்பட்டன. கடலுக்கு அப்பால் உள்ளவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த பல கம்பிகளைச் சேர்த்து முக்கிய கம்பி வடங்கள் (cable) காப்பிடப்பட்டு கடலுக்கடியில் போடப்பட்டு, அதன் வழியே தந்தி அனுப்பப்பட்டது. அவை கடல் நீர், மண் முதலியவைகளால் அரிக்கப்படாமலிருக்கவும், கடலிலுள்ள பிராணிகளால் சேதம் ஏற்படாமல் இருப்பதற்குமாக நன்கு மேலுறை இடப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கும். காப்புப் பொருள்கள் பூசப்பட்ட சணலும், காகிதமும் துணியும் நல்ல காப்பான்களாகும். மேல் பூச்சுக்கு பொலித்தீன் காப்பான்களும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் கேபிள்கள் தொலைக்காட்சி, ரேடியோ ஆகியவற்றில் மின்னோட்டங்களை அனுப்ப பயன்படுகின்றன. 1866இல் அயர்லாந்துக்கும் நியூபவுண்லாந்திற்கும் இடையே முதன் முதலில் கடலடி கேபிள்கள் அமைக்கப்பட்டன. 36ஆண்டுகளின் பின்னர் பசுபிக் சமுத்திரத்திலும் கேபிள்கள் இடப்பட்டன. 1955இல் அத்திலாந்திக் சமுத்திரத்தின் குறுக்கே தொலைபேசிக் கேபிள்கள் அமைக்கப்பட்டன. இன்று கேபிள்கள் உலகத்தையே சுற்றி வருகின்றன. அவைகளின் நீளம் சுமார் 7 லட்சம் கிலோ மீற்றர்களாகும். இன்று உலகில் வாழும் எந்தப் பகுதி மக்களுடனும் தொலைபேசியால் தொடர்பு கொள்ள முடியும். குரல் பெருக்கிகள் (Repealer) 50 கி.மீற்றருக்கு ஒன்று வீதம் பொருத்தப்பட்டுள்ளதால் கேபிள்கள் மூலம் நீண்ட தூரத்துக்கு சிதைவுறாமல் செய்திகளை அனுப்புவதுடன் ஒரே கேபிளில் வெவ்வேறு அதிர்வெண் வழியே 75இற்கும் மேற்பட்ட பேச்சுக்களை அனுப்பவும் முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்களின்...
60 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் 26ம், 60மில்லிமீற்றர்பராலைற்கள் 5ம் மீட்கப்பட்டன.

மயிலிட்டி
மயிலிட்டியில் உள்ள தனியார் ஒருவரின் வீட்டுக் கிணற்றுக்குள் மிதிவெடி கண்டுபிடிக்கப் பட்டது. வீட்டின் உரிமையாளர் கிணற்றை துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டபோது மிதிவெடி இருப்பதை அவதானித்து காங்கேசன் துறைப் பொலிஸாருக்கு அறிவித்தார்.
சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் உதவியுடன் மிதிவெடியை அகற்றவேண்டும் என்றும், அது வரையும் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தியுள்ளனர்.

அக்கரை
தொண்டமானாறு அக்கரை பிரதேசத்தில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
காணி உரிமையாளர்கள் காணியை துப்புரவாக்கியபோது மிதிவெடி இருப்பதை அவதானித்து அச்சுவேலிப் பொலிஸாரிடம் தெரிவித்தனர். பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மிதிவெடிகளைப் பார்வையிட்டனர். அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ற-10-7-26)

## வீடு விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ,1 ஆம் கட்டையடியில் ,அமைதியான சூழலில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு. தொடர்புகளுக்கு

**0778546124 (இன்றும்,நாளையும்)**

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான, 2½மாத ஊர்க் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

**077 930 9740**

## வேலை ஆள்கள் தேவை

யாழ். Clock Tower Lane இல் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் UK பொறியியல் கல்வி நிறுவனத்திற்கு Receptionist, Administrative , Assistant தேவை. A\L தகுதியுடன் கணினி அறிவுள்ளவர்கள் (அனுபவம்தேவையில்லை) விண்ணப்பிக்கலாம்.

**தொடர்பு . 077 386 7695**
**apssengineer@gmail.com**

## செய்து கொடுக்கப்படும்

யாழ். நகரில் உள்ள உங்கள் வீடுகளை புனரமைத்து கொள்ளவும் புதிய வீடுகளை கட்டிக்கொள்ளவும் எம்மை தொடர்பு கொள்க. நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் வேலைகள் செய்து தரப்படும்.

**077 045 4140 (ஜெரால்ட்)**

## தேவை

றொட்டி வேலை, சமையல் வேலை தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு - 077 8545 173

## பணியாளர் தேவை

1. முகாமையாளர்.
2. விற்பனைப்பிரதிநிதிகள்.
3. சாரதிகள்.
4. பொருள்கள் ஏற்றி இறக்குபவர்கள்.

Coca -Cola Distributor's Siva Brothers
No-15 ,4 th lane , Brown Road, Jaffna
077 772 2215

## வேலை வாய்ப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு கணினி அறிவுடைய பெண் ஊழியர் தேவை. யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 074 0351

## தவறிவிட்டது

சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சபாநாதபிள்ளை நல்லையா என்பவருடைய NIC 603003691V, மோட்டார் சைக்கிள் காப்புறுதி பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன (08.06.2017) அன்று மருதனார்மடத்தில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள் கின்றோம். தொடர்பு - 077 625 3422

## காணி உடனடி விற்பனைக்கு

உரும்பிராய் குடியிருப்புப் பகுதியில் 10 பரப்புக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. உரும்பிராய் / பலாலி வீதி சந்தியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் அமைவிடம் எதிர்பார்க்கும் விலை பரப்பிற்கு 9 இலட்சம். பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
077 444 0165

## முதலாம் ஆண்டு உங்கள் நினைவுகளில் நாம்



தோற்றம் 25.12.1951 — மறைவு 22.05.2016

அமரர்
**தெய்வேந்திரம்பிள்ளை சிவானந்தசோதி**
(மணி)

இருந்தும் இல்லாமல் எம் இதயங்களில்
தெய்வச் சுடரொளியாய் வீற்றிருக்கும்
எங்கள் அப்பாவே
உங்கள் அன்பு வழி நின்று நல்லறம் பேணி
இவ்வுலகில் வாழ உங்கள்
ஆசீர்வாதம் வேண்டி நிற்கின்றோம்.

வட்டு வடக்கு,
கலைநகர், சித்தங்கேணி.

அன்னாரின்
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினாம்பிகை சோமசுந்தரம்



இல.80, அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினாம்பிகை சோமசுந்தரம் கடந்த (08.06.2017) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜரட்ணம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைரட்ணம், யோகாம்பிகை, கமலாம்பிகை, அரியரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிகலா, ஸ்ரீஸ்கந்தராஜா, ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரியந்த, தனுஷியா, தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியும் டில்சாயினி, ருக்ஷாயினி, ஷகிர்த், ஹரிதன், சுவாதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சோ.ஸ்ரீஸ்கந்தராஜா,
இரசாயனவியல் ஆசிரியர்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இல.80, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

### திருமதி கமலாம்பிகை புஷ்பராஜா



புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல 106, புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை புஷ்பராஜா (07.06.2017) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற புஷ்பராஜாவின் (முன்னாள் யாழ். மாநகர சபை களஞ்சியப் பொறுப்பாளர்) அன்புமனைவியும் காலஞ் சென்றவர்களான அப்பாக்குட்டி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சோமசுந்தரம் (கனடா) காலஞ்சென்றவர்களான நாகலட்சுமி, சிவபாதசுந்தரம் மற்றும் சுந்தரலிங்கம் (மயூரா ஹோட்டல், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் புஷ்பவதி, புஷ்பராணி, தயானந்தசோதி, கௌரி, சிவதாஸ் ஆகியோரின் அனபு மைத்துனியும் கிருத்திகா (நோர்வே), கட்ஷன் (சுவிஸ்), கஜன்நாத் ஆகியோரின் பாசமிகு தாயும் கனகேந்திரன், கிரிசா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஹரீஷன், ஷாருஜன், ஸ்ருதி, சகீசன், சானுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
பு. கஜன்நாத் (மகன்)
அ. சுந்தரலிங்கம் (தமையன்)
021 222 6197

106, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி கோபாலு



தோற்றம் 24 . 08 . 1947 — மறைவு 08 . 06 . 2017

அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கோபாலு கடந்த (08.06.2017) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோபாலுவின் அன்பு மனைவியும், அம்பிகாபதி, கமலாம்பிகை, பரஞ்சோதி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கருணபாலன் மற்றும் வாகினி, வசுமதி (ஜேர்மனி) காலஞ்சென்ற சுபாசினி மற்றும் சுரேஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசமலர், ஜெயசீலன், பவளராஜா (ஜேர்மனி) ,நவதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் . ரதுஷன், வைஸ்ணவி(கனடா), ஜர்சனா (ஜேர்மனி), பாணுசா (ஜேர்மனி), தனுசன்(ஜேர்மனி), லக்சிகா, புவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விஸ்ணுவனின் (கனடா) பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு .
அச்சுவேலி

தகவல்:
குடும்பத்தினர்.

**0777605403**

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 . 02 . 1950 — இறப்பு 08 . 06 . 2017

### திருமதி. ஞானகாந்தன் ஜெயநிதி

திருமதி ஞானகாந்தன் ஜெயநிதி வியாழக்கிழமை (08.06.2017) இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற விஜயரத்தினம் நீலாயதாட்சி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற திரு திருமதி இராசரத்தினம் ஞானம்மா தம்பதியரின் மருமகளும் ஞானகாந்தனின் (இளைப்பாறிய பொறியியலாளர்) பாசமிகு மனைவியும் ஜெயகாந்தன், ஜெயமயூரன் (IT பொறியியலாளர்) ஜெயமதன் (IT பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவசக்தியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்) மாமியாரும் சாந்தினி, வசந்தினி, ரஞ்சினி, விஜய் ஆனந், நரேந்திரன், வாசுகி, தேவகி, சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நீலாயதாட்சி, காலஞ்சென்ற சகுந்தலா கதிர்காமசோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (10.06.2017) சனிக்கிழமை மு.ப 10.00 மணியிலிருந்து 3மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

**011 490 0419 / 072 943 6848**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம"

யாழ்ப்பாண மாவட்டம் - நீர்வையம்பதி
அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பழைய) அம்பாள்
திருக்கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனத்தின்
பூங்காவன பெருவிழா - 2017-




அம்பிகை அடியவர்களே!

ஈழத்திருமண்ணின் யாழ்ப்பாணத்திலே சைவமும், முத்தமிழ் புலமையும், இயற்கைவளம் கொழிப்பதுமாகிய நீர்வேலி திவ்விய ஷேத்திரத்திலே கோவில்கொண்டு எழுந்தருளி அடியவர்களின் பவவினை அகற்றி சகல செல்வ போகங்களையும் அருளிவரும் பழம்பெரும் திருத்தலம் "ஆலடியாள்" அருள்நிறை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பழைய) அம்பாளின் பூங்காவனத் திருவிழா இன்று (10.06.2017) சனிக்கிழமை அன்னையின் அருளோடு சிறப்பாக இடம்பெற இருக்கின்றது.

காலம்: 10.06.2017 சனிக்கிழமை பூங்காவன உற்சவம்

காலை 9.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்
மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் அதனைத் தொடர்ந்து
அலங்கரிக்கப்பட்ட அழகிய பூந்தண்டிகையில் அம்பாள் வீதிவலம் வருகையும்.

பூங்காவன திருவிழாவின் சிறப்பு நிகழ்வுகளாக...
விசேட தவில், நாதஸ்வரக் கச்சேரி
தென்னிந்திய விஜய் தொலைக்காட்சி
சுப்பர்சிங்கர் புகழ் கோவிந் பிரசாத்
கலந்து சிறப்பிக்கும்
"இன்னிசை இரவு"

அம்பிகையை சரணடைந்து அதிகவரம் பெற்றிட அடியவர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

விளம்பர அனுசரணை:
Computer Technologi.com
Point pedro road, Puttur, Jaffna
Proprietor: T.Kovinth

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பழைய)
அம்பாள் தேவஸ்தானம்
பரிபாலன சபையினரும், மஹோற்சவ
குழுவினரும்,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 03 . 1959



மறைவு
07 . 06 . 2017

# திருமதி அருந்ததி ஜீவராசா

அச்சுவேலி, இராசவீதி, தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி ஜீவராசா கடந்த (07.06.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார்இராசதுரைசரஸ்வதிதம்பதியரின்அன்புமகளும்ஜீவராசாவின் பாசமிகு மனைவியும் பாலகிருஷ்ணன் (சுவீடன்), தவராசா (ஜேர்மனி), சுபத்திரா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விமலா (சுவீடன்), சக்தி (ஜேர்மனி), ஏகானந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தர்சன் (சுவீடன்), நிலானி (சுவீடன்), நிவேதா (ஜேர்மனி), குமரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் கார்த்தீபன் (ஜேர்மனி), செந்தூரன் (ஜேர்மனி), பிரணவன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி தோப்பிலுள்ள இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராசவீதி, தோப்பு,**
**அச்சுவேலி.**

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
20.11.1937

இறப்பு
11.05.2017



**திருமதி**
**வடிவாம்பிகை**
**சிவசுப்பிரமணியம்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (10.06.2017) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கதிரமலை வீதி,**
**சுன்னாகம் தெற்கு.**

குடும்பத்தினர்.

## நன்றி நவிலல்

51/1, மணல்தரை வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

**செல்வி கனகேஸ்வரி வைத்திலிங்கம்**

**(விளையாட்டு உத்தியோகஸ்தர், ஆங்கில ஆசிரியர்) (ராசா ரீச்சர்)**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு சமுகமளித்து அனுதாபம் தெரிவித்தவர்கள், தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்கள், அவருக்கு வைத்தியசேவை செய்த மருத்துவர்கள், தாதியர்கள் அவரின் விருப்பத்தின்படி உடலை பெறுப்பேற்ற மருத்துவபீடத்தினர் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திருமதி யே. பத்மநாதன்**
**021 221 2573, 077 833 1172**

## டிராக்டர்...

சம்பவத்தில் கிளிநொச்சி, பன்னங்கண்டி- சரஸ்வதி குடியிருப்பைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான அர்ச்சுனன் முரளிதரன் (வயது -42) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார். "மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தின் பெட்டியின் சில்லு உடைந்துள்ளது. அதனைச் சீர்செய்வதற்காகப் பெட்டியை மேல் உயர்த்தப்பட்டது. அது ஓர் பக்கம் சரிந்து வீழ்ந்துள்ளது. அதற்குள் சிக்குண்டே குடும்பத்தலைவர் உயிரிழந்தார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

(வ-ய-101)

## திருமண நல் வாழ்த்துக்கள்

இன்று (10.06.2017) சனிக்கிழமை யாழ்ப்பாணம்
**"அண்ணாமலை ஸ்ரீ ராகவேந்திரா கலாசார மண்டபத்தில்"**
நடைபெறும் திருமண பந்தத்தில் இணையும் எமது நிறுவனத்தின்
கணித ஆசான் **திரு. பசுபதி சுதேஸ் (சுரேஸ்)-சுமித்தா**
தம்பதியரை எல்லாச் சிறப்புக்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.




**சுதேஸ்**
**(சுரேஸ்)**
(Diploma in
Teaching (Maths)

**சுமித்தா**
**(சுமி)**

**சுடர் கல்வி நிறுவனம்**
**குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

**இயக்குநர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

## 09 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு . 01.07.1939
உதிர்வு . 20.05.2008
அமரர் **இராசையா முருகேசு**
திதி : தேய்பிறை பிரதமை



மலர்வு . 19.09.1941
உதிர்வு . 04.05.2008
அமரர் **முருகேசு கமலாதேவி**
திதி : வளர்பிறை சதுர்த்தசி

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் -எங்கள்
நெஞ்சங்களில் இன்றும் -ஓயாது. நிலைத்திருக்கிறது.

**கமலவாசம்**
**[illegible] ஒழுங்கை, கச்சாய் வீதி, கொடிகாமம்.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடர்களின் போது...

வினைத்திறனான நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.
உலகம் முன்னேறியுள்ளது. தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால், இலங்கை இன்னும் முன்நோக்கி நகரவில்லை. எனவே, மாற்றத்தை நோக்கி நகரவேண்டும் என்பதையே அண்மைக்கால இடர்கள் எடுத்துரைத்துள்ளன.
அரச முறைமையானது ஜனநாயக உரிமைகளை மதிப்பதாக இல்லை. அதாவது மக்கள் மதிக்கப்படவில்லை என்பதே இதன் அர்த்தமாகும். மக்கள் தம்மைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளில் பங்குகொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும். இதனை அடைவதாயின் பிராந்திய மற்றும் மாகாண ரீதியில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். அதிகாரங்களை மத்தியில் வைத்துக்கொண்டு வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது.
வடக்கு, கிழக்கில் கடும் வறட்சி நிலவுகின்றது. இது பற்றி அரசு கவனம் செலுத்தி, மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கவேண்டும். இதுவிடயத்தில் அரசு கரிசனை கொண்டுள்ளது என நம்புகின்றோம்" - என்றார். (த)

## இனவாதச்...

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் தனது முகநூல் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.
அந்தப் பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது:
அண்மைக் காலமாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகளின் பின்னணியில் எனது தொடர்பு இருப்பதாக வதந்திகள் பரவுகின்றன.
இவ்வாறான இனவாதச் செயற்பாடுகளின் பின்னணியிலோ அல்லது பொதுபல சேனாவுடனோ எனக்கு எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன்.
நாங்கள் அனைவரும் ஒரே நாடு என்ற ரீதியில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்- என்றார். (த)

## தெற்கு...

செய்கின்றனர். இந்த நிலையில் எவ்வாறு இனங்களுக்கிடையில் நல்லுறவு ஏற்பட முடியும்?
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
வவுனியா மன்னார் மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையில் தேசிய நல்லிணக்கம் தொடர்பாக இடம்பெற்ற சித்திரப் போட்டியில் படங்களைக் காட்சிப்படுத்தும் நிகழ்வு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தலைமையில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு, உரையாற்றுகையில் சாள்ஸ் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,
முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்தில் உள்ளூர் மீனவர்களுக்கும் தென்னிலங்கை மீனவர்களுக்கும் இடையில் வாடி தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. குறித்த வழக்குடன் தொடர்புபட்ட மீன்பிடியில் ஈடுபடும் இரு தரப்பினருக்கும் நீதிமன்று தொழில் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.
அந்த உத்தரவை மீறித் தென்னிலங்கை மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸாரோ ஒருபக்கச் சார்பாக தென்னிலங்கை மீனவர்களைத் தொழில் புரிய அனுமதித்துவிட்டு உள்ளூர் மீனவர்கள் தொழில் புரிகின்றனரா என்பதை மட்டும் பார்க்கின்றனர். இவ்வாறு பொலிஸார் ஓர் இனத்துக்கு மட்டுமே செயற்படும் நிலையில் எவ்வாறு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை எதிர்பார்க்க முடியும்?
இன நல்லிணக்கத்துக்கு விரோதமான செயற்பாட்டை ஆரம்பிப்பவர்களே பொலிஸாராகத்தான் இருக்கின்றது.
கொக்கிளாயில் நீதிமன்றினால் தடைவிதிக்கப்பட்டவர்கள் தொழில் புரிவது எமக்குத் தெரியாது என்று பொலிஸார் கூறமுடியாது. ஏனெனில் இது தொடர்பான நீதிமன்றின் உத்தரவுப் பிரதியை பொலிஸாருக்கு வழங்கி உள்ளூர் மீனவர்கள் கொக்கிளாய் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர். ஆனாலும் முல்லைத்தீவு தலைமைப் பொலிஸ் அதிகாரி மற்றும் கொக்கிளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரின் துணையுடனேயே தென்னிலங்கை மீனவர்கள் நீதிமன்ற உத்தரவையும் மீறி தொழில் புரிகின்றனர்.
இந்த நிலையில் நீதிமன்றை அவமதித்துத் தொழில் புரியும் மீனவர்களால் பிடிக்கப்படும் கடலுணவுகளையே வவுனியா பொலிஸ் நிலையப் பொலிஸார் தமது உணவுக்காகக் கொள்வனவு செய்யும் நிலை தொடர்கிறது.
எனவே நீதிமன்ற உத்தரவுகளைப் பொலிஸார் இன, மத பேதமின்றி நடைமுறைப்படுத்தினால் மட்டுமே உண்மையான இன நல்லிணக்கம் ஏற்படும் - என்றார்.
நிகழ்வில் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் வவுனியா, மன்னார் மாவட்டங்களின் 4 வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (4, 101)

## பொதுநலவாயச்...

பொதுநலவாயச் செயலருக்கும், தலைமை அமைச்சர் ரணிலுக்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றது.
இலங்கைக்கும் பொதுநலவாய அமைப்புக்கும் இடையே இருக்கின்ற உறவுகள் பற்றி இந்தச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.
இதன்போதே தலைமை அமைச்சர் ரணில் மேற்படி அழைப்பை விடுத்துள்ளார். (த)

## காணியை...

காணியை விடுவிக்கக் கோரி இராணுவத் தளபதிக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியை இராணுவம் சுவீகரித்து முகாம் அமைத்துள்ளது.
பாதிக்கப்பட்ட மக்கள் இது குறித்துத் தெரிவிக்கையில்,
காணிகள் மீண்டும் எமக்கு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துக் கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி முதல் தொடர் அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டோம். ஒரு மாத கால போராட்டத்துக்குப் பின்னர் 20 குடும்பங்களுக்குச் சொந்தமான 7.75 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டது. 29 குடும்பங்களுக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியை மூன்று மாத காலத்தில் விடுவிப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். அதனை மாவட்டச் செயலாளரும், பிரதேச செயலாளரும் எமக்குத் தெரியப்படுத்தினார்கள். இராணுவத்தின் தளபாடங்களை அகற்றுவதற்கு சிறிது காலம் தேவை எனக் கருதி நாங்களும் சம்மதித்தோம். அத்துடன் இராணுவத்தின் மீதும், அரச அதிகாரிகள் மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்து 3 மாதம் பொறுமையாக இருந்தோம். ஜூன் மாதம் 4ஆம் திகதியுடன் மூன்று மாதம் நிறைவடைந்துள்ளது. இன்றும் நாங்கள் எங்கள் காணிகளுக்குள் செல்லாது அகதியாக வாடகை வீடுகளில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பிரதேச செயலாளருக்கு இது தொடர்பில் கடிதம் ஊடாகத் தெரிவித்துள்ளோம். விரைவாக எங்கள் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்றனர்.
'காணிகள் விடுவிக்கப்படாமையால் பாதிக்கப்பட்ட மக்கள் பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். பிரதேச செயலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக இராணுவத் தளபதிக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட உள்ளது" என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (த-7)

## விசாரணை...

டப்பட்ட அறிக்கையை சாதாரணமான விடயமாகவே கருதுகின்றேன் என்று கூறியுள்ளார் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா.
வவுனியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
ஓய்வு பெற்ற நீதிபதிகளான எஸ்.தியாகேந்திரன், எஸ்.பரமராஜா மற்றும் முன்னாள் மாவட்ட செயலர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் வட மாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிட்டுள்ளனர்.
வட மாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் கல்வி அமைச்சர் த. குருகுலராசா ஆகியோர் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட வேண்டும் என விசாரணைக்குழு பரிந்துரை செய்திருந்தது.
வட மாகாண அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் 90 வீதமானவை மாகாண சபை உறுப்பினர்களாலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. (ற)

## புலி...

வரவேற்பு பினாங்கில் இன்று நடைபெறுகின்றது. அதில் பங்கேற்க விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று நேற்றுக் காலை மலேசியாவின் கோலாலம்பூர் வானூர்தி நிலையத்தை சென்றடைந்தார் வைகோ.
குடிவரவுச் சோதனையில் 'நீங்கள் இலங்கையில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்தவர். மலேசியாவுக்கு ஆபத்தான நபர் பட்டியலில் உங்கள் பெயர் உள்ளது. எனவே மலேசிய நாட்டுக்குள் நுழைவதற்கு உங்களுக்குத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது' என்று தெரிவித்து அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று இந்திய மற்றும் மலேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
மலேசியாவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டதைக் கண்டித்து சென்னையில் உள்ள மலேசியத் தூதரகத்தின் முன் ம.தி.மு.கவினர் நேற்று மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-ம)

## ஜெனிவா...

அறிக்கை குறித்தே விவாதிக்கப்படவுள்ளது.
இலங்கை அரசின் அழைப்பின் பேரில், நீதிபதிகள், மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளராக இருந்த மோனிகா பின்ரோ கடந்த 2016 ஏப்ரல் 29ஆம் திகதி முதல் மே 7ஆம் திகதி வரை, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு ஆய்வுகளைச் செய்திருந்தார்.
இது தொடர்பான அறிக்கையை, நீதிபதிகள், மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான தற்போதைய ஐ.நா சிறப்பு அறிக்கையாளர், டியேகோ கார்சியா சயன் திங்கட்கிழமை சபையில் சமர்ப்பிப்பார். (த)

## இடர்களில்...

நாடாளு மன்றத்தில் வலியுறுத்தின.
அடைமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவால் இலங்கையில் பெரும் இழப்புகள் ஏற்பட்டன. இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜே.வி.பி., பொது எதிரணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வலியுறுத்தலை விடுத்தனர்.
பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி,
"இயற்கை இடரின்போது அரச இயந்திரம் முறையாகச் செயற்படவில்லை. இருப்பினும் கடும் சிரமங்களுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அரச அதிகாரிகள், படையினர் ஆகியோரைப் பாராட்டியாக வேண்டும்.
இந்த நிலையில், மீண்டுமொரு இடர் ஏற்பட்டால்கூட அதை எதிர்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் அரசிடம் இருக்கின்றனவா?
முன்னெச்சரிக்கை விடுக்கும், முன்கூட்டியே மக்களை இடர் பிரதேசங்களில் இருந்து அகற்றும் திட்டங்கள், ஏற்பாடுகள் எம்மிடம் இருந்திருந்தால் உயிரிழப்புகள் மற்றும் சேதங்களைக் குறைத்திருக்கலாம்.
இடர் முகாமைத்துவம் என்று ஒன்று இருப்பது இடரொன்று இடம்பெற்ற பின்னர் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒன்றா என்பதே இங்கு கேள்வியாக இருக்கிறது.
இடர் இடம்பெறுவதற்கு முன்னர் அது பற்றி எச்சரிக்கை முன்னறிவித்தல் விடுத்து மக்களைக் காப்பாற்றிச் சேதங்களை குறைக்கும் வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படவேண்டும்" என்றார்.
ஜே.வி.பியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸவும் இதையே வலியுறுத்தினார்.
அதேவேளை, அரச இயந்திரத்தில் நிலவும் குறைகளைச் சுட்டிக்காட்டிய மகிந்த அணியான பொது எதிரணி உறுப்பினர்கள், இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்குரிய உரிய திட்டம் இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர். (த)

## திரேசா மே...

நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நேற்று முடிவுகள் படிப்படியாக வெளியாகின. எந்தக் கட்சியும் ஏக ஆதிக்க வரையறையான 326 இடங்களைப் பெறவில்லை. எனினும் கென்சர்வேடிவ் கட்சி 318 இடங்களில் வெற்றி பெற்று முன்னிலை பெற்றது.
பிரிட்டனின் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்றது. கென்சர்வேடிவ் கட்சி ஆட்சியைப் பிடித்தது. இதன் பதவிக்காலம் எதிர்வரும் 2020ஆம் ஆண்டிலேயே முடிவுக்கு வருகிறது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்வது தொடர்பிலான விவகாரத்தில் தமது பெரும்பான்மையை நிரூபிக்க முன்னதாகவே தேர்தலை நடத்த அந்த நாட்டின் தலைமை அமைச்சர் திரேசா மே திட்டமிட்டார். இதன் அடிப்படையிலேயே இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது.
650 இடங்களுக்கு வாக்குப் பதிவு நடத்தப்பட்டது. 4.6 கோடி பேர் வாக்குரிமை பெற்றிருந்தனர். தனித்து ஆட்சியமைக்க 328 இடங்களில் வெற்றிபெற வேண்டும். ஆனால் கென்சர்வேடிவ் கட்சியால் 318 இடங்களையே கைப்பற்ற இயன்றது. பிரிட்டனின் இரண்டாவது பெரிய கட்சியான தொழிலாளர் கட்சி 26[illegible] இடங்களில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. ஸ்கொட்டிஸ் தேசிய கட்சி 35 இடங்களில் ஆதிக்கம் செலுத்தியது. ஏனைய கட்சிகள் 36 இடங்களைக் கைப்பற்றின.
தனிப்பெரும்பான்மை கிடைக்காததை அடுத்து, கென்சர்வேடிவ் கட்சி ஆட்சியமைக்க மேலும் 10 வேட்பாளர்களின் ஆதரவு வேண்டும் என்ற நிலை இருந்தது. இதனால் கென்சர்வேடிவ் கட்சி ஜனநாயக ஒன்றியக் கட்சியை தன்னுடன் இணைத்து ஆட்சியமைக்க பிரிட்டன் ராணி எலிசபெத்திடம் அனுமதி கேட்டது. ராணியும் அனுமதி வழங்கினார். (ம)

## மைத்திரியை...

திருக்கவேண்டும். அதனுடன் இணைந்து கூட்டாட்சி அமைத்திருக்கக்கூடாது. அவ்வாறு செய்ததால் நன்மை ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான். இதனால்தான் எம்மால் மைத்திரியின் தலைமைத்துவத்தை ஏற்று அவருடன் இணைந்து செயலாற்ற முடியாமல் உள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது அதிக ஈர்ப்புக் கொண்டவன். அந்தக் கட்சியைப் பலவீனமடையச் செய்வதற்காக நான் மகிந்த தரப்புடன் இணையவில்லை. ஐக்கிய தேசிய கட்சியுடன் சுதந்திரக் கட்சி இணைந்ததால் அந்தக் கட்சியை அழிவில் இருந்து பாதுகாப்பதற்காகவே நான் மகிந்த அணியில் இணைந்தேன்.
ஐக்கியதேசியக் கட்சியுடன் சுதந்திரக் கட்சி இணைந்து ஆட்சி அமைத்தமையானது சுதந்திரக் கட்சியின் அழிவுக்கு வழிவகுத்துவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையுடன் ஒருபோதும் சுதந்திரக் கட்சியின் கொள்கை ஒத்துப் போகாது. அவ்வாறு ஒத்துப் போனால் சுதந்திரக் கட்சி அழிந்துவிடும்.
நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களைப் பெற்றதும் அந்தக் கட்சியை தனித்து ஆட்சி அமைப்பதற்கு அரச தலைவர் அனுமதித்திருக்க வேண்டும். அதனுடன் இணைந்து கூட்டாட்சி அமைந்திருக்கக்கூடாது. அவ்வாறு செய்ததால் நன்மை ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான்.
ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கப் போவதில்லை என்று சுதந்திரக் கட்சியினர் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் தலதா மாளிகையில் வைத்துக் கூறி விட்டுப் பின்னர் மாறிவிட்டனர். இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கு ஏற்ப மைத்திரி சுதந்திரக் கட்சியை நிர்வகிக்கின்றார். அரச தலைவர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து இவ்வாறான மோசமான பயணத்தில் ஈடுபட்டிருப்பதால்தான் எம்மால் மைத்திரியின் தலைமைத்துவத்தை ஏற்று அவருடன் இணைந்து செயற்பட முடியாமல் உள்ளது. அவரது இந்தப் பயணம் தொடரும் வரை எமது இணைவு சாத்தியமே இல்லை என்றார். (த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துக் கல்லூரி மத்தியை வீழ்த்தியது




யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 15 வயது ஆண்கள் பிரிவு ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 28:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி. அந்த அணி தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்து முடிவில் 54:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## இளநிலைப் பிரிவு கூடைப்பந்தாட்டம்; இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாண மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன.
உடுவில் மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் 13 வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில். உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி மோதவுள்ளது வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின். கூடைப்பந்தாட்டத் திடலில் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் 15 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் 20 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் அணி மோதவுள்ளது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் 17 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்து கல்லூரி அணிமோதவுள்ளது.
கொக்குவில் இந்து கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 13 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்து கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## பல்கலைகளின் பளுதூக்கல் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 10
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான பளுதூக்கல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாளை நடைபெறவுள்ளது.
காலை 8 மணி தொடக்கம், மாலை வரை இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. 14 பல்கலைக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினரா்க யாழ்ப்பாணப் பல்கலைக் கழத்தின் துணை வேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## நெல்லியடி மத்திய கல்லூரி வெண்கலம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு துடுப்பாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.
ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குளம் மகா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிருந்தா 14 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் பிரியவர்ணா 4 இலக்குகளையும். அபிதா, கீர்த்தி, யசோதா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது. பிரியவர்ணா 25 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். (ம-422)



## சதுரங்கம் இன்று

கரணவாய், ஜூன் 10
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுக்கள் வரிசையில் ஆண்களுக்கான சதுரங்கத் தொடர், கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை என இரு தினங்கள் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 17 வயது மற்றும் 20 வயதுப் பிரிவுகளைச்சேர்ந்த அணிகள் பங்குபற்றவுள்ளன. (ம-108)




## வித்தியானந்தாவை வென்றது ஸ்ரான்லி

யாழ்ப்பாணம், ஜூன் 10
முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கும், ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் 155 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஸ்ரான்லிக் கல்லூரி அணி.
முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயற் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்ரான்லிக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 49.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. விஸ்ணுகாந் 39 ஓட்டங்களையும், டிலக்சன் 39 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் சஜீவன் 3 இலக்குளையும், மதுசன் தவின்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
220 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வித்தியானந்தக் கல்லூரி அணி 64 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் 155 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஸ்ரான்லிக் கல்லூரி அணி. பந்துவீச்சில் பிரசாந் 6 இலக்குகளையும், விதுசன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
ஆட்ட நாயகன், மற்றும் சிறந்த பந்து வீச்சாளராக ஸ்ரான்லிக் கல்லூரி அணியின் பிரசாந் தெரிவானர். சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்ரான்லியின் டிலக்சன், சகலதுறை வீரராக அதே அணியின் விதுசன் ஆகியோர் தெரிவாகினர். சிறந்த களத்தடுப்பாளராக முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி அணியின் வீரன் பவிசன் தெரிவானர். (ம-23)



## சிறிபதி அணி சம்பியன்

கிளிநொச்சி, ஜூன் 10
பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத்தில் சம்பியனாகியது சிறிபதி விளையாட்டுக் ககழகம் அண்மையில் இந்த இறுதியாட்டம் நடந்தது. சிறிபதி அணியை எதிர்த்து பூத்வராயர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிபதி அணி 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. சாந்தீபன் 42 ஓட்டங்களைப் பெற்றார்.
90 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பூதவராயர் அணி 68 ஓட்டங்களை மட்டுமே பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் லக்சன் மற்றும் அனுரதன் ஆகியோர்தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், ஜூன் 10

**சரஸ்வதியின் கரப்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமுக நிலைய98ஆம்ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தத்திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் குறித்த கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இந்தத் தொடரில் யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னணிக் கழகங்களான ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம், இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் மற்றும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம், மன்னார் மாவட்ட அணி, கிளிநொச்சி மாவட்ட அணி, இலங்கை இராணுவ சிங்க றெஜிமன்ட் அணி, கொடிகாமம் இராணுவ அணி என்பன மோதவுள்ளன.

**நண்பர்களின் கால்பந்தாட்டம்**

வடமராட்சி [illegible]ந்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்நடத்தும்கால்பந்தாட்டத்தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிமாட்போய்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-108)

# வங்கத்துப் புலிகளின் வேட்டையில் சுருண்டு மடிந்தது நியூசிலாந்து

## சகிப் அல் ஹசன், மகமதுல்லா சதம் விளாசி அணியை மீட்டனர்



மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தை வெற்றிபெற்றது பங்களாதேஷ். இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி அரையிறுதிக்கான வாய்ப்பைத் தக்கவைக்க நியூசிலாந்து அணி தொடரை விட்டு வெளியேறியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 8 இலக்குகள் இழப்புக்கு 265 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெய்லர் 63 ஓட்டங்களையும், வில்லியம்சன் 57 ஓட்டங்களையும், புறூம் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொஸ்டக் கொசைன் 3 இலக்குகளையும், தஸ்கின் அகமட் 2 இலக்குகளையும், ரகுமான், ரூபல் கொசைன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்ப வீரர் இக்பால் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். சர்கர் 3, சபிர் ரகுமான் 8, ரகிம் 14 என சொற்ப ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப 33 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது அந்த அணி. எனினும் சகிப் அல் ஹசன், மகமதுல்லா இணை சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தியது. போல்ட், சவுத்தி, மில்னி என்று மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சுக் கூட்டணியைக் கொண்ட நியூசிலாந்தால் இலக்குச்சரிவை ஏற்படுத்த இயலவில்லை. இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இருவரும் அரைச்சதம் கடந்து படிப்படியாக அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றனர். சதம் கடந்தார் சகிப் அல் ஹசன். அவர் 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த இலக்குச் சரிவு ஏற்பட்டபோது பங்களாதேஷின் வெற்றிக்கு 22 பந்துகளில் 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. மகமதுல்லாவும் சதம் கடந்தார். முடிவில் 5 இலக்குகளால் வென்று அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது பங்களாதேஷ். (ம)



# அணியுடன் இணைந்தார் ரொனால்டோ

ரியல் மட்ரிட்டின் ஆட்டங்களை முடித்துக் கொண்டு தனது தேசிய அணியான போர்த்துக்கல்லுடன் இணைந்தார் கிறிஸ்ரியானோ ரொனால்டோ.

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் சம்பியனானது. மட்ரிட்டின் நட்சத்திர வீரரான ரொனால்டோ அந்தக் கழகத்துடன் இணைந்திருந்ததால் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்களுக்கான தயார்ப்படுத்தல் முகாமில் அவர் போர்த்துக்கல் அணியுடன் இணைய முடியவில்லை. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் அணியில் இணைந்தார். (ம)

# இங்கிலாந்து தவானின் களம்

இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்படுகிறார்களோ இல்லையோ தவான் வரிசையாக அடித்து நொறுக்குகிறார். இங்கிலாந்தில் அதிக சராசரி வைத்துள்ள துடுப்பாட்ட வீரரும் தவானே.

கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற மினி உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி கிண்ணம் வெல்ல தவான் முக்கிய காரணமாக இருந்தார். நடைபெற்றுவரும் தொடரிலும் அவர் தொடர்ந்து மிகச் சிறப்பாகச் செயற்படுகிறார்.

இங்கிலாந்து ஆடுகளங்களில் அதிக சராசரி வைத்துள்ளவரும் தவானே. இதன்படி 11 ஆட்டங்களில் விளையாடியுள்ள தவான் 711 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி 79.00 ஆக உள்ளது. மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் விவ் ரிச்சட்ஸ் 31 ஆட்டங்களில் விளையாடி ஆயிரத்து 345 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 64.04 என்று உள்ளது. இது இரண்டாவது சிறந்த சராசரி. நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் 13 ஆட்டங்களில் 758 ஓட்டங்களைப் பெற்றள்ளார். சராசரி 63.16 என்றுள்ளது. இது மூன்றாவது அதிகபட்சம். (ம)




# நலம் பெறுவாரா குசல் பெரேரா

மினி உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் அடுத்த லீக் ஆட்டத்தில் நட்சத்திர வீரர் குசல் ஜெனித் பெரேரா களமிறங்கல் சந்தேகத்துக்குள்ளாகுமா என்ற அச்சம் இலங்கை ரசிகர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற குசல் பெரேராவின் பங்கு முக்கிய காரணமாக இருந்தது. அவர் அதிரடியாக விளையாடி 44 பந்துகளில் 47 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தசைப்பிடிப்புக் காரணமாக வெளியேறினார். இதனால் அடுத்த ஆட்டத்தில் அவரது பங்குபற்றல் சந்தேகத்துக்குள்ளான ஒன்றாக மாறியுள்ளது. தரங்கவுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் குசல் பெரேரா தசைப்பிடிப்புக்கு உள்ளாகியமை இலங்கை அணிக்குப் பின்னடைவே. (ம)



# போபன்னா - கபிரியேலா இணை பிரான்ஸ் தொடரில் சம்பியன்



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான பிரான்ஸ் தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் போபன்னா (இந்தியா), கபிரியேலா இணை கிண்ணம் வென்றது.

பாரிஸ் நகரில் இந்த ஆட்டம் நடைபெற்றது. போபன்னா - கபிரியேலா இணையை எதிர்த்து ரொபேர்டா (கொலம்பியா), அன்னலெனா (ஜேர்மனி) இணையை எதிர் கொண்டது. முதல் செற்றை 2:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போபன்னா இணை இழந்தது. இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது போபன்னா இணை. அந்த இணை மூன்றாவது செற்றை 12:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி சம்பியனானது. (ம)

# கால்பந்தாட்டம்

கரணவாய், ஜூன் 10



வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் நா.நவரத்தினராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியில் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. அரையிறுதியாட்டம் மற்றும் இறுதியாட்டம் என்பன யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு கல்வி கருத்தரங்கு
குறுகிய காலத்தில் கனடா செல்ல
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
நாள்-11-06-2017
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்

## வேலையாள்கள் தேவை

பைண்டிங் வேலை தெரிந்தவர்கள் 12.06.2017 திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பின்வரும் முகவரியில் நேரில் சமுகம் தரவும்.

E.S Printers
இல.359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# யூனியன் - மானிப்பாய் இந்து 'நீலங்களின் சமர்' ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 'நீலங்களின் சமர்' துடுப்பாட்டம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இன்றும், நாளையும் என இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை வங்கி ஓய்வுநிலை முகாமையாளர் சி.விகனராஜாவும், சிறப்பு விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி யின் முன்னாள் அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் மற்றும் மதிப்புறு விருந்தினராக 'சங்கீதா' முகவரக நிறைவேற்றுப்பணிப்பாளர் ரி.ரூபசங்கர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 572 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 09.06.2017
வெற்றி இலக்கங்கள்
17 30 47 62 V
ரூ. 28,646,091/-

சீட்டிழுப்பு வாரம்: 147
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 09.06.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 89,573,448/-
U 33 38 54 72
Web: www.dlb.lk

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

காலம் :- 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி
இடம் :- நீர்வேலி சவாரித்திடல் நீர்வேலி

எமது சனசமூக நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக இந்த மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நடத்த இருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் பரிசு - தங்கப்பதக்கம்
போட்டி ஏற்பாட்டாளர்கள் :- தலைமகள் சனசமூக நிலையம்.

## VACANCY

சர்வதேச தொலைக்காட்சி நிறுவனம் (IBC - தமிழ்)

1. நிகழ்ச்சித் தொகுப்பாளர் (பெண்கள்)
2. தொலைக்காட்சி தொடர்நாடக நடிகர்கள் (பெண்கள் மற்றும் வயதானவர்கள்)
3. மொழிபெயர்ப்பாளர்கள் (தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ்)
4. படத் தொகுப்பாளர்கள் (Video Editors) - Adobe Premier
5. வரவேற்பாளர் (பெண்கள்)

தகைமைகள் - வரவேற்பாளருக்குரியது
- கணினி அறிவு
- மொழித் திறன் (தமிழ், ஆங்கிலம்)
- முகாமைத்துவ திறன்

விண்ணப்ப முடிவுதிகதி - 16.06.2017 இற்கு முன் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ, தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்
021 225 6877/ 021 221 6964

## Study MBBS

Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO

* Raiga Strands University - Latvia
* IMU - Malaysia
* Manipal University - Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* China Medical University - China
* Gomel State Medical University - Belarus



Admission Open for the Year 2017

iCS Study Medicine Abroad
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
107, B-1/1 Galle Road, Colombo 06.
011 4343322 , 021 4926222
Appointments
077 3013060

## விற்பனையாகிறது!

Lanka win

G.C.E O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கடந்தகால வினாவிடை மாதிரி வினாத்தாள்கள் (முழுமையான புள்ளித்திட்டத்துடன் விடைகள்) அனைத்து மாணவர்களும் வாங்கக்கூடிய குறைந்த விலையில் நாடெங்கிலும் பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும்.

(மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு)

விற்பனையாளர்:
லங்கா புத்தகசாலை
கொழும்பு-12

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C 2169) (10)

Rotary

## யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்
## ROTARY CLUB OF JAFFNA

கண்புரை சத்திர சிகிச்சை (cataract surgery) மேற்கொண்டவர்களுக்கான உதவித் திட்டம்

கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொண்ட நோயாளர்களுக்கான உதவித்திட்டம் ஒன்று யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மருந்துகள் மற்றும் ஆரோக்கிய உணவுகள் கொள்வனவு செய்வதற்கான பண உதவி வழங்கப்படும்.

பதிவுசெய்யும் முதல் 200 பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் உதவி பெற விரும்புவர்கள்,

வடக்கு மாகாணத்தின் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

மூன்று மாத காலப் பகுதியினுள் சத்திர சகிச்சை அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

உதவித் தொகையைப் பெற வரும் போது, வைத்தியசாலையில் வழங்கப்பட்ட நோய் நிருணய அட்டை மற்றும், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் அவற்றின் பிரதிகளையும் எடுத்து வருதல் வேண்டும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் 16-06-2017

தொடர்புகளுக்கு: 021 492 7780
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

உ
சிவமயம்

## திறப்புவிழா அழைப்பிதழ்

நிகழும் மங்கலகரமான ஹேவிளம்பி வருடம் வைகாசித்திங்கள் 27ஆம் நாள் (10.06.2017) சனிக்கிழமை காலை 11.00 மணியிலிருந்து 12.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எம்மால் Jaffna Ad Mart என்ற விளம்பர நிறுவனம் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். எம்மால் உங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான விளம்பரத்தேவைகளை நவீனமுறையில் பூர்த்திசெய்யமுடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.

Jaffna
AD MART

- Bill Boards
- Neon Signs
- Pylon Signs
- Fascia Signs
- Fiber glass Signs
- Wooden Signs
- Hoardings
- Along with neon
- Trivisions
- LED Panels
- Illuminated signs
- Slim Light boxes & EL panels
- Edge light signs
- Lenticular signs
- 3D auto Flipping light box
- Interior banding
- Rotating light box
- Stainless steel & Brass signs




551,K.K.S. Road, Jaffna. (Near Manohara Junction)
jaffnaadmart@gmail.com
077 482 1912
021 722 3313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.